
ஜெயந்தி
வந்தாள்
லக்ஷ்மி
பூங்கொடி பதிப்பகம்

ஜெயந்தி
வந்தாள்
லக்ஷ்மி
பூங்கொடி பதிப்பகம்

## நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர் : ஜெயந்தி வந்தாள்

ஆசிரியர் : லக்ஷ்மி

நூலின் பொருள் : நாவல்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
மயிலாப்பூர், சென்னை-4.

நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

அச்செழுத்து : 12 புள்ளிகள்

வெளியிட்ட ஆண்டு : முதற்பதிப்பு டிசம்பர் 1979
2ஆம் பதிப்பு நவம்பர் 1981
3ஆம் பதிப்பு டிசம்பர் 1986
4ஆம் பதிப்பு ஜூலை 1994
5ஆம் பதிப்பு ஏப்ரல் 1998
6ஆம் பதிப்பு மே 2010

நூல் அளவு : கிரவுன் 1 × 8

பக்கங்கள் : 128

பயன்படுத்திய தாள் : 11.6 கி.கி. வெள்ளைத்தாள்

ஒளி அச்சு : செங்கமலம் எண்டர்பிரைஸஸ்
சென்னை 600 004

அச்சிட்டோர் : அமர் ஆப்செட் பிரிண்டர்ஸ்

**விலை: ரூ. 50.00**


## பதிப்புரை

மேலை நாடுகளில் அவ்வப்போது கிளம்பும் நாகரிக அலைகளை அப்படியே தழுவிக் கொண்டு இங்கு இப்போது நவீனங்கள் பிறந்து கொண டிருக்கின்றன.

அவை காலகாலமாகப் போற்றிப் பாதுகாக்கப் பட்டு வரும் இந்திய மண்ணிற்கே உரிய மனிதப் பண்புகளை—நாகரிகக் கோட்பாடுகளை சிதைப் பவையாக உள்ளன.

இந்த நேரத்தில் இந்திய மண்ணிற்குரிய தனித் தன்மையை, குறிப்பாக இந்தியப் பெண்களின் பாரம்பரியப் பாண்பாட்டின் பெருமையை உயர்த்து கின்ற வகையில் அமரர் ''லக்ஷ்மி'' அவர்கள் ஏராளமான நூல்களை எழுதி வந்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று ''ஜெயந்தி வந்தாள்'' என்ற இந்த நாவல்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

"லக்ஷ்மி" எழுதிய பூங்கொடி வெளியீடுகள் சில...

| | |
|---|---|
| அழகின் ஆராதனை | 80 |
| அவள் தாயாகிறாள் | 35 |
| அசோகமரம் பூக்கவில்லை | 55 |
| அடுத்த வீடு | 175 |
| அரக்குமாளிகை | 180 |
| அதிசய ராகம் | 90 |
| அவளுக்கென்று ஒரு இடம் | 85 |
| அவள் ஒரு தென்றல் | 75 |
| இவளா என் மகள் | 65 |
| இரண்டு பெண்கள் | 55 |
| இரண்டாவது தேனிலவு | 55 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 105 |
| இருளில் தொலைந்த உண்மை | 85 |
| இன்றும் நாளையும் | 90 |
| உறவுகள் பிரிவதில்லை | 40 |
| உயர்வு | 80 |
| உறவின் குரல் | 65 |
| ஊன்றுகோல் | 75 |
| என் வீடு | 55 |
| என் மனைவி | 85 |
| ஒரு காவிரியைப்போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 150 |
| ஒரு சிவப்பு பச்சையாகிறது | 110 |
| கடைசிவரை | 55 |
| கங்கையும் வந்தாள் | 115 |
| கதவு திறந்தால்... | 115 |
| கழுத்தில் விழுந்த மாலை | 70 |
| கணவன் அமைவதெல்லாம் | 85 |
| காளியின் கண்கள் | 75 |
| கூறாமல் சன்னியாசம் | 60 |
| கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி | 50 |
| கோடை மேகங்கள் | 90 |


# ஜெயந்தி வந்தாள்

## 1

மஞ்சள் வெயில் இன்னமும் மறையவில்லை.

பஸ் நிறுத்தத்தில் இருந்து அவள் வேகமாக நடந்தாள்.

ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்த நெருக்கமான தெருச் சந்து உள்ளே புகுந்தவள் பின்னும் அதிவேகமாக நடந்தாள்.

அவளையும் அறியாத ஒரு பரபரப்பு. நெஞ்சிலே இன்னமும் அந்தப் படபடப்பு அடங்கவே இல்லை. காது ஓரமாக வழிந்த வியர்வையை கைக்குட்டையால் துடைத்த படி சந்திற்குள் நுழைந்து விட்டாள். தெரு முனையில் குப்பைத் தொட்டி அவளை அலங்காரமாக வரவேற்றது.

அந்தச் சந்தின் மூன்றாவதான அந்த ஓட்டு வில்லை வீடு மிகவும் பழைய கட்டடம். அங்குதான் இவர்கள் வாசம். வேலை தேடிக் கொண்டு அங்கு குடியேறி பல மாதம் ஆகியும், அக்கம் பக்கத்தாரை நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. தான் உண்டு தன் வேலை உண்டு என்ற சுபாவம். தனியாக இருந்த அந்தச் சிறிய வீடு, குறைந்த வாடகைக்குக் கிடைத்தது. அவளது பல துர்ப்பாக்கியங்களுக்கிடையே ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சி என்றுதான் கொள்ள வேண்டும்.

வாயில் கதவு திறந்திருந்தது. அவள் தந்தை தண்ட பாணிக்குக் கொஞ்ச காலமாகவே முட்டி நோவு—தாங்க முடியாத வேதனையில் தவித்தார். சட்டென்று எழுந்து

நடக்க முடியாது. மகள் வேலையில் இருந்து திரும்பி வரும் நேரம் என்று ஓர் உத்தேசமாக, அவர் மாலை நேரங்களில் கதவைத் திறந்து வைத்து விடுவது வழக்கம்.

குடையை மடக்கிக் கொண்டு மெல்ல படிகளில் ஏறி உள் நடைக்கு வந்தாள். கூடத்தில் அப்பாவின் பேச்சுக் குரல் பலமாகக் கேட்டது. அப்பாவின் நண்பர் ரத்தினம் வந்திருக்கிறார் என்றும் விளங்கி விட்டது.

பேச்சின் இடையே அடிபட்ட அந்தப் பெயர்—அவளை ஒரு கணம் அதிரச் செய்து விட்டது.

மெல்ல ஓசையின்றி, கால் செருப்புக்களைக் கழற்றி விட்டு, மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒட்டுக் கேட்டாள்.

''இப்படியே நீயும் விட்டுட்டா அந்தப் பொண்ணு கதி என்னாகிறது? நல்லா யோசிச்சுப் பாத்தியா?'' ரத்தினம் அதட்டினார்.

''ராவும் பகலும் இதே யோசனைதான். என் மனைவி இறந்த பிறகு மனசிலே ஒரு திகில். நானும் திடீர்னு போயிட்டா...ஜெயந்தி தன்னந்தனியா என்ன செய்யும்... இப்படி நினைச்சுக்கிட்டா அடிக்கடி தூக்கம் புடிக்காம எழுந்து உக்காருகிறேன். நானே புலம்பிக்கறேன். நான் படற வேதனையை அந்த ஆண்டவன்தான் அறிவார்...'' அப்பாவின் குரல் தழுதழுத்தது.

''பெத்த தகப்பன் மனசு என்ன பாடு படும்னு என்னால் புரிஞ்சிக்க முடியும். நானும் பிள்ளை குட்டிக்காரன்தான். ஆனாலும், கதிரேசனுக்கு இத்தனை கல் மனசு கூடாதப்பா. அந்தப் பொண்ணு மேல என்ன தப்பைக் கண்டு இப்படி ஒதுக்கி வைக்கணும்? அதையாச்சும் தெரிந்து கொண்டீங்களா?''

''அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீங்க. ஒரு வருஷமா, ரெண்டு வருஷமா? ஆறு வருஷம். என் பொண்ணுங் கறதுக்காக நான் பெருமை பேசலை. பாவம்! குழந்தை ஜெயந்தி ரொம்பப் பொறுமைசாலி. இன்னமும் அவள் நம்பிக்கை இழக்கவில்லை'' என்று விம்மினார் இலேசாக.



''தண்டபாணி! மனசை அலட்டிக்காதே. நான் இருக்கேன். என்னை நம்பு. ஏதாவது உதவி தேவைனா என் ஆபீசுக்குப் போன் செய்து விடு. ராத்திரி வேளையானா என் பக்கத்து வீட்டில் போன் இருக்குது. நம்பர் தர்றேன். அவங்களைக் கூப்பிட்டா அவங்க கட்டாயமாக என்னைக் கூப்பிடுவாங்க.''

''நன்றி! உன்னைப் போல நல்ல நண்பர்களை நினைச்சுத் தான் நானும் ஜெயந்தியும் துணிவா வேலூரை விட்டு, இவ்வளவு பெரிய சென்னைப் பட்டணத்துக்கு வந்துட்டோம் —அங்க மட்டும் என்ன வச்சுக் கிடக்குது? ஏழையாகவே எப்பவும் பிறக்கப்படாது. இந்தத் தண்டபாணி மட்டும் ஒரு பணக்காரனா இருந்திருந்தா இந்தப் பயல் கதிரேசன் இப்படிச் செய்திருப்பனா? சலாம் போட்டுக்கிட்டு என் மகளை வச்சுக் குடித்தனம் செய்திருப்பான்'' ஆத்திரத்துடன் குமுறினார்.

''கவலைப்படாதே. இப்படியே காலம் போயிடாது. இப்பவும் ஒண்ணும் மோசம் போயிடலை. நாம்ப நல்லா யோசிச்சு ஏதாச்சும் அந்தக் குழந்தைக்கு ஒரு முடிவு செய்வோம்.''

''வேற முடிவு ஏதும் இல்லே. ஒண்ணு அவனோட மறுபடியும் அதுக்கு வாழ்க்கை. இல்லே...இப்படியே தனி மரமா ஒதுங்கிடறதுன்னு ஜெயந்தியே முடிவு செய்திட்டாள். அவள் ரொம்பப் பிடிவாதக்காரி. வைராக்கியம் அதிகம். நீயே பார்த்திருக்கியே. என் குழந்தைக்கு, அழகுக்கு ஏதாச்சும் குறைவா? அறிவில்லையா? வீணை கூட நல்லா வாசிக்குமே. சமையல் நல்லா செய்வாள். நாலும் தெரிஞ்சவள். என்ன குத்தம்னு அவளுக்கு இப்படி ஒரு தண்டனை?''

''நீ அவனை நேரே கேட்கலையா?''

''கேட்டேனே. முகம் கொடுத்துப் பேசினால்தானே. அந்தம்மாள், அதுதான் ஜெயந்தியின் மாமியார், அவங்களையும் கெஞ்சிக் கேட்டேன். எனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு அவங்க விக்கி விக்கி அழுதாங்க. என் மகளைக் கூப்பிட்டுக் கேட்டேன். என் பெண்ஜாதி எத்தனை முறை கேட்டிருப்பாள். ஜெயந்தி பதிலுக்கு அழுதாளே தவிர, விளக்கமே சொல்லலை. எல்லாருமே சேர்ந்து என்னை ஒரேயடியா குழியை வெட்டிப் புதைச்சுட்டாங்களே.''

''தண்டபாணி! பழசை நினைச்சு வருத்தப்பட்டு என்ன பயன்? மேலே என்ன செய்யறதுன்னுதான் இப்ப யோசிக்கணும்.''

''அதான் உன்னை வரச் சொல்லி ஒரு கார்டு போட்டேன். ரத்தினம்! என் பொண்ணு வர்ற நேரம். அதுக்குள்ளே சொல்லிடறேன். அந்தப் பாவி கதிரேசன் இப்ப இந்த ஊருக்கே வேலையை மாத்திகிட்டு வந்திருக்கான். இத்தனை நாளும் பம்பாயில் கண் காணாம இருந்து ஒழியட்டும்னு இருந்தோம். இப்ப இங்கேயே வந்திருக்கான். பெரிய பதவி, கார், வீடுன்னு எக்கச்சக்கமான வசதி கம்பெனியில் கொடுத்திருக்காங்களாம். இவன்தான் கம்பெனி கிளை ஸ்தாபனத் தலைவனாம். கை நிறைய சம்பளம். முன்னை விட நல்லா கொழுத்து நல்லாவே இருக்கான்.''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''நான்தான் அவனை அந்தச் சூப்பர் மார்க்கெட்டிலே ஒரு வாட்டி பார்த்திட்டேனே. அவன் பார்க்கலை. அப்புறம் அண்ணா சாலை தபால் நிலையத்திலே...அப்பவும் அவன் என்னைப் பார்க்கலே. மத்தபடி நம்ப கந்தசாமியைத் தெரியுமில்லே. அவன்தான் மத்த விவரங்களைச் சொன்னவன். எங்கேயோ நுங்கம்பாக்கத்திலே பங்களாவாம்...கேட்கவே பிடிக்கலை.''



''அவன் அம்மா எப்படி இருக்காங்களாம்?''

''பம்பாயிலேயே காலமாயிட்டாங்களாம். சம்பந்தி இறந்து போனதைக் கூடப் பாவிப் பயல் எனக்கு ஒரு வரி தெரிவிக்கலே—ஒரேயடியா எங்களைத் தலை முழுகிட்டது போல இருக்கான்.''

''விவாகரத்துன்னு ஏதாவது...''

தண்டபாணி பதறிப் போனார். ''மூச்சு விடப்படாது ஜெயந்தி...ஒப்புக்கலை. நேத்துக்கூட பீட்டர்ஸ் ரோடு பக்கமா அவனைப் பார்த்தேன். என்னைப் பார்த்தும் பார்க்காதது போல போயிட்டானோ, இல்லே பார்க்கவே இல்லையோ தெரியலை. பாரத் அன் கோ பாலீஸ்டர் ஃபைபர்ங்கிற கம்பெனியில்தான் வேலை. அவன் ஆபீஸ்கூட ஆயிரம் விளக்குப் பகுதியில் அமிருதாங்கற அஞ்சு மாடிக் கட்டடத்தில் இருக்கு. எனக்கு எல்லாம் தெரியும். என்ன பயன்? இப்ப எனக்கு என்ன கவலை தெரியுமா?''

''சொல்லு.''

''என் கண்ணிலேயே இதுக்குள்ளாற இரண்டு மூணு தடவை பட்டுட்டானே. ஆபீஸ் போற ஜெயந்தி பார்த்துட்டா துடிச்சுப் போயிடுவாளேன்னு கவலை. ஒரேயடியா பார்க்காம இருக்கிறபோது ஒரு நல்ல நாளு கிழமையில் குழந்தையை நினைச்சா மனசு கலங்கிடும். என் வயிறு எரியும். என் பெண்ஜாதியும் சாகுமட்டும் தன் மகளையே நினைச்சு நினைச்சு அழாத நாளில்லே. உசிரு போகும்போது கூட ஜெயந்திக்கு ஒரு ஏற்பாடு பண்ணுங்க. ஒரு நடையாச்சும் மாப்பிள்ளையைப் பார்த்துக் கடைசியாகக் கேட்டுடுங்கன்னுதான் புலம்பினா...'' அவர் குரல் கரகரத்தது.

நடையில் நின்று கொண்டிருந்த ஜெயந்தி தன் கன்னத் திலே உருண்டோடிய கண்ணீர் திவலையைத் துடைத்துக் கொண்டாள். அவள் கணவன் கதிரேசனை அவளும் பார்த்து விட்டாள் என்ற உண்மை அப்பாவிற்குத் தெரிந்தால்...

அவள் அந்தத் தனியார் வங்கியில் கணக்கராக வேலை யேற்றுக் கொண்டிருந்தாள். அவளது வருவாயை நம்பித் தான் வெல்ல மண்டியில் வேலை பார்த்து வந்த தண்ட பாணி வேலூரை விட்டு மகளுடன் புறப்பட்டு சென்னைக்கு வந்து விட்டார். தன்னந்தனியே அவள் எங்கேனும் ஆஸ்ட லில் தங்கி வேலை பார்த்து வருவதை அவர் விரும்ப வில்லை. தன் கடைசி மூச்சு வரை மகளுக்குத் தாமே துணை யாக இருந்து விட வேண்டும் என்ற ஆதங்கம் அவருக்கு.

அவருக்குப் பின் இருவர் மனதிலும் அந்தக் கேள்வி ஒரு பயங்கரமான எதிர்பார்ப்பாக இருந்தது. தண்டபாணிக்கு தூரத்து உறவினர்கள் இருந்தார்கள். ஜெயந்தியின் வாழ்வு பாழாகிய பின்னர் அவர் தமது உறவு முறைகளிடம் அதிகம் ஒதுங்கி வாழ்ந்தார். பெண்ணைப் பற்றி ஏதாவது கேட்டு அவளைப் புண் செய்து விடுவார்களோ என்ற அச்சம் அவருக்கு.

அன்று காலை வேலைக்குப் புறப்படும்முன்கூட மக ளிடம் சொன்னார். ''நாம் யார் எங்கிருந்து வரோம்னு ஒருத்த ருக்கும் தெரியாமல் இப்படித் தனியாக ஒதுங்கி வாழறது மனசுக்கு நிம்மதியா இருக்கில்லையா?''

''உண்மைதான்'' அவளும் ஒப்புக் கொண்டே வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

இந்தச் சில மாதங்களில் சென்னையில் அவளைத் தெரிந்த வர்கள் எவரும் இல்லை. வங்கியில்கூட அவள் தன்னுடன்



வேலை செய்த மற்ற பெண்களுடன் அதிகமாகத் தொடர்பு வைத்துக் கொண்டதில்லை.

''அவளுக்குக் கல்யாணமாகி விட்டதா. இல்லையா? திருமதி ஜெயந்தி கதிரேசன் என்று விண்ணப்பத் தாளிலே போட்டிருந்ததே. நான் பார்த்தேன். கழுத்திலே தாலிச் சரடு இருக்குதே. அப்படின்னா அந்தக் கதிரேசன்...'' அவளைப் பற்றிக் கிசுகிசுப்பு இருந்தது. ஆனால், எவருக்கும் அவளை நெருங்கி வந்து உண்மையைக் கேட்க அச்சம். அப்படி அவள் முகத்தில் தெரிந்தது ஓர் ஆவேசம். வைராக்கியம்!

அன்று காலை அவள் தன் இருக்கையில் அமர்ந்தபடி கணக்குகளை எழுதிக் கொண்டிருந்தாள். முன்னறையில் இருந்த நீண்ட மேஜைக்குப் பின்னால் ஒரு தட்டச்சு இயந் திரத்தின் முன், வங்கிக்கு வருகிறவர்கள் போகிறவர்கள் கண்களில் படக் கூடிய இடத்தில் அவள் அமர்ந்து இருந் தாள்.

''இந்த வங்கியைக் காலையில் எத்தனை மணிக்குத் திறக்கறாங்க'' அந்தக் குரல்! அவளுக்குத் தூக்கி வாரிப் போட் டது.

மேசைக்குப் பின்புறம் நின்றிருந்த ''டெல்லர்'' ராமு விடம்தான் அந்தக் கேள்வி கேட்கப்பட்டது. அந்தக் குரல்... எத்தனையோ ஆண்டுகளாகக் கேட்காத குரல்தான். ஆனா லும், மறக்கவே முடியாதபடி உள்ளத்தில் புதையுண்டு ஒன்றிப் போன குரல். அவள் மெய் சிலிர்த்துப் போனாள்.

மெல்ல தலையை நிமிர்த்தி, அந்தப் பக்கம் பார்த்தாள். அவனேதான்! சந்தேகமேயில்லை. அந்த முகத்தை அவள் எப்படி மறக்க முடியும்?

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக அவனைப் பார்த்தாள். அவன் அவளைக் கவனிக்கவே இல்லை.

நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது. குளிர் சாதன அறைதான் என்றாலும் திகுதிகுவென உடல் முழுவதும் எரிகிற உணர்வு. நா வறண்டு, வேர்வை நெற்றி மீது அரும்பு கட்டி அவள் அவனை மீண்டும் உற்றுப் பார்த்தாள்.

முன்னை விடச் சற்றுப் பருத்திருந்தான். ஆனால், முன்னைவிட அந்த முகத்தில் பொலிவும் கூடி விட்டிருந் தது. பெரிய பதவியில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தாள். அந்த மகிழ்ச்சியின் களையோ? அல்லது தன் எண்ணங்களின் கலவரத்தை விழுங்கிக் கொண்டாள்.

ஆண்டுகள், அவர்கள் இடையே பிளவை ஏற்படுத்தி இருந்ததே தவிர, மற்றபடி எந்தவிதமான மாற்றமும் அவ னிடமும் தென்படவில்லை. அவனது தோற்றம் எப்போதும் போலவே அதே அரும்பு மீசை, காதோர கிருதா, கழுத்தில் புரளும் முடி என்று இருந்தது. அந்த வெளிர் நீலச் சட்டை கூட அவனுக்கு எத்தனைப் பொருத்தம்?

''காலை எட்டு மணிக்கே திறந்திடுவீங்களா?'' பற்கள் பளிச்சிட ராமுவிடம் கேட்டுக் கொண்டிருந்தான். அவள் மனம் இன்னும் வேகமாக அடித்துக் கொண்டது.

அவன் இந்தப் பக்கம் திரும்பினால்...

அந்த எதிர்பார்ப்பின் சுமையைத் தாளாது அவள் திணறிப் போனாள். கண்கள் கனத்தன. பார்வையில் இருந்து அவன் மறைந்து விட்டது போன்ற பிரமை. கஷ்டப்பட்டுக் கண்ணீரை அடக்கியபடி மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

என்ன ஏமாற்றம்! கையில் 'ஃப்ரீப்' கேசுடன் அவன் வெளியேறி நடந்து கொண்டிருந்தான்.

அவளைப் பார்க்கவில்லையா? அல்லது பார்த்தும் பாராததுபோல் வெறுப்போடு போகிறானா?



விவரிக்க இயலாத துன்ப உணர்வில் அவள் துவண்டு போனாள்.

சட்டென எழுந்து கழிவு அறைக்குச் செல்வது போல் பின்பக்கம் சென்று மறைந்து கொண்டாள். கட்டுப்படுத்த முடியாது வாய்விட்டு விம்மி அழுதாள். பீங்கான் தொட்டி யில் முகத்தைக் கழுவிக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு வந்து மீண்டும் இருக்கையில் அமர்ந்தாள்.

அன்று பகல் அவள் கையோடு கொண்டு சென்ற உப்புமா கொண்ட பிளாஸ்டிக் டப்பாவைத் திறக்கவே இல்லை. உணவு நஞ்சாகக் கசந்தது.

எங்கேயோ மங்கள இசை ஒலிப்பது போன்ற பிரமை. பெரியோர்கள் மலர் தூவி வாழ்த்த அப்போதுதான் அவள் கழுத்திலே அவன் மங்கல நாணை அணிவித்தது போன்ற ஓர் உணர்வு. உடல் சிலிர்க்க, தன் ரவிக்கைக்குள்ளே மறைந்து கிடந்த தாலிச் சரட்டை மெல்ல விரலால் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

கனவு இல்லை உண்மைதான். ஊர், உற்றார், சுற்றம் அறிய அக்னி சாட்சியாக அவளுக்குத் தாலி கட்டிய கணவன் கதிரேசன்தான்.

எத்தனை பாரா முகம்? யாரோ வேற்று மனிதர் போல் ...இதென்ன கொடுமை? யாரிடம் சொல்லி அவள் அழ முடியும்? பெற்றவள்கூடப் போய் விட்டாளே?

கண்ணீர் முட்டியது. மனதை அடக்கியபடி பித்தம் பிடித்தவள்போல் வெகு நேரம் வாயில் வழியே வெளியே தெரிந்த சாலையை வெறித்துக் கொண்டிருந்தாள்.

''ஆமாம்! அவள் வாழ்க்கைக்கு முடிவுதான் என்ன?''

அன்று பகல் முழுவதும் அதே கேள்வி.

பிரித்த கோப்புகளில் இருந்த எழுத்துக்கள் அவள் முன் நடனமாடின. மூளை வேலை செய்ய மறுத்தது. நேரம் நீண்டு கனத்தது. நெஞ்சு வேதனையில் விரிந்தது.

வங்கி மூடும் நேரம் நெருங்கியது. கோப்புகளை மூடி விட்டு தட்டெழுத்து இயந்திரம் மீது பிளாஸ்டிக் உறையைப் போர்த்தினாள். தோளில் பையை மாட்டிக்கொண்டு கிளம்பி விட்டாள்.

''அம்மா! நீங்க காப்பிகூடச் சாப்பிடலையே?'' வங்கியின் பையன் நினைவுபடுத்தினான். மாலை மூன்று மணி அளவில் அவன் யாவருக்கும் கொண்டு வந்து வைத்து விட்டுப் போகும் அந்தக் காப்பிக் கோப்பை, அவளது இருக்கை முன் காட்சியளித்தது.

''ரொம்ப வேலை. கவனிக்கவே இல்லை'' சமாளித்து விட்டு அவள் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள். தரையில் கால் பாவாத மாதிரி ஒரே பரபரப்பு.

''அப்பாவிடம் சொல்வதா?'' கேள்வி எழுந்தது.

''வேண்டாம். ஏற்கனவே நொந்து போயிருக்கிறார். சொல்லி என்ன நடக்கப் போகிறது...'' என்ற வெறுப்பு...

மறுபடியும் அப்பாவின் குரல் உரத்துக் கேட்டது.

''கூடியவரை அவன் இந்த ஊருக்கு வந்திருக்கிற விஷயம் ஜெயந்திக்குத் தெரியாமல் இருப்பதே மேல். தெரிஞ்சா அவள் மனசு ரொம்பக் கஷ்டப்படும். என்னால் தாங்க முடியாது. வரவர எனக்கும் உடம்பு அத்தனை சுகமில்லை. கொஞ்சம் நாளைக்கு முன்னே ஒரு நாள் ராத்திரி திடீர்னு நெஞ்சு வலி வந்திட்டுது. மூச்சே விட முடியலே...''

''உடனே டாக்டர்கிட்டே காட்டியிருக்கணும். ஒரு வேளை இதயக் கோளாறா இருந்தா ஆபத்தாச்சே.''



''ஆமா...இனிமே ஆபத்து வர்றதுக்கு என்னா இருக்குது? கதிரேசன் மருமகனா வந்த ஆபத்தே பத்தாதா?''

''நீ இப்படி அசட்டையாக இருக்காதே தண்டபாணி! உயிருக்கு...''

''என் உயிருக்கு எமன் வேற யாருமில்லே. என் மருமகனேதான். அதனாலே நான் இதுக்கெல்லாம் பயந்திட மாட்டேன், ரத்தினம்!''

ஜெயந்தி அரண்டு போய் நின்றாள். ''அப்பாவுக்கு உடம்பு முடியாம இருந்திருக்கு. என்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு என்னிடம் சொல்லவே இல்லே. பாவம் அப்பா'' உருகிவிட்டது அவள் மனம்.

'அவரைப் பார்த்ததாக அப்பாவிடம் சொல்லவே கூடாது. சொன்னால் அதிர்ச்சி அடைந்து விடுவார். ஊகூம்-' தீர்மானித்துக் கொண்டாள்.

தான் வந்திருப்பதை அறிவிப்பவள் போல் பலமாக இருமினாள். ''அப்பா! என்ன செய்திட்டிருக்கீங்க. பால் வாங்கி வச்சிட்டீங்களா?'' உரக்கக் கேட்டபடியே உள்ளே வந்தாள்.

''குழந்தை வந்திட்டுது'' தண்டபாணி பெஞ்சி மீது இருந்து எழுந்திருக்க முயன்றார்.

''வணக்கம்!'' ரத்தினத்திற்குக் கை குவித்து விட்டு முற்றத்தில் இறங்கிக் காலைக் கழுவிக் கொண்டாள்.

''நான் வரட்டுமா?'' ரத்தினம் கிளம்பினார்.

''இருங்க. ஒரு நொடியில் காப்பி கொண்டு வரேன். காலையில் செய்த உப்புமாகூட கவனமாக எடுத்து வச்சிருக்கேன். சாப்பிட்டுப் போகலாம்'' அவள் உபசரித்தாள்.

உப்புமாவைச் சூடாக்கி தட்டுகளில் கொண்டு வந்து பரிமாறிய மகளின் முகத்தை வேதனையோடு பார்த்தார் தண்டபாணி.

''வேண்டாம். சொல்ல வேண்டாம். குழந்தை தைரியமாகவே இருக்கட்டும்'' தனக்குள்ளே எண்ணிக் கொண்டார்.

கலங்கியிருந்த அவருடைய கண்கள் அவளது அடிவயிற்றைப் புரட்டியது. ''வங்கியில் அவரைப் பார்த்தேன் என்றால் அப்பா தாங்கவே மாட்டார்'' என்று எண்ணிக் குழைந்து போனாள்.

கால்கள் தள்ளாடுவதைத் தவிர்க்க நிலைப் படியை ஆதரவாகப் பிடித்தபடி நின்றாள் அவள்.

## 2

அன்று இரவு வெகு நேரம் சென்ற பின்னரே அவன் வீடு திரும்பினான்.

வீடு மிக அழகாகத்தான் இருந்தது. பல வசதிகளுடன் விளங்கியது. அந்த நிறுவனத்து முதலாளியின் சின்ன மகன்-கம்பெனி டைரக்டர்களில் ஒருவன். அவன் திருமணமானதும் சென்னையில் தங்கி, சுகமாக வாழ ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. வசதிகளுக்குக் குறைவில்லை. அலங்காரமான வீடு. ஆனால், அவன் மனைவிக்குத்தான் சென்னை வாசம் பிடிக்கவில்லை. வர மறுத்து விட்டாள். முடிவில், முதலாளியின் சின்ன மகன் பம்பாய் தலைமை அலுவலகத்தைப் பார்த்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பயனாக டைரக்டர்களுக்காக என்று கட்டப்பட்ட வீட்டை கம்பெனியே எடுத்துக் கொண்டது. அதன் ஊழியர்களில் முதன்மையிடம் வகிப்பவர்களுக்கு என்ற நிலையில் அவனுக்குத் தரப்பட்டு இருந்தது.

சென்னைக்கு வந்து வேலை ஏற்கும் முன்பே வீட்டை வந்து ஒரு முறை பார்வையிட்டு விட்டுப் போயிருந்தான் அவன். பரம திருப்தி. ஆனால், இன்று? அதற்குள் நுழைந்த



போது ஏதோ ஒரு வெறுமை உணர்வு...உள்ளத்தை உறுத்தியது.

இரவின் அந்த நேரத்திலே தெருவே அமைதியில் மூழ்கிக் கிடந்தது. அதுவுமன்றி அந்தப் பகுதி வாழ் மக்கள் மேல் மட்டத்துப் பங்களாவாசிகள். அடுத்த வீட்டில் வசிப்பவர்களைப் பற்றி அலட்டிக் கொள்ள நேரம் இல்லாதவர்கள். அவரவர் வாழ்க்கை அவரவர்க்கு என்ற சுயநலம் மிக்க சூழ்நிலையில் வாழ்பவர்கள்.

அவன்...சாதாரண மனிதனாக அடிமட்டத்தில் இருந்து இந்தப் பதவிக்கு உயர்ந்து விட்டவன். இப்போது பரம்பரைப் பணக்காரர்கள் மத்தியில் பங்களாவில் வாசம். கதவை மூடிவிட்டு முன்னறையில் வந்து நின்றான்.

பக்கத்துப் பங்களாவில் அல்சேஷியன் நாய் மிகவும் ஆத்திரமாகக் குரைத்தது. அதைத் தவிர எங்கேயோ நெடுஞ்சாலையில் எப்போதோ ஓடுகிற வண்டி எழுப்பும் ஒலி.

முன்னறையில் மிக அழகான-மிருதுவான இருக்கைகள். காலை பத்திரிகை, காப்பி மேஜையில் இருந்த தடுப்பில் சொருகப்பட்டிருந்தது. அதை எடுத்தவன் நிமிர்ந்து பார்த்தான்.

சுவரிலே தொங்கிய சித்திரம் மராத்திய ஓவியரின் கை வண்ணம். அழகான குழந்தையைச் சுமந்தபடி, மீனவப் பெண் ஒருத்தி தலையில் மீன் கூடையுடன் நடந்து கொண்டிருக்கிறாள். கூடவே தோளில் வலை சுமக்க அவள் கணவனும் நடக்கிறான். குழந்தை அவளையே விழித்துப் பார்த்துப் புன்னகைப்பது போல் உயிர்த் துடிப்புடன் விளங்கியது ஓவியம்.

அவனது திருமண வாழ்வும் ஒழுங்காக அமைந்திருந்தால் இப்போது...அவனுக்கும் ஒரு பிள்ளையோ, பெண்ணோ, குறைந்தது ஐந்து வயதில்...தோளின் மீது தூக்கி வைத்துக் கொஞ்சிக் குலாவ—அந்த வரவேற்பு அறையில் குறுக்கும்

நெடுக்கும் ஓடி அலைய...ஒரு பிள்ளைச் செல்வம் இருந் திருக்குமே!

''என் பேச்சைக் கேளு! கதிரேசா! இந்தப் பிடிவாதம் பிடிக்காதேப்பா'' அம்மாவின் குரல் கணீர் என்று கேட்டது போல் ஒரு பிரமிப்பில் திடுக்கிட்டான்.

''அம்மாதான் போன வருடம் போய் விட்டாங்களே. காய்ச்சலில் படுத்தவங்க...பத்தே நாள்...பரமபதம் அடைஞ் சிட்டாங்க.''

அவனுக்குத் தாயின் மீது உயிர். அவன் தாய் சிறிய வயதிலேயே விதவையாகி விட்டவள். தன் ஒரே மகனுக் காக அவள் பட்ட பாடு. வளர்த்துப் படிக்க வைத்து, ஆளாக்கி விட அவள் செய்த தியாகங்கள்...அம்மாவை நினைத்த மாத் திரம் அவன் மனம் உருகியது. கண்களில் கூட இலேசாகக் கண்ணீர் திரை கட்டிக் கொண்டது.

எதற்குமே கலங்காத நெஞ்சம் அவனுக்கு. துணிச்சல் நிரம்பியவன். யாருக்கும் பயப்படாத ஆற்றல் கொண்ட வன். அலுவலகத்தில் அவனைக் கண்டால் மற்றவர்கள் அஞ்சுவார்கள். அப்படிப்பட்டவன் தாயின் நினைவிலே மனம் குழைந்து போனான்.

அந்த வீட்டிலே மூன்று படுக்கைகள் இருந்தன. பெரிய தாக இருந்த அறையில் குளிர்சாதன வசதியும் இருந்தது. பம்பாயில் அவன் தாயார் அந்தச் சிறிய ஃப்ளாட்டுக்குள் வாழ நேர்ந்ததை நினைத்தபோது...நெஞ்சம் கனத்தது, அவனுக்கு.

எதிர்ப்புறச் சுவரில் தொங்கிய சட்டத்திற்குள் அடங்கி விட்ட அந்தப் ''பத்திக்'' சித்திரம் கண்ணில் பட்டது. வறட்சி யாக அவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

ஒரு பெரிய மரத்தின் அடியில் குறுந்தாடியும், சிங்காரத் தலைப் பாகையுமாக ஒமர்கயாம் தனது இடது கரத்தால்



காதலியை அணைத்துக் கொண்டு, வலது கரத்தில் இருந்த மதுக் கிண்ணத்தை உயரத் தூக்கிப் பிடித்தபடி உட்கார்ந் திருக்கிறான். ஆ! அது என்ன பாட்டு? ''ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு. ஒரு கோல மயில் என் துணையிருப்பு...''

ஒமர்கயாம் போலவே, ''நாளை சூரியன் எழுந்தால் என்ன? எழா விட்டால் என்ன? இன்று வாழ்ந்தே தீரு வோம்'' என்றுதான் அவன் முதலில் சில ஆண்டு கோப்பை நிறைய மது—துணைக்குக் கோல மயில்கள் பலவுமாக வாழத் தொடங்கினான். தடுமாறிக் கொண்டு வீட்டுக்கு வரும் மகனைக் கண்டு அம்மா அமிர்தம் நடுநடுங்கிப் போனாள்.

''கதிரேசா! உனக்கே இது நல்லா இருக்கா? நீ இப்படி அழிஞ்சு போகத் தானா இந்த இரண்டு கைகளாலயும் எரிய எரிய பத்துப் பாத்திரங்களைத் தேய்ச்சுப் போட்டு, வேலை செஞ்சேன். அந்தப் பணத்தில் உன்னைப் படிக்க வைச்சேன். இந்தக் கை ரொம்பப் பாவம் செஞ்ச கை. இதுகளை நெருப் பில் வச்சுப் பொசுக்கணும். என் பெத்த வயிறு எரியுதப்பா?'' முகத்தில் அடித்துக் கொண்டு புலம்பினாள்.

அவள் அழுதபோது கலங்கிப் போனான். ''நாளை முதல் இதுபோல் நான் செய்ய மாட்டேன், அம்மா என்னை நம்புங்க'' உறுதி அளித்தான். ஒவ்வொரு தடவையும்... ''குடிகாரன் பேச்சு விடிந்தால்...'' கதைதான். நேரம் கழித்து வீட்டிற்கு மனம் தடுமாறி வருவான். மறுநாள் மகன் திருந்த வேண்டும் என்று அமிர்தம் வேண்டாத தெய்வம் இல்லை. அனுசரிக்காத விரதம்—நோன்பு இல்லை. முடிவில் அவளது வேண்டுகோளுக்கு ஆண்டவன் செவி சாய்த்து விட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், மஞ்சள் காமாலை நோயில் அவன் படுத்து விட்டான். பிழைப்பது அரிது என்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். சங்கிலித்

தொடர்போல் புகைப்பது, மது அருந்துவது இரண்டையும் விட்டால்தான் உயிர் பிழைக்கும் என டாக்டர்கள் எச்சரித்த போது அவன் பயந்து விட்டான். உலகத்திலே அவனையே நம்பி வாழும் தாயை தனியாகத் தவிக்க விட்டு செத்துப் போக அவனுக்கு மனமில்லை. அவனுக்குப் பின் அவள் என்ன செய்வாள்?

கையெழுத்துக் கூடப் போடத் தெரியாத பத்தாம் பசலி. மகனையே நம்பி வாழும் கபடமற்ற ஆன்மா.

ஒரே நாளில் ஆஸ்பத்திரியில் செய்த திடமான முடிவு. அந்தக் கண்டத்தில் இருந்து அவன் பிழைத்து விட்டால், மது, மங்கை, சிகரெட்டு எல்லாவற்றிற்கும் ஒரு முழுக்கு. அவன் பிழைத்து விட்டான். அவனது முடிவும் பிழைத்து விட்டது.

அதற்குப் பின்னர் அவன் வேலை முடிந்ததும் நேரே வீட்டிற்கு ஒழுங்காக வரத் தொடங்கினான். மறந்து கூட மது அருகே போகவேயில்லை. மனதை மயக்கிய எந்தப் பெண்ணையும் திரும்பிப் பார்க்கவில்லை.

மகனது மன மாற்றத்தைக் கண்ட அமிர்தம் ஆனந்தம் அடைந்தாள். மகன் வீடு திரும்பும்முன், அனுதினமும் அவனுக்குப் பிடித்தமான சுவையான பலகாரங்களைத் தயார் செய்து வைத்து ஆவலோடு காத்திருப்பாள். உடம்புக்கு முடியா விட்டாலும் ஒய்வு நாளில் மகன் அழைத்தால் அவள் கச்சேரிகளுக்கும், கண்காட்சி, கடைத் தெருக்களுக்கும் கூடப் புறப்பட்டு விடுவாள். ஆனால், அடிக்கடி நினைவுபடுத்தாமல் இருக்க மாட்டாள்.

''இந்த வயது காலத்தில என்னைக் கட்டி இழுக்கறே. நானும் வர்றேன். ஆனால், உன்கூட வர வேண்டியவள் வேலூரில் எப்படி இருக்காளோ... கதிரேசா! கொஞ்சம் அந்தப் பெண்ணை நினைச்சுப் பாரு. ஒரு நல்ல பொண்ணு வடிக்கிற கண்ணீர் நம்மைச் சும்மா விடாதப்பா...''



அவன் பதிலே பேச மாட்டான். மவுனமாக இருந்து விடுவான்.

அம்மாவின் பேச்சுக்கு அவன் கட்டுப்பட்டவன்தான். பல விஷயங்களை அம்மாவுக்காக விட்டுக் கொடுத்தான்.

அவள் சுகமாக வாழ வேண்டும் என்று தாய் மீது கவலையுடன் பல காரியங்களைச் செய்தான். ஆனால், ஜெயந்தி விஷயத்தில் மட்டும்...மனம் ஏனோ...இடம் கொடுகாது, கல்லாக அசையாது இருந்து விட்டிருந்தது.

ஏன்? ஜெயந்தி அப்படி என்ன தவறு செய்தாள்?

சிந்தித்தபடியே சமையல் அறையைத் திறந்து உள்ளே சென்றான். நான்கு புறமும் மேடைகள், கண்ணாடி அலமாரிகள் என அமெரிக்கப் பாணியில் கட்டப்பட்ட சமையல் அறை. பம்பாயில் அந்தச் சிறிய அறைக்குள் அம்மா ''ஸ்டவ்'' அடுப்பின் முன், வெயில் காலத்தில் வியர்த்துக் கொட்ட, முகம் சிவக்க, சமையல் செய்து முடிப்பாள். ''இந்த அறையைக் கொஞ்சம் பெரிதாகக் கட்டியிருக்கக் கூடாதோ? மூச்சே அடைக்குது—கை அகலமா கட்டிப் போட்டிருக்கானே'' தினமும் அலுத்துக் கொள்வாள். அப்போது அதற்கு மேல் வசதியான இடத்திற்கு அவனால் போக இயலவில்லை. அந்த இடமே அரண்மனை கிடைத்தது போல...

''கொஞ்சம் பொறுத்துக்கிடுங்க. சென்னைக்கு என்னை உத்தியோக உயர்விலே அனுப்பப் போறாங்க. அப்பொழுது பெரிய வீடா பார்த்து வாடகைக்கு எடுத்திடறேன்'' அவன் சமாதானப்படுத்துவது வழக்கம்.

இந்தப் பெரிய சமையல் அறையைக் கண்டு அம்மா எப்படி மகிழ்ந்து போயிருப்பாங்க! ''தாராளமாகத் திரும்பி

நடக்க எப்படிக் கட்டியிருக்கான், மகராசன்''னு வாழ்த்து வாங்க. ஆனால், அவனது உயர்வைப் பார்க்காமலே அந்த அம்மா போய் விட்டார்களே. எண்ணியபோது அவன் நெஞ்சம் துக்கத்தால் அடைத்தது.

பம்பாயில்கூட அவன் தாயின் இழப்பையும், தனிமையையும் அவ்வளவு கொடுமையாக உணரவில்லை. வேலைகள் நடுவில், நகரத்தின் சந்தடிகளில் அசுர கதியில் தனிமையை மறந்துவிட்டிருந்தான்.

இங்கே ஒவ்வொரு நாளும், வீட்டின் கதவைத் திறக்கும்போது, முன்னறைத் தரையில் சுருண்டு படுத்துக் கொண்டு, தாயார் ''இப்பத்தான் வந்தியா, இரு...'' என்று முனகியபடி எழுந்து வர மாட்டாளா, என்ற ஒரு மனத் தவிப்பு. அலங்காரக் கம்பளம் விரிக்கப்பட்டு இருந்தும் வெரிச்சென்றிருக்கும் ''மொசயிக்'' தரையைப் பார்த்தபடி திகைப்புடன் நிற்பான்.

''வீடு திரும்பியவுடன் தனது களைப்பையும், அலுப்பையும் மறந்து எழுந்து வரவேற்க அம்மா இல்லை. சூடான சோற்றையும், குழம்பையும் தட்டிலே பரிமாறி விட்டுப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு உபசரிக்க அம்மா இல்லை. ஊகூம், அம்மா இல்லவே இல்லை'' நினைவுகள் வேதனைகளாக அவனை வருத்தும்போது, அவன் கதவைத் தாளிட்டு விட்டுப் படுக்கச் சென்று விடுவான்.

அநேகமாக வீடு திரும்பும் முன்பே, நல்ல ஓட்டலில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விடுவதும் அவனது வழக்கமாகி விட்டிருந்தது. ஆனாலும், அம்மாவின் கைப் பக்குவம், அந்த உணவுக்கு வருமா? அவள் உபசரித்துப் பரிமாறும்போது, மனமும், வயிறும் குளிர்ந்து போகுமே, அந்த நிலைதான் திரும்பி வருமா?

தாய்தான் உலகம் என்று ஒரு சிறு வட்டத்திற்குள்ளே வாழ்ந்து விட்டதாலா இந்தத் தடுமாற்றம். சே! சே! பச்சைக்



குழந்தை போல, இன்னமும் மனதைத் தளர விட்டுக் கொண்டு...தன்னையே கடிந்தபடி 'காஸ்' அடுப்பைப் பற்ற வைத்தான்.

குளிர் சாதனப் பெட்டிக்குள் வேலையாள் பாலை வாங்கி வைத்து விட்டுப் போயிருந்தான். அதை எடுத்து வந்து, பாத்திரத்தில் ஊற்றி அடுப்பின் மீது வைத்தான். நினைவிலே அந்த நிகழ்ச்சி மெல்ல நிமிர்ந்து எழுந்தது.

அன்று அவனது நிறுவனத்திலே ஒரு கூட்டம் இருந்தது. வர நேரமாகலாம் என்று முன்கூட்டியே கூறி விட்டிருந்தான். வந்து கதவைத் தட்டியபோது அமிர்தம் எழுந்து திறக்க வெகு நேரம் சென்றது.

"ஏன்?'' என்று சந்தேகத்துடன் காத்திருந்த அவன் கதவைத் திறந்த தாயின் முகத்தைக் கண்டு நடுநடுங்கிப் போனான்.

''நல்ல காய்ச்சல்'' முக்கி முனகியபடி படுத்திருந்தவள், எழுந்திருக்கக் கூடச் சக்தியின்றி ஊர்ந்து வந்து மெல்லக் கதவைத் திறந்து விட்டிருந்தாள்.

''அம்மா? உடம்புக்கு என்ன?'' சட்டென கன்னத்தைத் தொட்டுப் பார்த்தான். நெற்றி மீது கை வைத்தான். நெருப்பாகச் சுட்டது.

''வெறும் காய்ச்சல்தான்.''

''தொலைபேசியில் கூப்பிடக் கூடாதா?'' கடிந்து கொண்டான்.

''ஆமா இதுக்குப் போய் தொல்லை கொடுக்கணுமான்னிட்டு இருந்திட்டேன். ப்ளாஸ்க்கில் பால் சூடாக எடுத்து வச்சிருக்கேன். சாப்பாட்டை நீயே கொஞ்சம் எடுத்துப் போட்டுக்க. என் தலை சுத்துது.''

''இருங்கம்மா'' அவளைத் தாங்கிப் படுக்க வைத்தான். அத்தனைக் காய்ச்சலிலும் மகனைப் பற்றிய எண்ணம், அவனது தேவைகளைப் பற்றிய கவலை. ஓடிச் சென்று வைத்தியரை அழைத்து வந்தான். அவர் பரிசோதித்து விட்டு ஊசியேற்றி விட்டுப் போனார்.

''பயப்பட வேண்டாம். இது ஒரு மாதிரியான புளூ காய்ச்சல். எழுதிக் கொடுக்கும் மாத்திரைகளை சாப்பிட் டால் போதும்'' என்று கூறி விட்டார், டாக்டர். அடுத்த நாள் அலுவலகத்துக்கு அரை மனதுடன் போனான். இடையே ஒரு முறை தாயை வந்து கவனித்து விட்டுச் சென்றான். அதற்கு அடுத்த நாள் காய்ச்சல் அதிகமாகி அம்மா பிதற்றத் தொடங்கினாள். மருத்துவமனையில் அனுமதிக்க அவன் விரும்பினான். அவள் மறுத்தாள்.

''என் கூட நீ பக்கத்திலேயே இரு போதும். மருந்து, ஆஸ்பத்திரி ஒண்ணும் வேண்டாம். கதிரேசா! எனக்குத் தெரிஞ்சிட்டுது. இந்த முறை நான் பிழைக்க மாட்டேன்...''

''அம்மா! அப்படிச் சொல்லாதீங்க'' அவனுக்கு அழுகை தொண்டையை அடைத்தது. அவள் விருப்பப்படியே வேலையில் இருந்து பத்து நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு இரவும் பகலும் அவள் அருகிலேயே இருந்தான்.

வைத்தியர் வந்து போய்க் கொண்டு இருந்தார். ஊசி, மருந்து, மாத்திரை என்று சிகிச்சையும் குறைவின்றி நடந்து வந்தது. பக்கத்துப் பகுதியில் வசிப்பவர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். ''அமிர்தம்மாள் கொடுத்து வைத்தவள். பிள்ளை என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும்'' என்று புகழ்ந்தார்கள்.

அன்று இரவு—அவளுக்கு உடம்பு மிகவும் அதிகமாகி விட்டது. தலையணைகளை உயர்த்தி அவளைச் சாய்ந்த



வாக்கில் படுக்க வைத்தான். மூச்சு விட முடியாது அவள் திணறினாள்.

கையை அசைத்து அவனை அருகே வரும்படி அழைத் தாள். சில நாட்களாகக் கண் இமைக்காது அவளைக் காத்து களைத்து விட்டிருந்த அவன், அருகே வந்தான்.

''உட்கார்'' நாற்காலியைக் காட்டினாள்.

''என்னை ரொம்ப நல்லா கவனிச்சேப்பா. ஆனால், எனக்குத்தான் குடுப்பினை இல்லே.''

''என்னம்மா சொல்றீங்க'' பதைபதைத்தான் அவன். நெற்றி மீது கையை வைத்துப் பார்த்தான். காய்ச்சல்கூட குறைந்திருக்கிறதே! அம்மா ஏன் உளறுகிறாங்க? அணைகிற விளக்கு சுடர் விடும் என்பது பின்னர்தான் புரிந்தது.

''நீ நல்ல மகன். என்னைக் கவனிச்சுக்கிட்டே.''

''அதுக்கெல்லாம் இப்ப என்ன?'' அவன் குரல் தழு தழுத்தது. துக்கம் நெஞ்சைப் பிளந்தது.

''எனக்குக் கடைசியா ஒரு ஆசை. கிட்ட வா'' தாயின் குரல் மெல்ல ஒலித்தது.

''என்னம்மா'' அச்சம் வயிற்றைப் பிசைந்தது அவனுக்கு.

''ஜெயந்தியைப் பத்தித்தான்...இத்தனை வருஷமா நான் மனசுக்குள்ளேயே புலம்பிக்கிட்டிருந்தேன். நீ நல்லவன் தான் ஒப்புக்கறேன். அத்தோட ஒரு நல்ல புருஷனாகவும் இருக்கணும்ப்பா...கதிரேசா! அதுதான் என் ஆசை. அந்தப் பொண்ணு ஒரு பாவமும் அறியாதவள். எப்படியாச்சும் திரும்பக் கூட்டி வந்து குடித்தனம் நடத்து. என் கண்ணால் பார்க்க முடியாட்டியும் என் ஆத்மா அமைதியாப் போகும்.''

''அம்மா!'' அவன் திடீரென விக்கி அழுது விட்டான்.

''இந்த வீட்டுக்கு ஜெயந்தி வந்தாள்னு ஒரு வார்த்தை கேட்டால் என் மனசு குளிர்ந்து போகும்ப்பா. இன்னும் கொஞ்சம் பக்கத்தில் வா...உம்...இன்னும்'' அவனைப் பிடித்திருந்த கரங்கள் தளர்ந்து விழுந்தன.

''அம்மா போய் விட்டாங்க'' மனம் உணர்த்திய போது சிறு குழந்தையைப் போல் குமுறிக் குமுறி அழுதுட்டான். அத்தனை பாசம் அவன் தாய் மீது அவனுக்கு.

இப்போது அவள் தெய்வமாகி அவனது படுக்கை யறை மேஜையின் மீது சிறு சட்டத்திற்குள் அடங்கிய புகைப் படமாகி விட்டிருந்தாள். ஆனால், அவள் நினைவு, அவளது வார்த்தைகள்?

பொங்கிய பாலை இறக்கினான். அடுப்பை அணைத்து விட்டுப் பால் தம்ளரில் ஊற்றிச் சர்க்கரையிட்டுக் கலந்தான். அதை எடுத்துக்கொண்டு படுக்கையறைக்குள் வந்து உட் கார்ந்துகொண்டான்.

அம்மாவின் படத்தின் மீது முதல் நாள் அவன் வைத்துப் போன நந்தியாரவட்டை மலர் காய்ந்து விட்டிருந்தது. அதைத் தள்ளி விட்டுப் படத்தைத் துடைத்தான். பிறகு அம்மா சொன்னபடி மெதுவாகச் சிந்தித்தான்.

அம்மா சொன்னபடி செய்யத்தான் நினைக்கிறான். ஆனால், அவனுக்குத் துணிவு வரவில்லையே, ஏன்?

சென்னை வந்ததும் முதலில் அவன் வேலூர் விலாசத் திற்கு ஆளை அனுப்பி விசாரித்து வரச் செய்தான். நேரே போய்ப் பார்க்க அச்சம். ஆறு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அவள் அவனை ஏற்றுக் கொள்வாள் என்பது என்ன நிச்சயம்? முகத்தில் அடித்தாற்போல் அவன் மாமனார் பேசி விட்டால் என்ற தயக்கம். இது போன்ற விஷயங்களில் யாராவது புகுந்து ஒழுங்கு செய்வதுதான் முறை.



பெரிய பதவியில் இருப்பவன், சொந்த விஷயங்களை யாரிடம் பரிமாறிக் கொள்ள முடியும்? தன் விஷயத்தில் பிறர் தலையிடுவதை அவன் அறவே வெறுப்பவன் ஆயிற்றே. யாருடனும் முகம் கொடுத்துப் பேசாதவனிடம் அலுவலகக் கணக்கர், வயதானவர் கேட்டு விட்டார். ''வீடு பிடிச்சிருக்கா? உங்க சம்சாரத்திற்குத்தானே பிடிச்சிருக்கணும்? எத்தனை குழந்தைகள்?'' முகமெல்லாம் சிவக்க...நெஞ்சு பதை பதைக்க அவன் நிலைகுலைந்து போனான்.

''நானும் என் மனைவியும் பிரிந்து ஆறு ஆண்டுகள் ஆகின்றன'' என்று அவன் எப்படி சொல்லிக் கொள்ள முடியும்?

''அவங்க ஊரில் இருக்காங்க—குழந்தைகளா... இன்னும் ஒண்ணும் கிடையாது'' மென்று விழுங்கினான்.

ஆனால், எத்தனை நாளைக்கு? பம்பாயில் ஏற்கனவே விஷயம் தெரிந்தவர்கள் பலர் இருந்தனர். அவர்களில் எவ ரேனும் சென்னைப் பக்கம் வராது போய் விடுவார்களா என்ன? இது போன்ற விஷயங்களை யாருமே பல காலம் மறைத்து வைக்க முடியாது. விரைவில் இந்த அலுவலகத் திலும் அவன் பெயர் அடிபடத்தான் போகிறது.

''மானேஜர் கதிரேசன் தன் மனைவியுடன் இருக்க வில்லையாமே?''

''ஆறு வருடமா இருவரும் பிரிந்து இருக்கிறார்களாம்? என்ன காரணம்? காரணம் இல்லாமலா இருக்கும். வேறு கல்யாணம் செய்து கொள்கிற உத்தேசமா?''

''தவறு இவருடையதா? அந்தப் பொண்ணுடையதா?''

பலப்பல அவனைப் பற்றி அலசப்படும். நாக்கிற்கு நரம்பு ஏது? வம்பின் வாயைத்தான் பூட்டி வைக்க முடியுமா?

வம்புக்குப் பயந்து கொண்டு அவன் அந்த முடிவிற்கு வரவில்லை. கடைசியாகத் தாயின் கண்ணீர் நிரம்பிய வேண்டுகோள் நெஞ்சை உறுத்திக் கொண்டே இருந்தது.

வேலூருக்கு அனுப்பிய ஆள் வந்து சொன்ன செய்தி அவனைத் திகைக்க வைத்து விட்டது.

அவர்கள் வேலூரை விட்டு சென்னைக்கே வந்து விட்டார்களாம். ஏதோ ஒரு வங்கியில் அவள் வேலை பார்க்கிறாளாம். அவளுடைய தாயும் இறந்து விட்டாளாம்.

''அட பாவமே! இவ்வளவு பெரிய சென்னையில் அவளை எங்கே என்று தேடுவது. ஒவ்வொரு வங்கியாக, தெருத் தெருவாக அலைய முடியுமா?''

**எ**திர்பாராத விதமாகத்தான் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. ஏதோ வேலையாக அவன் ஒரு நாள் காலையில் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ள ஒரு கடைக்கு வந்திருந்தான். இறங்க நினைத்தவன் வண்டியை ஓரமாக விட்டுத் திரும்பியபோது...

அந்த நெருக்கமான தெருவுக்குள்ளேயிருந்து அவள் வேகமாக வந்து கொண்டிருந்தாள். தோளில் தொங்கும் பை, கையில் விரித்துப் பிடித்துக் கொண்டிருந்த குடை, நடையிலே ஒரு பரபரப்பு. அவன் வியப்புடன் அவளை விழுங்கி விடுகிறவன் போலப் பார்த்துக் கொண்டே காரில் உட்கார்ந்திருந்தான்.

சூழ்நிலையைக் கவனிக்காது சேணம் கட்டிய குதிரை போல அவள் ஒரே நோக்கில் வேகமாக பஸ் நிலையத்தை அணுகிக் கொண்டிருந்தாள். அவன் அருகில் வந்த போதிலும் அவள் கவனிக்கவில்லை.

ஆனால், அவன் நன்றாகப் பார்த்தான். அவள் மிகவும் மாறி விட்டிருக்கிறாளே! திகைப்பு வந்தது அவனுக்கு.



முகத்திலே முதிர்ச்சி. ஆனால், அலாதியான களை. படித்து விட்டு வேலை பார்க்கிறோம் என்ற பெருமையினால் ஏற்பட்ட பூரிப்பா?

முன் போல் தலையைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கவில்லை. வாரி சற்று உயரமாகக் கொண்டை இட்டிருந்தாள். அது பொருத்தமாக இருந்தது. நடையில் ஒரு கம்பீரம். தானே சம்பாதித்துக் காத்துக் கொள்கிறோம் என்ற துணிச்சலோ? நெஞ்சு படபடக்க வியப்புடன் பார்த்தான்.

ஓடி வந்து நின்ற பஸ்சில் அவள் ஏறிக் கொள்வதைக் கண்டதும், அவனுக்குத் திடீரென்று அந்த யோசனை...மெல்ல அந்த பஸ்சைத் தொடர்ந்தால்...

வழியில் அவள் ஒரு நிலையத்தில் இறங்கினாள். சற்றுத் தூரம் நடந்து சென்று சில கடைக்கு அப்பால் தெரிந்த வங்கிக் கட்டடத்திற்குள் புகுவதைக் கண்டு கொண்டான்.

அவள் எந்த வங்கியில் வேலை பார்க்கிறாள் என்பதைத் தான் துப்பறிந்து கொண்ட மகிழ்ச்சியில் மூச்சே நின்று விட்டது போன்ற பிரமிப்பு அவனுக்கு.

அன்று அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை. மறுநாள் தான் அந்தத் துணிச்சலான முயற்சியில் அவன் ஈடுபட்டான். காலையில் அலுவலகத்திலேயே சிறிது நேரம் இருந்து விட்டு, தேநீர் நேரத்தின் போது மெல்லக் கட்டடத்தை விட்டு வெளியே வந்து காரில் ஏறினான்.

அந்த வங்கியின் எதிரே வண்டியை நிறுத்தி விட்டு ஃப்ரீப் கேசுடன் உள்ளே நுழைந்தான். அவள் தட்டெழுத்து இயந்திரத்தில் ஒரு காகிதத்தை அடித்துக் கொண்டிருந்தாள். ஒரு வினாடிதான் பார்த்தான் என்றாலும், அவன் மனம் அவளைப் படம் எடுத்துக் கொண்டு விட்டது.

கைகளில் அவள் வெறும் கண்ணாடி வளையல் அணிந்திருந்தாள். காதுகளில் சிறு முத்துத் தோடுகள். கழுத்திலே மெல்லியதாக ஒரு சங்கிலி...நெற்றியில் பளிச்சென்ற குங்குமப் பொட்டு. கஞ்சி மொடமொடப்புடன் மேனி மீது படர்ந்து கொண்டிருந்த மஞ்சள் வண்ண மல்மல் சேலை...ஆனாலும், எத்தனை அழகாக இருந்தாள். திடீரென்று அவன் நெஞ்சை என்னவோ செய்தது.

கடிதத்தை உருவி எடுத்து அவள் கோப்புக்குள் வைப்பதைக் கவனித்தவுடன் சட்டென்று அந்த டெல்லரிடம் அவன் நகர்ந்தான். வங்கியைப் பற்றி விசாரிப்பதுபோல் பேச்சுக் கொடுத்தான்.

அவனை அவள் பார்த்தாளா? ஒரு சமயம் அடையாளம் புரியவில்லையோ? அப்படியா அவன் மாறிப் போனான். பார்த்தும் பாராமல் இருந்து விட்டாளா? கேள்விகள் அவனைத் துளைத்தன. சட்டெனத் திரும்பி வெளியே வந்தான்.

அவள் வேலை செய்யும் இடம் தெரிந்து விட்டது. அடுத்து வசிக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். பாலைப் பருகி விட்டு, அவன் விளக்குகள் அனைத்தையும் அணைத்து விட்டுப் படுக்கை மீது சாய்ந்து கொண்டான். வீட்டையும், சுற்றுப்புறத்தையும் அந்தப் பயங்கர அமைதி என்னவோ செய்தது.

ஆறு ஆண்டுகள் விலை கொடுத்து வாங்க முடியாத நீண்ட காலம், வீணே நழுவ விட்டிருக்கிறானே? முட்டாள்! தன்னையே சாடிக் கொண்டு இருட்டிலே எதையோ வெறித்தபடி வெகு நேரம் படுத்துக் கொண்டு இருந்தான். பின்னர் களைப்பின் மிகுதியால் அவனையும் அறியாது உறங்கிப் போனான்.



## 3

வேலூரில் அவர்கள் வசித்த வீடு அவர்களுக்குச் சொந்தமல்ல. வெல்ல மண்டியின் முதலாளி குறைந்த வாடகைக்கு அதைக் கொடுத்து இருந்தார். சாதாரண ஓட்டு வில்லை. பழைய கட்டடம். மூன்றே அறைகள். கூடம், தாழ்வாரம், முற்றம்—பின்புறம் சிறு தோட்டம், கிணறு என பல வசதிகளுடன் இருந்தது. தாராளமாக அதில் பழக்கப்பட்ட ஜெயந்திக்கு இப்போது வசிக்கும் வீடு, நெஞ்சை இறுக்குவது போன்று ஒரு தவிப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அதைவிட நாள் முழுவதும் அந்தத் தனியார் வங்கிக் கட்டடத்திற்குள் தட்டெழுத்து இயந்திரத்தின் முன்னால் உட்கார்ந்திருப்பதே மேல் என்ற நினைப்பு எழுந்தது உண்மை.

கூடத்திலேயே இடப்பக்கம் இருந்த சிறிய அறையை அவள் சமையலுக்குப் பயன்படுத்தினாள். முன்பு அதில் குடியிருந்தவர்களும் அதைத்தான் சமையல் அறையாக உபயோகித்திருக்க வேண்டும். கூரை வரை சுவரிலே படிந்து நின்ற கரிப் பூச்சுக் கட்டியம் கூறியது. வாயிற்புறம் சன்னல் இருக்கும் சிறிய அறையில்தான் அவர்களது பெட்டி, படுக்கை யாவும் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன. இரவில் அப்பா கூடத்தில் கிடந்த பலகை மீது உறங்குவார். தரையில் பாயை விரித்து, அவள் அந்த அறைக்குள் முடங்கிக் கொள்வாள்.

அது ஒரு தெரு வீடு—இடைச் சுவர் இரு வீடுகளுக்கும் பொது. சன்னல் வைக்கக் கூடாது என்பது சட்டம். அதனால் இரவில் ஒரே புழுக்கம். கொசுக் கடி உபத்திரவம். மின் விசிறி வைத்துக் கொள்ளக் கூட வசதியில்லாத வாழ்க்கை.

சாதாரண நாளிலேயே அவள் இரவில் அடிக்கடி எழுந்து விடுவாள். ''சொய்'' என்று ரீங்கரிக்கும் கொசு

உபத்திரவம் தாள முடியாது. கை ஒடிய ஓலை விசிறியால் வீசிக் கொண்டு உட்கார்ந்து விடுவாள். அன்று இரவு அவள் தூங்கவே முடியவில்லை. நெஞ்சிலும் புழுக்கம் நிறைந்து விட்டதே!

விடுக்கென எழுந்து உட்கார்ந்தாள். கழுத்தில் ஆறாக வடிந்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். அப்பா வெளியே கூடத்துப் பலகை மேல் குறட்டை விடும் ஒலி கேட்டது. மெல்ல கதவை ஒருக்களித்து எட்டிப் பார்த்தாள். விடி விளக்கு வெளிச்சத்தில்—கன்னக் கதுப்புகள் தொங்க அவர் தம்மை மறந்து உறங்குவது தெரிந்தது.

கதவை மீண்டும் மூடி விட்டு விளககைப் போட்டாள். மேலே கனமாக வைத்திருந்த சிறிய தகரப் பெட்டியை மூச்சை அடக்கிக் கொண்டு மெல்ல எடுத்தாள். அப்படி ஒரு வெறி. நடு இரவில் அவனை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஓர் ஆத்திரம்.

அடியில் இருந்த கள்ளிப் பெட்டியில்தான் திருமணத்தின் போது எடுத்த சில படங்கள் இருந்தன. வேலூர் வீட்டுச் சுவரிலே மாட்டியிருந்த திருமணப் படத்தைக்கூட அப்பா ஒரு நாள் வந்த எரிச்சலில் கழற்றி அந்தப் பெட்டிக்குள் போட்டு விட்டார். மருமகனது புகைப்படத்தைக் கூடக் கண்ணால் பார்க்க விரும்பவில்லை. அவர் கூடியவரை மகளது எதிரிலும் அவன் பெயரைக்கூடச் சொல்வதை நிறுத்தி விட்டிருந்தார். அவனது நினைவே வேண்டாம் என்றவரை அவருக்கு ஒரேயடியாக மனம் கசந்து விட்டிருந்தது.

ஆனால், இவளோ...மறக்கவேயில்லை...மறக்கவும் விரும்பவில்லை. இறுதிக் காலம் வரை நினைத்துக் கொண்டே, அதே நினைவில் வாழத் துடித்தது அவள் மனம்.



அத்தனை ஆழமான அன்பு அவன்மீது.

அவமானப்படுத்தியவன் மீது அப்படி ஓர் ஆசை.

கேட்டால் யாரும் சிரிப்பார்கள். ஆனால், உண்மை ஒவ்வொரு கணமும் அவன் நினைவிலேயே அவள் வாழ்ந்து கொண்டு இருந்தாள். பெற்ற தாய்க்குக் கூட அந்த விஷயம் ஒரு புதிராகவே இருந்தது.

கள்ளிப் பெட்டியை ஓசைப்படாமல் திறந்து, புத்தகங்களுக்கு அடியே கிடந்த அந்தத் திருமணப் படத்தைக் கையில் எடுத்தாள்.

அவர்கள் இருவரையும் பிரிப்பது போன்று படத்தின் குறுக்கே பெரிய விரிசல்!

கழுத்து நிறைய பூ மாலையுடன் நெருக்கமாக நின்ற தம்பதியரை—இடுப்பு வரை அளவில் பெரிதாக்கிய படம். உற்றுப் பார்த்தாள். சட்டென கன்னங்கள் நனைந்தன.

உள்ளத்தில் பொங்கி வரும் மகிழ்ச்சி, புன்னகையாக உதட்டில் விரிய எத்தனையோ எதிர்பார்ப்புகளுடன் புறப்பட்ட அந்த இளம் மணப் பெண் எத்தனை பெரிய ஏமாற்றத்துடன் வேலூருக்கே திரும்பி வந்தாள்?

திடீரென நினைவுகள், நீண்டதொரு சங்கிலித் தொடராக எழும்பின.

கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டு படத்தை மீண்டும் பார்த்தாள்.

முதன்முதலாக தோழி கமலத்தின் வீட்டிலே அவனைச் சந்தித்தபோது நிமிர்ந்து பார்த்தவன் முகத்திலே பூத்து நின்ற மோகனப் புன்னகை. அதே புன்னகைதான் இந்தப் படத்திலும் காணப்பட்டது. அன்று காலை வங்கியில் டெல்லரிடம் போனபோதுகூட அதே புன்னகைதான்.

அந்தப் புன்னகைக்கு மயங்கித்தான் அவள் தன் மனதைப் பறிகொடுத்தாள். பிறகுதான் விளங்கியது அவன் புன்னகை பூக்கும் எரிமலை என்று.

அப்பா இருமுவது கேட்டது. அவள் திடுக்கிட்டாள். 'இரவில் விளக்கைப் போட்டுக் கொண்டு என்னம்மா செய் கிறாய்?' என்று கேட்டார்...சட்டெனப் படத்தைக் காகிதத் தில் சுற்றிப் பெட்டிக்குள் வைத்தாள்.

அத்தனைத் துயரத்தை அனுபவித்த பின்னரும் அவன் படத்தைப் பார்த்தால்கூட அவள் மனம் குழைந்து விடுகிறாள்!

ஏன் இந்த பலவீனம்?

தன்னையே கடிந்து கொண்டு தூக்கி ஓசையின்றி மரப் பெட்டி மேல் வைத்தாள்.

விளக்கை அணைத்துவிட்டு மெதுவாகக் கதவினூடே எட்டிப் பார்த்தாள். அப்பா பலமாக இருமிக் கொண்டு எழுந்து விட்டார்.

''என்னம்மா? முழிச்சிக்கிட்டியா?'' இருமல் நடுவே திணறினார்.

''நீங்க இருமுற சத்தம் கேட்டுச்சு. முழிப்பு குடுத்திட் டுது. அன்னைக்கி மழையில் நடந்து போய் வந்ததிலிருந்து உங்களுக்கு இருமல் பிடிச்சிக்கிச்சு.''

''இருங்க கொஞ்சம் அந்த மருந்தை எடுத்திட்டு வறேன்?'' என்றாள் அவள்.

''வேண்டாம், போய்ப் படும்மா. வேலை செய்யற குழந்தை. தூக்கம் கெட்டா நல்லதில்லேம்மா.''

கூடத்து அலமாரியைத் திறந்தாள். முதல் வரிசையில் அவள் வாங்கி வந்த இருமல் மருந்து திறக்கப்படாமலே இருந்தது.



''ஒரு வாய்கூட சாப்பிடலேபோல இருக்குதே'' கேட்ட படி மருந்துப் புட்டியைத் திறந்தாள்.

''இந்த இருமல், இந்த முட்டி வலி, எல்லாமே கட்டை யோடு போகட்டும்னு விட்டு விட்டேன். நீ ஏன் காசை வீணாக்கிக்கிட்டிருக்கே? சேத்து வச்சாலும் நாளைக்கு உபயோகமாக இருக்கும்'' முணுமுணுத்தார்.

மகள் ஸ்பூனில் கொணர்ந்த மருந்தைக் குடித்து விட்டு, ''போய் படும்மா'' என்று உத்தரவிட்டபடி அவர் தலை யணை மீது சாய்ந்து கொண்டார்.

அலமாரியை மூடி விட்டு அவள் தன் அறையில் பாய் மீது வந்து அமர்ந்தாள்.

தூங்க மனம் வரவில்லை.

அப்பாவின் மனதில் தளும்பி நின்ற வேதனை அவளையும்தான் வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது.

அவர் தமது வெறுப்பையும், கசப்பையும் அவ்வப் போது வார்த்தைகளில் உதிர்த்தார். அவள் விழுங்கிக் கொண்டு வேதனையில் வெந்தாள். அவ்வளவேதான்.

அறுந்து போன சிந்தனை மீண்டும் நினைவுத் தொட ராகியது. முதல் முதலாக அவனை அவள் கமலா வீட்டில் சந்தித்தபோது அது எதிர்பாராத சந்திப்பு. வாழ்க்கையில் ஏமாற்றமும்கூட அவளுக்கு எதிர்பாராததுதான்.

கமலாவிற்குக் கல்யாணமாகியிருந்தது. அவள் கணவன் பம்பாயில் வேலையாயிருந்தான். குடியிருக்க வசதியான வீடு கிடைக்காததால் கமலா பிறந்த வீட்டிலேயே இருக்க வேண்டி வந்தது. அவ்வப்போது அவளுடைய கணவன் வந்து போவது உண்டு. இம்முறை அவன் வந்த போது மகிழ்ச்சியான செய்தி யோடு வந்திருந்தான். அவனுக்குக் கோயம்புத்தூருக்கு மாற்றல் கிடைத்து விட்டது.

கம்பெனியின் கிளை நிறுவனத்திலே ஒரு நல்ல பதவிக்கு மாற்றம். அத்துடன் குடியிருக்க வீடும் எளிதாகக் கிடைத்து விட்டது. மனைவியை கூடவே அழைத்துச் செல்ல வந்திருந்தான்.

அவன் தனியாக வரவில்லை. பம்பாய் நிறுவனத்தில் அவனுடன் வேலை செய்த நண்பன் மதுரையைச் சேர்ந்தவன். கூடவே நான்கு நாள் வேலூரில் தங்கியிருக்க சம்மதித்து வந்திருந்தான்.

கமலா தையல் கலையில் மிகவும் தேர்ந்தவள். ஒழிந்த நேரங்களில் அவளிடம் தையல் கற்றுக் கொள்ள எதிர் வீட்டுக்கு ஓடுவது ஜெயந்தியின் வழக்கம். புதிய தினுசில் பாவாடை லேஸ் ஒன்றைப் பின்ன தோழிக்குச் சொல்லிக் கொடுத்திருந்தாள், கமலா. தொடர்ந்து பின்னிய ஜெயந்திக்கு சிறு குழப்பம். பலமுறை தவறு செய்து பிரித்துப் பின்னி அலுத்துப் போனாள். ''கமலா கணவனுடன் போய் விடுவாளே. பிறகு யார் அதைக் கற்றுக் கொடுப்பது?'' என்ற கவலை அவளுக்கு. அம்மாவிடம் சொல்லி விட்டு எதிர் வீட்டிற்கு அன்று மாலை விரைந்தாள்.

''வா உன்னைப் பத்தித்தான் நினைச்சிட்டு இருந்தேன்'' கமலா ஒரு மாதிரி சிரித்தாள்.

மாடி அறையிலிருந்து இறங்கி வந்த அவள் கணவன் உள்ளே வந்தான்.

''நாங்க கொஞ்சம் வெளியே போய்ட்டு வர்ரோம். ராத்திரி வெங்காய சாம்பார் வை. மறக்காதே. கதிரேசனுக்கு ரொம்பப் பிடிக்கும். ஒரு வெட்டு வெட்டுவான்'' வேடிக்கையாகக் கூறினான்.

அப்போதுதான் அவன் பின்னாலேயே படிகளில் வந்து கொண்டிருந்த அவனை முதன்முதலாக ஜெயந்தி பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான்.



சில்லென்ற குளிர் காற்று மேனியைத் தழுவியது போன்ற பரவசம். அவர்கள் வெளியே சென்றதும், கமலா தோழியின் பக்கம் திரும்பினாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறே? அவரும் நல்ல வேலையில் இருக்கிறாராம். இன்னம் கல்யாணமே ஆகலையாம்'' குறும்பாகச் சிரித்தாள்.

நெஞ்சு பதற, முகம் சிவக்க ஜெயந்தி தரையைப் பார்த்தாள். ''எனக்கு எதுக்கு இந்த விவரம்? நான் இந்த 'லேஸை' எப்படிப் பின்னுவதுன்னு கேக்கத்தான் வந்தேன்.''

''இதையும் கொஞ்சம் கேட்டுக்கோயேன். என் வீட்டுக்காரர் வந்தது முதல் சொல்லிக்கிட்டிருக்கார்.''

''என்ன சொல்கிறார்?''

''நாங்கள் இரண்டு பேரும் தோழர்கள். நீயும் ஜெயந்தியும் தோழிகள். கதிரேசன் மட்டும் ஒப்புக்கிட்டா...எவ்வளவு நல்லா இருக்கும்?''

''ஏன் நான் ஒப்புக்கிட வேணாமா?'' ஜெயந்தி பொய்க் கோபத்துடன் முகத்தைச் சுளுக்கினாள்.

''ஒப்புக்கிட உனக்குக் கசக்குதோ? ஒரு வழியில் அவர் எங்களுக்குத் தூரத்து உறவுகூட. நாலு நாள் இருக்கப் போறார். நீயே பார்த்து முடிவு செய்யேன்'' பரிகசித்தாள் அவள்.

ஜெயந்தி நெஞ்சு அடித்துக் கொள்ள, இன்பத்தின் சுமை தாளாது திணறினாள். ''கமலா சொல்லுவது போல் அந்தக் கதிரேசன் மட்டும் மனம் வைத்தால்...'' தனக்குள்ளே பல இன்பக் கனவுகள்...நொடிப் பொழுதில் எழும்பின.

# 4

**நா**ன்கு நாள்.

அவள் பலமுறை எதிர் வீட்டுப் பக்கம் பல காரணங் களைச் சாக்கிட்டுக் கொண்டு ஓடினாள். ஒவ்வொரு முறை யும் அவனைப் பார்க்கும்போது வியப்பும் பிரமிப்பும் மகிழ்ச் சியும் அவளை மாற்றி மாற்றி நிலை குலையச் செய்தன. இத்தனைக்கும் அவனிடம் அவள் பேசவே இல்லை. காந்த சக்தி வாய்ந்த பார்வையும் முகத்தில் தேங்கி நின்ற அந்த மோகனப் புன்சிரிப்பும்...அவளை மயக்கியே விட்டன.

தோட்டத்தில் பறித்த கனகாம்பரப் பூவைக் கூடை நிறைய எடுத்துக் கொண்டு கமலா உள்ளே வந்தாள். ஏதோ கேட்க வந்தவள் போல மூச்சிரைக்க ஓடி வந்தாள் ஜெயந்தி. முதல் நாள் எதேச்சையாகப் பார்த்த அவனை மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

''இந்தப் பூவைக் கொஞ்சம் தொடுத்துக் கொடு. நான் அடுப்பைக் கவனிச்சிட்டு வர்றேன். அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க'' கேட்டுக் கொண்ட கமலா, தோழியிடம் கூடையைக் கொடுத்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

தாழ்வாரத்தில் உட்கார்ந்தபடி ஜெயந்தி பூவைத் தொடுத்துக் கொண்டிருந்தபோது, மாடிப் படியில் ஓசை கேட்டது. மகிழ்ச்சித் துள்ளலுடன் நெஞ்சு பொங்கியது.

''ஆனந்தன் இன்னும் திரும்பலையா? எங்கே போயிருக்கான்னு தெரியுமா?'' கேட்ட அந்தக் குரலிலேயே அவள் மனம் சிலிர்த்துப் போனாள்.

சட்டென எழுந்தவள், பாதி கட்டிய கனகாம்பரப் பூச்சரம் கீழே நழுவியதைக் கவனிக்கவில்லை. முகம் சிவக்க, பேச முடியாமல் வெட்கத்தால் திணறினாள்.

''நீங்களா?...நான் என் நண்பன் ஆனந்தன் மனைவி கமலா அண்ணின்னு நினைச்சுட்டேன். மன்னிச்சிக்குங்க'' புன்னகை பூத்தபடியே அப்பால் சென்று விட்டான்.



ஏதோ அற்புதம் நிகழ்ந்து விட்டது போன்று கட்டுக் கடங்காத மகிழ்ச்சி அவளுக்கு. அவன் அவளிடம் பேசி விட்டானே? பிரமிப்புடன் அவன் சென்ற வழியைப் பார்த்து மெய் மறந்து நின்றாள்.

''என்னது, அப்படி மரமாயிட்டே! என்னைக் கூப்பிட்டா நான் சொல்லியிருப்பேனே. அப்படி என்ன பயம்? அவரு என்ன கடிச்சு முழுங்கிடுவாரா? சுத்தப் பட்டிக்காடு'' அடுப் படியில் இருந்து திரும்பிய கமலா அன்புடன் கடிந்து கொண்டாள். மீண்டும் பூத் தொடுக்கும் வேலையில் இரு வரும் அமர்ந்தனர்.

''அவருக்கு அம்மா மேலே ரொம்பப் பாசம். அவங்க பேச்சுக்கு மறு பேச்சே சொல்ல மாட்டாராம். அவங் களுக்கு நாங்கள் ஒரு கடுதாசி எழுதிப் போடப் போறோம்.''

''என்ன எழுதப் போறீங்க?''

''எங்கள் எதிர் வீட்டிலே ஓர் அழகான பெண் இருக்கா. வயசு பதினெட்டு. பம்பரமா வீட்டு வேலை செய்வாள். பத்தாவது வரை படிச்சிருக்காள். வீணைகூட வாசிப்பாள். ரொம்ப நல்ல குணம். உங்கள் மகன் கதிரேசனுக்கு ஏற்ற வள்னு எங்கள் அபிப்பிராயம். ஒரு நடை வேலூருக்கு வந் தால் அவளை நீங்கள் நேரிலேயே பார்க்கலாமே'' என்று எழுதிப் போடப் போறோம்.

''உனக்கு வேற வேலையில்லை. முன்னே பின்னே தெரி யாத ஆளோட என்னை ஜோடி சேர்க்கப் பார்க்கறே. நீ பொல் லாதவள்'' வெளியில் கோபமாக நடித்தாள் ஜெயந்தி.

கமலா சொன்னபடியே கடிதம் எழுதிப் போட்டாள்... அவள் மனதிற்குள்ளேயே மகிழ்ந்து போனாள்.

கமலா நினைத்ததை முடிப்பவள். ஊருக்குப் புறப்படும் முன்னர் கதிரேசனின் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதிப்

போடும்படி தன் தந்தையை வற்புறுத்தி இருந்தாள். அவரும் உடனடியாகத் தண்டபாணியின் குடும்பத்தைப் பற்றி விவரமாகக் கடிதம் எழுதி அனுப்பினார்.

சில தினங்களுக்குப் பின் அமிர்தம்மாள் பெண் பார்க்க நேரிலேயே வேலூருக்குப் புறப்பட்டு வந்து விட்டாள். ஜெயந்தியை அந்த அம்மாளுக்குப் பிடித்து விட்டது. பேச்சு வார்த்தைகளும் வேகமாக நடந்தன. ஒரு மாதத்திற்குப் பின் கதிரேசன் அவள் கழுத்தில் தாலியையும் கட்டி விட்டான். எல்லாம் அவ்வளவு வேகம். அவளாலேயே நம்ப முடியாத அளவு விரைவில் நடந்தேறியது.

முதலில் அவர்கள் இருவரும் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்று, தனிக் குடித்தனம் தொடங்குவது; பின்னர் தாயார் அங்கு வந்து சேர்ந்து கொள்வது என்று தீர்மானம்.

அந்த நீண்ட பயணத்தின் போது வழி நெடுகிலும் அவள் கணவன் அவளிடம் எதுவும் பேசவில்லை. ஏன்? தன் பெற்றோர்களை நினைத்த மாத்திரம் கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது அவளுக்கு. கட்டுப்படுத்த இயலாது சன்னல் மீது சாய்ந்தபடி விசும்பினாள்.

''எதுக்கு அழுகை! அழ வேண்டியவன் நான். முகத்தைத் துடைச்சிக்க, எல்லாரும் பார்க்கிறாங்க. மானம் போகுது'' அடிக் குரலில் அவளுக்கு மட்டும் கேட்கும்படி அதட்டினான் அவன்.

தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு. அவளை மயக்கிய அந்த மோகனப் புன்னகை மறைந்து, முகம் கடுகடுவென இருந்ததைக் கண்டு திகிலுற்றாள்.

அவள் என்ன குற்றம் செய்தாள்? எதற்காக அவள்மீது கோபம்? பொங்கி வந்த அழுகையை அடக்கினாள். புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தபடி, வெளியே இருளை வெறித்தபடி பயணத்தைத் தொடர்ந்தாள்.



**வி**டியற்காலை வேளை. கொலபாவில் அந்தச் சிறிய மாடிக் கட்டடத்தில் மூன்றாவது தளத்துப் பகுதி. அவர்கள் கதவைத் திறந்து சாமான்களை உள்ளே வைத்தனர். அவன் குளியலை முடித்து வந்தான்.

''நீ போய்க் குளிச்சிட்டு உன் சாமான்களை எடுத்து வச்சிக்க'' ப்ளாஸ்க்குடன் வெளியே சென்று விட்டான்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு, குளித்து முடித்து உடை மாற்றினாள். வெகு நேரம் சென்ற பிறகே அவன் திரும்பி வந்தான்.

''காப்பியும் தோசையும் கொண்டு வந்திருக்கேன். நான் ஆபீசுக்குப் போகணும். கதவை மூடிக்க. உனக்குப் பசிச்சா சமைச்சுச் சாப்பிட்டுக்க. சாமான்கள் எல்லாம் டப்பாக்களில் அலமாரியில் இருக்குது பார்த்துக்க. பாலுக்கும் ஏற்பாடு செய்திட்டேன். ராமன் கொண்டு வருவான்.''

என்னென்னவோ இனிய எதிர்பார்ப்புகளுடன் அன்பான மொழிகளுக்கு ஏங்கி நிற்கும் அவளிடம் அவளுடைய கணவன் ஏதோ ஒரு வேலைக்காரிக்கு உத்திரவிடுவது போல் விசித்திரமாக நடந்து கொள்கிறானே. இது ஏன்?

அவன் போன பின்பு கதவை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்; இப்படி அப்படி திரும்பினால் இடித்து விடுவது போன்ற குறுகலான அறைக்குள்ளே, கைதி போல் அடைபட்டு விட்ட உணர்வு. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. கொஞ்ச நேரம் விக்கி விக்கி அழுது விட்டாள்.

திடீர் என்று கதவு தட்டப்பட்டது.

வெளியே நின்றவனைக் கண்டு அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது.

''ராமன் வந்திருக்கிறேன்'' இந்தியில் கூறியபடி பால்

புட்டிகளையும், ஓர் அலுமினியக் கிண்ணத்தில் தயிரையும் வைத்து விட்டுப் போய் விட்டான்.

பின்னர் அவள் தெரிந்து கொண்டாள்—வீட்டு வேலைகள் செய்ய உதவும் அவனை எல்லோரும் ராமா என்று தான் அழைப்பார்கள் என்று. பத்து பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து, வீடு பெருக்கித் துடைத்து என்று வேலை செய்யும் ''ராமா'' அவர்களுக்கு பால் மட்டும் வாங்கித் தர ஒப்புக் கொண்டு இருக்கிறான். வீட்டு வேலைகளை அவள் செய்ய வேண்டும் என்றும் புரிந்து கொண்டு விட்டாள்.

வீட்டு வேலைகளைப் பற்றி அவள் சளைத்து விடவில்லை. வசதியாக வாழ்ந்து வழக்கம் இல்லாத குடும்பத்துப் பெண். அழுது ஓய்ந்த பின்னர் சாமான்களைத் தேடிப் பிடித்தாள். தேவையான பாத்திரங்களை எடுத்துக் குழாயடியில் தேய்த்துக் கழுவினாள். இருந்ததை வைத்துக் கொண்டு சமையலை முடித்தாள்.

பகல் பொழுதும் நகர்ந்து மாலை வந்தது. ஆனால், அவனைக் காணவில்லை; எப்பொழுது வருவேன் என்று கூடச் சொல்லவில்லையே?

கவலையுடன் மின் விளக்கைப் பொருத்தினாள். மேசை மீதிருந்த 'அலாரம்' கடிகாரம் டிக் டிக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. எங்கேயோ பக்கத்துப் பகுதிகளின் கதவுகள் சாத்தப்படும் சத்தம். அடுத்த பகுதியில் கணவன் மனைவி இருவரும் வேறு மொழியில் உரக்கப் பேசி சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

இரவு வெகு நேரம் கழித்து அவன் வந்தான். கதவைத் தட்டியபோது அவளுக்குத் திறக்கவே பயம்.

''யார்?''

''யார் வருவாங்க? நான்தான். வேற போக வழியில்லே. வீட்டுக்கு வந்திட்டேன்.''



சிடுசிடுப்புடன் உள்ளே வந்தான், கதிரேசன்.

அவள் அரண்டு போனாள். ''சாப்பாடு ஆறிப் போச்சு. விரைவா சுட வைக்கிறேன்'' அவள் திரும்பினாள்.

''வேண்டாம். நீயே சாப்பிட்டுக்க. நான் ஓட்டல்லே சாப்பிட்டாச்சு. இனிமே எனக்காக நீ காத்திருக்க வேணாம். நீயே சமைச்சிக்க. பசிச்சா சாப்பிட்டுக்க...என்ன அப்படிப் பார்க்கிறே?''

கேட்டபடி கால் அணிகளைக் கழற்றி அதை மூலையில் விட்டெறிந்தான். கோட்டைக் கழற்றி வீசினான். மற்ற ஆடைகளையும் தரை மீது வீசி விட்டு, லுங்கி ஒன்றைக் கட்டிக் கொண்டு வந்தான்.

கீழே தாறுமாறாகக் கிடந்த துணிகளை அவள் பொறுக்கிச் சேர்த்தாள். ஒழுங்காக அவற்றை மடித்து நாற்காலி மீது போட்டு விட்டு அடுப்பை மூட்டிப் பாயசத்தைச் சூடாக்கினாள். தம்ளரில் ஊற்றிக் கொண்டு அவள் வந்தபோது அவன் படுக்கையைத் தரை மீது விரித்துப் போட்டுக் கொண்டு காலைப் பேப்பரை விரித்துப் படித்தபடி உட்கார்ந்திருந்தான்.

''பாயசம் வச்சிருக்கேன். அதையாச்சும் சாப்பிடுங்க'' அவள் வெட்கத்துடனும் தயக்கத்துடனும் அவனிடம் தம்ளரை நீட்டியபடி மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''நம்ம அழகான கல்யாணத்துக்குப் பாயசம் ஒரு கேடா?''

தலையில் ஓங்கி அடித்த வேதனையில், தம்ளரை அவன் வாங்கிக் கொண்டு விட்டான் என்ற குழப்பத்தில் பிடியைத் தளர்த்தினாள்.

மறுகணம் அவன் உரக்கக் கத்தியபடி எழுந்தான். ''அசடே! பாயசத்தை மேலே ஊத்தி...ச்சீ! ஒரே பிசுபிசுப்பு —எறும்பு கடிச்சித் தொலைக்கும்?'' கத்தியபடி குளிய

லறைக்குள் ஓடிப் புகுந்தான். குழாயைத் திருப்பி விடும் ஒலி கேட்டது.

நடுங்கிப் போனாள். கீழே சிந்திவிட்ட பாயசத்தை ஈரத் துணியால் வழித்தெடுத்தாள். பிறகு துப்புரவாகத் தரையைச் சுத்தம் செய்தாள். மீண்டும் படுக்கையைத் தட்டி தயாராகப் போட்டு வைத்தாள்.

வேறு ஒரு வேட்டியைச் சுற்றிக் கொண்டு வந்தான் அவன். எரித்து விடுகிறவன் போல் கண்களில் கனல் தெறித்தது.

''பட்டிக்காட்டுச் சனியனை என் தலையில் கட்டி வச்சுட்டாங்க. இங்கிதம் தெரியாத மக்கு பிளாஸ்திரி. மூஞ்சியைப் பாரு முகரையை...''

அவள் பரக்கப் பரக்க விழித்தாள்.

''எங்க ஜெயந்தி அழகுப் பெண்ணாச்சே.''

அவள் அம்மா பெருமையாகச் சொல்வாளே, அப்படிப் பட்ட முகத்தில் அவன் என்ன குறை கண்டான்? எதற்காக இத்தனை கோபம்? ஆத்திரமும் அழுகையும் பொத்துக் கொண்டு வர, அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

''அழு நல்லா அழு! நீ வாய் விட்டு அழறே. நான் மனசுக் குள்ளேயே அழுதுகிட்டு இருக்கேன். எல்லாம் என் தலை யெழுத்து.''

கடுமையுடன் அதட்டி விட்டுப் படுக்கையை சுருட்டிக் கொண்டு வெளியே அந்தச் சிறிய பகுதியின் முன் பக்கத் தில் போட்டான். அறைக் கதவைக் காலால் உதைத்துத் தள்ளி மூடி விட்டுப் போய் விட்டான்.

ஒவ்வொரு நாளும் இதே கதைதான். குளித்து முடித்து அவன் கிளம்பி விடுவான். காப்பி தவிர எதுவும் அவனுக்கு வீட்டிலே கிடையாது. இரவு ஓட்டல் சாப்பாட்டை முடித்து



வெகு நேரம் கழித்து வீடு திரும்பினால், முன்னறையில் தனிமையில் படுக்கை.

''காய் வாங்கிட்டு வந்திருக்கேன். அரிசி இருக்குதா?'' இதைப் போல் வீட்டுத் தேவைகள் பற்றி பேச்சு. மற்றபடி அவர்கள் இடையே ஒரு பயங்கர மவுனம்.

ஒரே மாதத்தில் அவள் துரும்பாக இளைத்து விட்டாள். அழுதழுது ஓய்ந்தும் போனாள்.

ஒரு நாள் அவன் வெளியே கிளம்புமுன் அவள் துணிவை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

''வீட்டுக்கு எப்ப வருவீங்க?''

''அவசியம் தெரியணுமோ?'' ஆத்திரப்பட்டான் அவன்.

''எனக்குத் தனியா இருக்கப் பயமா இருக்குதுங்க.''

''அப்ப ஒண்ணு செய். உன் சாமான்களை எடுத்து வச்சிக்க. ஊருக்கு அனுப்பிடறேன். உன் அம்மா வீட்டில் பயமில்லாமல் இருக்கலாம்.''

திகைத்து விட்டாள் அவள்.

இப்போது இருந்த துணிவு அப்போது அவளுக்கு இருக்க வில்லை. இள வயது, கபடமற்றவள், அடக்கமாய் வளர்க்கப் பட்டவள்.

சொன்னபடியே, இரண்டு நாள் கழித்து, அவன் இவளைத் தன்னந்தனியே பெண்கள் வண்டியில் ஏற்றி ஊருக்கு அனுப்பி விட்டான்.

''சென்னையில் ரெயில் நிலையத்துக்கு வந்து உன்னைக் கூட்டிப் போறதுக்கு உங்கப்பாவுக்குத் தந்தி கொடுத்திட் டேன். வந்து கூட்டிப் போவார்.''

வண்டியை விட்டு இறங்கியபோது, அவள் தந்தையைக் கண்டதும் அலறித் துடித்தாள்.

நிலையத்தில் நின்றிருந்த பலர்...''யாரோ இறந்துட் டாங்க போலிருக்கு'' அவளைப் பரிதாபமாகப் பார்த்த அந்த நிகழ்ச்சியை எப்படி மறக்க முடியும்?

இப்பொழுது நினைத்தாலும் குபுகுபுவெனக் கண்ணீர் பெருகியது.

அப்போது எங்கோ கோழி கூவியது. விடிந்து விடும் போலிருந்தது. தூங்காமல் என்ன யோசனை? சிந்தனை களை உதறி விட்டுப் புரண்டு படுத்து உறங்க முயன்றாள்.

## 5

கடற்கரை சாலையில் காரை ஒரு புறமாக நிறுத்திப் பூட்டி விட்டு நடந்தான் கதிரேசன்.

கோடைப் புழுக்கத்தில் இருந்து விடுதலையைத் தேடி வந்தவர்களின் கூட்டம். மணற் பரப்பு முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்தது. தேங்காய் மாங்காய் சுண்டல்பையன் ஒருத்தன் குறுக்கே கத்திக் கொண்டு வேகமாக ஓடினான்.

அவன் ஒதுக்குப்புறமாக ஓர் இடத்தில் மணல் மீது வந்து உட்கார்ந்து கொண்டான்.

''முறுக்கு வேணுமா, தம்பி!'' குரலைக் கேட்டதும் எரிச்சலுடன் திரும்பினான்.

''வேண்டாம்'' என்று சொல்லத்தான் முதலில் நினைத் தான். ஆனால், ஆளைப் பார்த்ததும் ஒரு நொடியில் குழைந்து போயிற்று.

தகர டின் ஒன்றை இடையில் சுமந்து கொண்டு நைந்து கிழிந்து போன புடவையால் உடலை இறுக்க மூடியபடி அருகில் நின்றாள், வயதான ஒரு பெண்மணி.

அவன் மனதை வேதனை கப்பிக் கொண்டது.



அப்படித்தான் அவன் தாயும் ஒரு காலத்தில் நாள் முழுவதும் அடுப்பு அருகில் உட்கார்ந்து சுட்ட முறுக்கு களைத் தகர டின்னில் அடைத்துத் தூக்கிக் கொண்டு, தெருத் தெருவாக அலைந்து விற்று...அவனை ஆளாக்க உழைத்து ஓடாகி...

நெஞ்சிற்குள் துன்பம் உருண்டையாக அடைத்துக் கொண்டது. ''இரண்டு ரூபாய்க்கு முறுக்கு கொடுங்க...'' பர்சைத் திறந்து நோட்டை உருவி அவளிடம் நீட்டினான். ஒரு காகிதப் பையில் முறுக்கை எண்ணிப் போட்டு சுருட்டி அவனிடம் கொடுத்தாள் அவள்.

பக்கத்திலே ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டு இருந்த சிறுவர்கள் இருவரைப் பார்த்தான். கிழிந்த சொக்கா யும்-அழுக்குப் பிடித்த அரை நிஜாருமாக இருந்த சிறுவர் கள் கட்டாயம் மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை. கை தட்டி அவர்களைக் கூப்பிட்டான்.

ஓடி வந்த சிறுவர்களிடம் முறுக்குப் பொட்டலத்தைக் கொடுத்தான். மகிழ்ச்சியுடன் கத்திக் கொண்டு அவர்கள் மறு பக்கத்தை நோக்கி ஓடினர். அதைப் பகிர்ந்து கொள்ள அதற்குள் எங்கிருந்தோ ஒரு சிறுவர் கூட்டம் ஈசலைப் போல் சூழ்ந்து கொள்வதைக் கண்டான். சட்டென்று எழுந்து சிறிது தூரம் மணலில் நடந்து வேறு ஒரு பக்கம் சென்று உட்கார்ந்து கொண்டான்.

சிந்தனை எங்கேயோ கிளம்பி விட்டது.

மதுரையில் இருந்து பம்பாய்க்குப் புறப்பட்டு வந்த அமிர்தம், மகனிடம் ஏதும் கேட்கவேயில்லை. ஏற்கனவே அவளுக்கு நடந்தது எல்லாம் தெரிந்து விட்டிருந்தது. அந்த அதிர்ச்சியில் அவள் மவுனமாக இருந்தாள்.

ஒரு நாள் மாலை அலுவலகத்தில் இருந்து அவன் திரும்பி வந்தபோது, அவள் திடீரென்று மகனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''கணவன் சரியா அமையா விட்டால் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் துன்பத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது.''

பொதுவாக சொல்லி காப்பி தம்ளரை அவன் அருகே கொண்டு வந்து வைத்தாள்.

''சுத்தி வளைக்க வேண்டாம். விஷயத்துக்கு வாங்கோ ...'' காரமாகக் கேட்டான் மகன்.

''அந்தப் பெண் ஜெயந்தி கடிதம் போட்டிருக்கிறாள். படிச்சுப் பார்...''

''நான் ஏன் படிக்கணும்? கடிதம் உங்களுக்குத்தானே வந்திருக்கு?''

''உனக்கு நேரிடையா எழுத பாவம், அவளுக்குப் பயம். ஆனா, அதில் கண்டிருக்கிற சங்கதி உனக்குத்தான் எழுதப்பட்டிருக்கு.''

கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து மேசை மீது வைத்தாள்.

அவன் காப்பியை வேகமாகப் பருகி விட்டு, கடிதத்தைக் கையில் எடுத்துக் கோபத்துடன் பிரித்தான்.

''அன்புள்ள அத்தை அவர்களுக்கு,

வணக்கம் பல.

நீங்கள் பம்பாய்க்குப் புறப்படுமுன் தங்கள் வீட்டில் நடந்த சம்பவத்திற்கு நான் மிகவும் வருந்துகிறேன். மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

தம்முடைய ஒரே மகளுக்கு இழைக்கப்பட்டு உள்ள கொடுமையை என் அப்பாவால் ஏற்கவே முடியவில்லை.



தம் வாழ்க்கையில் இருந்து என்னை என் கணவர் ஒதுக்கி வைக்கும் அளவிற்கு நான் என்ன தவறு செய்து விட்டேன் என்று தெரிந்து கொள்ள அப்பா முயற்சித்தார். அது இயற்கைதானே? மருமகனுக்குப் பல கடிதங்கள் எழுதினார். பதிலே இல்லை.

இந்தச் சமயம் தாங்கள் பம்பாய் புறப்படப் போவதாக செய்தி கிட்டியது. கமலாவின் தந்தையுடன் மற்ற இரு நண்பர்களைத் துணை சேர்த்துக் கொண்டு அப்பா நேரே விசாரித்து அறிய மதுரைக்கே வந்து விட்டார். அப்பாவுக்கு முன் கோபம் அதிகம். வந்த இடத்தில் தமது ஆத்திரத்தை வார்த்தைகளாகக் கொட்டி விட்டார்.

பெற்றவரின் மனக் கொதிப்பை தாங்கள் புரிந்து கொள்ள முடியும்—அதனால் அவரை மன்னிக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

கணவன்-மனைவி இடையே இப்படி ஒரு பிரிவு ஏற்படும்போது, அதிகம் பாதிக்கப்படுகிறவள் மனைவிதான் என்று சொல்லத் தேவையில்லை. எத்தனையோ மூடி வைத்தும் உறவினர்கள்-தெரிந்தவர்கள் இடையே இங்கு என்னைப் பற்றி பல தவறான வதந்திகள் பரவத் தொடங்கி விட்டன. அவற்றைக் கேட்டு அம்மா இடிந்து போய் விட்டார்கள். இதனால் என் தந்தைக்கும் பெருத்த தலைக் குனிவு.

தங்கள் வார்த்தைக்கு என் கணவர் மிகவும் மதிப்புக் கொடுப்பவர் என்பது உண்மை. அதனால் தங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன். எனக்குத் தங்கள் மகனுடன் வாழ மீண்டும் ஒரு வாய்ப்பை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கெஞ்சுகிறேன்.

கணவன் என்ற நிலையில் எனக்கு எந்தவித ஆதரவும் தர வேண்டாம். நானும் எந்தவிதமான உரிமைகளையும் எதிர்பார்க்க மாட்டேன். தங்களுடைய மருமகள் என்ற நிலையில் தங்களுக்கு உதவி செய்ய என்னை

அங்கு தங்களோடு தங்க அனுமதித்தால் போதுமானது. இதனால் என் பெற்றோர்கள் தலை நிமிர்ந்து நடப்பார்கள். என் மேல் சுமத்தப்பட்டு இருக்கும் வீண் பழிச் சுமை குறையும்.

அத்தை! என் கண்ணீரைத் துடைத்து உதவி செய்யுங்கள்.

தங்கள் அன்புள்ள ஜெயந்தி.''

''உங்கள் வீட்டு வேலைக்காரியாகவாவது இருக்க அனுமதியுங்கள் என்று பெண்கள் புலம்பும் அந்தப் பழைய கதை இது'' கடிதத்தை வெறுப்புடன் வீசிப் போட்டான், கதிரேசன்.

''மனைவியைத் தள்ளி வைப்பது மட்டும் புதுவிதக் கதையோ? உன் பாட்டன் முப்பாட்டன் காலத்தில் இருந்த பெண்ணுக்கு ஆண் வழங்கும் அநீதி'' சீறினாள் அமிர்தம்.

''ஜெயந்தி இங்கே வருவது என்பதோ, என்னோடு சேர்ந்து வாழ்வது என்பதோ முடியாத காரியம். என் முடிவான தீர்மானம் இது.''

''அவள் அப்படி என்ன குற்றம் செய்தாள்? அதை யாவது சொன்னால் தேவலையே.''

''உங்கள் கண்ணீருக்கும் வற்புறுத்தலுக்கும் கட்டுப்பட்டு அவளைக் கட்டிக் கொண்டேன். பெரிய தவறு செய்து விட்டேன் என்று பின்னால்தான் புரிந்தது. பிரதிமாவை என்னால் மறக்கவே முடியலையே. நான் என்ன செய்யட்டும் அம்மா...?'' உரத்த குரலில் அவன் கத்தினான். முகமெல்லாம் ரத்தமாகச் சிவந்து போயிற்று. கணகளில் லேசாக நீர் தளும்பி நின்றது.

அமிர்தம் திகைத்துப் போனாள். அவன் அப்படிக் கொதித்து எழுவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.



''முடிவாக உன் தீர்மானந்தான் என்ன? ஜெயந்திக்கு நானாவது ஒரு பதில் போட வேணும் இல்லையா?'' தணிவான குரலில் மெதுவாகக் கேட்டாள்.

''உங்களுக்கு ஜெயந்தி வேணுமென்றால் அழைத்து வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நான் இங்கே கூட தங்கியிருக்க மாட்டேன். வேறே எங்கேயாவது தனியாக வசிக்க இடம் தேடிக் கொள்வேன். நல்லா யோசிச்சு நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். மகன் வேணுமா? மருமகள் வேணுமா?''

''வயசுக் காலத்திலே என்னென்னவோ நினைச்சுட்டு இருந்தேன். கடைசியிலே நீ என்னைப் பழி வாங்கிட்டே கதிரேசா! இது ஒரு கேள்வியா? உன்னைப் பிரிஞ்சி என்னாலே வாழ முடியாதுன்னு உனக்கே தெரியும்'' விம்மி அழுது கொண்டே அவள் உள்ளே சென்று விட்டாள்.

அதற்குப் பின் அந்த வீட்டில் ஜெயந்தி என்ற பெயரையே அவள் உச்சரிக்கத் துணியவில்லை.

காற்று வாக்கில் குப்பென்று கதம்ப மலரின் மணம்...

கிளுகிளுவென்று சிரிப்பொலி...

கதிரேசன் திரும்பிப் பார்த்தான். ஓர் இளம் ஜோடி மகிழ்ச்சியுடன் பேசியபடி மணலின் மீது அவன் அருகே சற்றுத் தள்ளி வந்து அமர்ந்து கொண்டனர்.

புதுமணத் தம்பதிகள் போலும்! அந்தப் பெண்ணின் கழுத்திலே மஞ்சளாக மின்னிய தாலிச் சரடு பளிச்சென்று அவன் கண்ணில் பட்டது.

ஒரு சிலிர்ப்புடன் மறுபடியும் கடல் பக்கம் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

அவர்களின் பேச்சுக் குரல், காற்றுடன் கலந்து அவன் காதில் வந்து விழுந்தது.

''ஒண்டியா வீட்டிலே கொட்டு கொட்டுனு உட்கார்ந் திருக்கேன். பயமா இருக்கு'' அவள் சிணுங்கினாள்.

''நாலு பேரோடு இருந்து விட்டு, இப்போ தனியா கணவனோட குடித்தனம் செய்ய வந்திருக்கே. பட்டண வாசம் முதல்லே அப்படித்தான் இருக்கும். அப்புறம் பழகி விடும். நீ பயப்படுவேன்னு தெரிஞ்சுதான் நான் வேலை முடிஞ்சதும் வீட்டுக்குப் பறந்தோடி வரேன்—வேணு மானா என் அம்மாவை ஊரில் இருந்து வரவழைக்கட்டுமா?''

''வேண்டாங்க. அவங்க வந்தால், இப்படி நாம் தினசரி கடற்கரை—சினிமான்னு கிளம்ப முடியுமா? கொஞ்ச நாளைக்கு நாம் இரண்டு பேரும் தனியா இருப்போம்.''

''அது சரி. உன் மேலே எனக்குக் கொஞ்சம் கோவம். நான் வரத்துகுள்ளே பக்கத்து வீட்டுப் பெண்ணை துணைக்குக் கூட்டிக் கொண்டு மளிகைக் கடைக்கு ஏன் போனே?''

''உங்களுக்கு இன்னிக்குப் பிறந்த நாள் ஆச்சே? பாயசம் வைக்கணும்னு ஆசையா இருந்தது. முந்திரிப் பருப்பு, ஏலக்காய் இதெல்லாம் இல்லே. வாங்கி வரப் போனேன்.''

''பாயசம் ரொம்ப நல்லாத்தான் இருந்தது. நான் வந்து ஸ்கூட்டரிலே உன்னைக் கூட்டிக் கொண்டு போயிருப்பேன். அத்தனை தூரம் நடந்து போய் வந்தாயேன்னு நினைச்சு வேதனைப்பட்டேன். கால்கள் வலிக்குதா...?'' அன்புடன் கேட்டான் கணவன்.

''நீங்கள் கூட தினமும் எத்தனையோ தூரம் வேலைக்கு ஸ்கூட்டரை ஒட்டிட்டுப் போய் வரீங்க. வீட்டுக்கு எத்தனை அலுப்பா வரீங்க?''

''அலுப்பெல்லாம் தெரியாமல் இருக்கத்தானே நான் வீட்டுக்குள் நுழைந்ததும் என் கன்னத்திலே...''



''போங்கோ? நாலு பேர் இருக்கிற இடத்திலே என்ன பேச்சு?'' அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.

குற்ற உணர்விலே நெஞ்சு வேகமாகத் துடிக்க, காதுகள் நெருப்பாக எரிய கதிரேசன் அங்கிருந்து எழுந்து காரை நோக்கி வேகமாகச் சென்றான்.

பொழுது அமர்ந்து இருள் வேகமாகப் பரவி வந்தது. சாலை விளக்குகள் பளீர் என்று எரியத் தொடங்கின. கடல் ஓயாது அலைகளைச் சுருட்டிக் கொண்டிருந்தது. இதமான குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. ஆனால், அவன் உள்ளத் திலே ஒரு பெரிய உலைக்களம் திகு திகு என்று எரிந்து கொண்டிருந்தது. அமைதியே இல்லையே?

காரின் கதவைத் திறந்து உள்ளே உட்கார்ந்தான். வீட்டுக்குச் செல்ல, காரைக் கிளப்ப சாவியைக் கையில் எடுத்தான்.

வீட்டிலே அவனை எதிர்கொண்டு அழைக்க யார் இருக் கிறார்கள்? ஒரே வெறுப்பு. பெருமூச்சுடன் அப்படியே இருக்கையில் சாய்ந்து விட்டான்.

## 6

அன்று அவனது அலுவலகத்தில் அரை நாள்தான் வேலை. வங்கியும் பகலோடு மூடி விடப்படும் என்று அவ னுக்குத் தெரியும்.

திடீரென்று ஒரு விசித்திர எண்ணம் ஏற்பட்டது.

அலுவலகத்தில் இருந்து அரை மணிக்கு முன்ன தாகவே அவன் கிளம்பி விட்டான்.

காரை அந்த வங்கிக்கு அருகே கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு காத்திருந்தான்.

வேலை முடிந்து, வங்கியில் இருந்து பலர் வெளிப் பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களையே அவன் உன்னிப் பாகக் கவனித்தான்.

அவள் வெளியே வந்ததும் காரை அவள் அருகில் கொண்டு நிறுத்தினால், திகைத்துப் போய் விடுவாள். வற் புறுத்தி அவளை வண்டிக்குள் ஏற்றிக் கொள்ள வேண்டும். இருவரும் எங்கேயாவது குளிர்ச்சியான ஓர் இடத்துக்குச் சென்று அமர்ந்து கொண்டு மனம் விட்டுப் பேச வேண்டும்.

''ஜெயந்தி...ஆறு ஆண்டுக்கு முன்னால் உன்னை அவ மானப்படுத்திய கதிரேசன் அல்ல நான். இப்போது நீ பார்க் கிறவன் முற்றிலும் மாறி விட்ட வேறு ஒருவன்! செய்த பிசகை எண்ணி உருகி—உள்ளம் கனிந்து ஈடு செய்ய ஒவ் வொரு வினாடியும் துடிக்கிறவன்—சத்தியம். இவனை இனி நீ நம்பலாம்'' வெட்கத்தை விட்டு ஒளிவு மறைவின்றிப் பேச வேண்டும் என்ற தீர்மானத்துடன்தான் அவன் வந்திருந்தான்.

அதோ ஜெயந்தி வருகிறாள்.

வெளியே உடலைப் பொசுக்கும் வெயில். ஏனோ குடை கொண்டு வரவில்லை. புடவைத் தலைப்பை தலை மீது வீசிப் போட்டுக் கொண்டு அவள் வேகமாக பஸ் நிலை யத்தை நோக்கிப் பதைபதைக்கும் வெயிலில் நடந்தாள்.

அவளைப் பின்தொடரக் காரைக் கிளப்பினான் அவன். எதிர்பக்கத்து நடைபாதையில் அவள் விரைந்து கொண் டிருந்தாள். சாலையில் இரு பக்கமும் போக்குவரத்து நெருக்க மாக இருந்தது. மேலே காரை ஓட்டிச் சென்று தகுதியான இடத்தில் அவள் நடந்த பக்கம் திருப்பிக் கொண்டு வருவ தற்குள்—

வேகமாக வந்து நின்ற பஸ்ஸில் அவள் ஏறிக் கொண்டு விட்டாள். பஸ்சும் நகர்ந்து விட்டது.



என்ன ஏமாற்றம்? அதற்குப் பின்னர் கதிரேசனுக்கு வீட்டிற்குப் போகக் கூட மனம் இருக்கவில்லை. உத்தேசம் ஏதுமின்றி காரை ஓட்டிக் கொண்டு போனான். வழியில் தென்பட்ட ஓட்டலில் புகுந்து சாப்பிட்டான். உணவுகூட அன்று நஞ்சாகக் கசந்தது. ஆனாலும், வீட்டிற்குச் சென்று குளிர்சாதன அறையில், நுரை ரப்பர் படுக்கை மீது ஓய்வாக சாய்ந்து கொள்ள மனம் ஒப்பவில்லை.

மண்டையைப் பிளக்கும் வெயிலில் ஜெயந்தியைக் கால் கடுக்க நடந்து அந்த நெருக்கமான சந்திலே வறுமை யும் வேதனையுமாக வாழத் தவிக்க விட்டு விட்டு, அவன் மட்டும் சுக போகங்களில் திளைப்பதா?

மிருகங்கள்கூட துணைக்கு இழைக்காத கொடுமை.

படிப்பு—பதவி இவை இருந்து என்ன? அவளிடம் மிருகத்திலும் கேவலமாக அல்லவா அவன் நடந்து கொண்டு விட்டான். தன் மீது அவனுக்குத் தாங்க முடியாத வெறுப்பு —கசப்பு.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் பெரிய மரத்தடியில் வண்டியை நிறுத்தி விட்டு, இருக்கையில் சாய்ந்து கொண் டான். சஞ்சலத்தாலும் களைப்பின் மிகுதியாலும் அவனை அறியாமலேயே கண் இமைகள் சொருகிக் கொண்டன.

விழித்துக் கொண்ட பொழுது நேரம் மாலையாகி விட்டதை உணர்ந்தான். எப்படி இப்படித் தூங்கினோம் என்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

காரைக் கிளப்பினான்.

எங்கே போவது?

வீட்டுக்குச் செல்ல மனம் இல்லை.

கடற்கரைப் பக்கம் காரைத் திருப்பினான்.

ஓயாது சுருண்ட அலைகள் போல் அவன் சிந்தனையும் கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொட்டு இழுத்துப் புரண்டு கொண்டிருந்தது.

திடீர் என்று நடைபாதை மீது விளக்கு ஒளியில் வேகமாக நடந்து சென்ற பெண்ணின் மீது அவனது பார்வை பட்டது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

அதே உயரம்...மெல்லிய கொடி போன்ற அதே தோற்றம் ...அதே துள்ளும் நடை...திகிலுடன் உற்றுப் பார்த்தான்.

ஆனால், அவள் யாரோ ஒருத்தி.

எட்டு ஆண்டுக்கு முன்னர் அவன் மனதைக் கவர்ந்து, அவன் உணர்வுகளை ஆட்டிப் படைத்த அந்தப் பிரதிமா அவள் இல்லை.

நெஞ்சிலே ஓர் ஆவேசம்—கோபம்—வெறுப்பு எல்லாம் கணப் பொழுதில் குமுறிக் கொண்டு எழுந்தன. அவன் எத்தனை பெரிய முட்டாளாக இருந்து விட்டான்.

பிரதிமாதான் பேச்சு-மூச்சு-உயிர் என்று மயங்கித் தன்னைத் தானே அழித்துக் கொண்டு விட்டானே!

படித்த முட்டாள்! பண்பு கெட்ட மிருகம்.

தன்னையே சாடிக் கொண்டு மணலில் வந்து உட்கார்ந்தான்.

**தொ**ழில்துறை பயிற்சியில் வெற்றி பெற்றவுடன் அவனுக்குப் பம்பாயில் வேறு ஒரு நிறுவனத்தில்தான் முதலில் வேலை கிடைத்தது. குடியிருக்க வீடு கிடைக்காத தொல்லை. அதனால் அமிர்தம் மகனைப் பிரிந்து கொஞ்ச காலம் மதுரையிலேயே தனியே வாழ வேண்டி இருந்தது.



சர்க்கேட் அருகே குஜராத்தியர் வசித்த ஒரு மாடிப் பகுதியில் முன் அறை ஒன்றில் சில மாணவர்கள் தங்கி இருந்தனர். பலத்த சிபாரிசின் பேரில் அவர்களுடன் கூட்டாக வாடகையைப் பகிர்ந்து கொண்டு வசிக்க அந்த அறையில் கதிரேசனுக்கு இடம் கிடைத்தது. மிகவும் சிறிய அறை. பலதரப்பட்ட நான்கு மாணவர்கள்-விடுமுறை நாள் முழுவதும் டேப் ரிகார்டுகளையும்-டிரான்சிஸ்டரையும் ஓயாது கத்த விட்டுத் தொல்லை கொடுத்தனர். தேர்வு நாளில் விடிய விடிய விளக்கை எரித்து அவனது தூக்கத்தைக் குலைத்தனர். அங்கே தங்கியிருப்பது அவனுக்கு மிகவும் சங்கடமாகத்தான் இருந்தது. அலுவலகமும், ஓட்டலும் அருகில் இருப்பதை உத்தேசித்து பல்லைக் கடித்துக் கொண்டு முடங்கிக் கிடந்தான்.

அப்பொழுது ஒரு விடுமுறை நாள் காலையில் மாணவர்கள் நால்வரும் ஊரைச் சுற்ற விடிந்ததுமே கிளம்பி விட்டிருந்தனர். அவன் எழுந்து குளித்து விட்டு காப்பியைத் தேடிக் கொண்டு ஓட்டலுக்கு ஓட விருப்பமின்றி புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டு இருந்தான்.

நகங்களால் யாரோ கதவைப் பிராண்டுவது போன்ற ஓசை. எழுந்து திறந்தான்.

இருபது வயதிருக்கும். ஓர் அழகான இளம் பெண் ஒடிய உயரமாக வெள்ளை வாயில் சேலையில் பட்டு நிலாவாக பளிச்சென்று நின்று கொண்டிருந்தாள்.

''நூறு ரூபாய்க்குச் சில்லறை கிடைக்குமா? உங்களிடம் அல்லது யாரிடமாவது கிடைக்குமானு அம்மா கேட்டுப் பார்க்கச் சொன்னாங்க?'' ஆங்கிலத்தில் கேட்ட அவள், முத்துப் பற்கள் சிறிதளவு பளிச்சிட முறுவலித்துக் கொண்டு நின்றாள்.

''இருக்குமே'' அவள் கையில் பிடித்திருந்த நோட்டை வாங்க நீட்டிய கதிரேசனின் கரம் ஏனோ நடுங்கியது. நெஞ்சிலே ஒரு பரபரப்பு...

பபளவென்று மின்னிய அந்தக் கருவிழிகள் இரண்டையும் வியப்புடன் பார்த்தபடி பெட்டியைத் திறந்து சில்லறையை எடுத்துக் கொடுத்தான்.

''தாங்க் யூ'' என்றவள் உடனே போய்விடவில்லை. ''நீங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தானே? பார்க்கும் போதே தெரிகிறது'' மெல்லச் சிரித்தாள்.

''நீங்கள்?'' அவனும் விடவில்லை. துணிவுடன் கேட்டு விட்டான்.

''அம்மா வங்காளி, அப்பா குஜராத்தி. நான் பம்பாய் வாசி'' சொல்லும் பொழுதே அவள் சிரித்து விட்டாள்.

சதங்கை போன்ற அந்தச் சிரிப்பு அவனை என்னவோ செய்தது.

''நீங்கள் படிக்கிறீர்களா?'' தொடர்ந்து கேட்டான் அவன். அவளுடன் நாள் முழுவதும் பேசிக் கொண்டு இருக்க வேண்டும் போன்ற ஆவல்.

''கல்லூரியை விட்டு இரண்டு வருடம் ஆகிறது. ஏற்றுமதி வியாபார நிறுவனம் ஒன்றில் வரவேற்பாளராக வேலை பார்க்கிறேன்'' கூறி விட்டு அவள் வேகமாகச் சென்று விட்டாள்.

சில நாளைக்குப் பின்னர் அவளை அவன் அந்தக் கட்டடத்தின் வாசலில் ஒரு நாள் காலை மீண்டும் சந்தித்தான். அவன் வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். அவளும் பஸ்ஸைப் பிடிக்க விரைந்து கொண்டிருந்தாள்.

''ஹாய் நீங்களா?'' என்றாள், அவள்.

திரும்பிப் பார்த்து புன்னகைத்தான். ''நீங்களும் இங்கே அருகில்தான் தங்கியிருக்கிறீங்களா!''

''பக்கத்து கட்டடத்தில்—மூன்றாவது மாடி—எண் எட்டு—பிரதிமா என் பெயர். ஒய்வாக இருந்தால் சாயங்காலம் வாருங்கள். அம்மா உங்களைச் சந்திக்கப் பிரியப்படுவாங்க. உங்கள் பெயர்?''



''கதிரேசன்...!'' அவன் சொல்லி முடிப்பதற்குள் அவள் தெருவின் குறுக்கே வேகமாக நடந்து அப்பால் சென்று மறைந்து விட்டாள்.

அவனுக்கு முதலில் மிகவும் கூச்சமாகத்தான் இருந்தது. முன் பின் தெரியாத ஒரு பெண்ணிடம் பழகக் கொஞ்சம் பயமாகவும் இருந்தது. ஆனாலும், அவளை மறுபடியும் சந்திக்க வேண்டும் என்று பிடரியைப் பிடித்து உந்திய அந்த ஆவேசமான ஆவலை அடக்கவே முடியவில்லை.

அன்று மாலை அவளைக் காணப் புறப்பட்டான். மூன்றாவது தளத்திற்கு வந்து, எட்டாவது எண் அறையின் அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவைத் திறந்த பெண்மணி, தன் புடவைத் தலைப்பைத் தலை மீது இழுத்து மூடிக் கொண்டாள். அவள்தான் பிரதிமாவின் தாயார் என்று கதிரேசன் புரிந்து கொண்டான்.

அம்மாவும் பெண்ணும் தனியே ஒரு சிறு பகுதிக்குள் வாழ்ந்து கொண்டு இருந்தனர். அவளது வருமானத்தில்தான் குடித்தனம் நடந்தது. வசதியாக ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள்தான். குடும்பத் தலைவர் மாரடைப்பில் மரணம் அடைந்த பின்னர் வாழ்க்கையில் சரிந்து போய் விட்டனர். சுருக்கமாக அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டான். தன்னைப் பற்றியும் அளவோடு சொல்லிக் கொண்டான்.

வெகு நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டு இருந்து விட்டு ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினான்.

இப்படித் தொடங்கிய அவர்களின் நட்பு மிகவும் நெருக்கமாகத் தொடங்கியது. அலுவலகத்திற்குப் போன நேரம் தவிர மீதிப் பொழுதில் அவன் பிரதிமாவுடன் சுற்றாத

இடம் பாக்கி இல்லை. அப்படி ஓர் ஈர்ப்பு. சாதாரணமாக ஆரம்பித்த நட்பு, முற்றிக் காதலாகி, திருமணம் செய்து கொள்வது என்ற தீர்மானத்தில் வந்து நின்றது.

## 7

ஒரு நீண்ட விடுமுறையின்போது தாயின் வேண்டு கோளைத் தட்ட முடியாது கதிரேசன் மதுரைக்கு வந்திருந்தான்.

பரவலாக செய்தி எப்படியோ அமிர்தம் வரை எட்டி விட்டிருந்தது.

கல்யாணத்திற்கு வேறு இடத்தில் தன் மகனுக்குப் பெண் தேடிக் கொண்டு இருந்தாள் அவள்.

தாயின் வற்புறுத்தலைத் தாங்க முடியாது முடிவில் அவன் உண்மையை அவளிடம் சொல்லி விட்டான்.

அமிர்தம் ஒரு பத்தாம்பசலி. தன் வயதான காலத்தில் தன்னை நன்றாகக் கவனித்துக் கொள்ள, தன் உறவுக்குள் ளேயே மருமகளைத் தேடி எடுக்க விரும்பினாள்.

மொழி வேறு—மாநிலம் வேறு என்ற பெண்ணை மகன் தேர்ந்து எடுத்து விட்டதை அறிந்து நடுங்கிப் போனாள்.

''கதிரேசா! சொல்வதைக் கேள். இந்த எண்ணத்தை விட்டுடு—வேண்டாம். இங்கேயே ஒரு தமிழ்ப் பெண் ணாகப் பார்த்து உனக்குப் பிடிச்ச இடத்திலேயே கட்டிக் கொள். என்னைப் பத்தியும் கொஞ்சம் யோசித்துப் பார். அந்தப் பெண்ணோட எனக்கு ஒத்து வராது போயிட்டா வயசுக் காலத்திலே நான் ரொம்ப திண்டாடிப் போவேன். நல்லா நினைச்சுப் பார்.''

கெஞ்சினாள்—மிஞ்சினாள்—அழுதாள்.

ஆனால், ஒன்றுக்கும் கதிரேசன் அசைந்து கொடுக்க வில்லை.



பிரதிமாதான் அவன் மனைவி என்று முடிவு செய்து விட்டான். வேறு சிந்திப்பதில் பயன் இல்லை. பிடிவாத மாக மறுத்து விட்டான்.

''அப்படின்னா நான் மதுரையிலேயே தங்கி விடறேன். உன் மனசுக்குப் பிடிச்சவளைக் கட்டிக் கொண்டு நீ பம்பா யில் வாழலாம். என்னால் அங்கே வந்து இருக்க முடியாது'' தாயாரும் தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

கரைகாணாக் காதலுக்கு முன் தாய்ப் பாசம் தோல்வி அடைந்தது

பம்பாய் திரும்பியதும் உடனடியாகப் பிரதிமாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை இனி தாகத் தொடங்கி விடுவது என்ற உறுதியுடன் அவன் திரும் பினான்.

''உங்களுடன் முக்கியமாக ஒன்று பேச வேண்டும். ஜுஹு பீச்சுக்குப் போகலாமா?'' அழைத்தாள் பிரதிமா.

''சந்திர மண்டலத்துக்கு வரீங்களா?'' என்றாலும் அவன் தயார். அப்படி ஒரு மயக்கம் அவள்மீது.

பேல் பூரியைச் சாப்பிட்டுக் கொண்டே அவள் பேசி னாள். ''கதிரேசன்! உங்களுக்கு ஒரு திகைப்பூட்டும் சங்கதி சொல்லப் போகிறேன். நீங்கள் ஊருக்குப் போயிருந்தபோது கனடாவில் குடியேறியிருக்கும் என் மாமன் எங்களைப் பார்க்க வந்தார். அவருக்கு வாங்குவாரில் பெரிய வீடும், சொந்த வியாபாரமுமாக வசதியாக வாழ்கிறார். அவருடைய ஒரே மகன் வக்கீலுக்குப் படித்து விட்டுச் சொந்தமாகத் தொழில் தொடங்கி சிறப்பாக நடத்திக் கொண்டு இருக் கிறாராம்...''

கேட்கக் கேட்க அவனுக்குப் பகீர் என்றது. என்ன சொல்ல இப்படி சுற்றி வளைக்கிறாள்?

''மாமன் மகனுக்கு என்னைத் திருமணம் செய்து கொடுக்க பேச்சு வார்த்தைகள் நடந்தன. அம்மா ஒப்புக் கொண்டு விட்டாங்க.''

அதிர்ச்சியில் பேச முடியாது அவனுக்கு நெஞ்சும் வாயும் உலர்ந்து போயின.

''நம் காதல்...? நாம் கல்யாணம் செய்து கொள்வதாக எடுத்திருக்கும் முடிவு...?'' பதட்டமாகக் கேட்டான்.

''அம்மா பிடிவாதமாக இருக்காங்க'' அவள் சர்வ சாதாரணமாகச் சொன்னாள்.

''நாம் ஒருவரை ஒருவர் விரும்புவது உன் தாயாருக்கு ஏற்கனவே தெரிந்த சங்கதிதானே? அவங்க ஒரு விதத்திலே நமது நட்பிற்கு ஆதரவு காட்டினவங்களாச்சே! அப்படியிருக்கையிலே ஏன் இந்த மனமாற்றம்?'' கோபத்தை அவனால் அடக்க முடியவில்லை.

''ஒரு காலத்தில் நல்லா இருந்தது எங்கள் குடும்பம். அப்பாவுக்குப் பிறகு ரொம்பவும் இறங்கி வந்து விட்டோம். வறுமையிலே அம்மா தவிச்சுப் போனாங்க. மாமன் மகனை மணந்து கொண்டால் நான் சுகமாக வாழ்வேன்னு நம்பு கிறாங்க. உங்களால் அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைத் தர இயலாதுன்னு தர்க்கிக்கிறாங்க.''

அவமானத்திலே உடல் முழுவதும் அனலாக எரிய நெஞ்சு குமுற அவன் சீறினான். ''அம்மாவை விடு! உன் முடிவு? அதைத் தெரிந்து கொள்ளலாமா?'' ஆத்திரமும் துக்க மும் நெஞ்சை அடைத்தது. மண்டைக்குள்ளே ஓர் எரிமலை வெடித்து விட்டது போன்ற கொதிப்பு.

''நான் அம்மாவுக்குக் கட்டுப்பட்ட பெண். அம்மாவின் முடிவை நான் மீற முடியாது. அப்பா இறந்த பின்பு அம்மா பட்ட துன்பத்துக்கு எல்லையே இல்லை. என்னாலாவது



அம்மா சுகப்படட்டுமே! இதுதான் நம் கடைசி சந்திப்பு. என்னை மறந்துவிட வேண்டும்னு கேட்டுக் கொள்ளத்தான் உங்களை இங்கே தனியே அழைத்து வந்தேன். நாம் இனி சந்திப்பதை அம்மா சம்மதிக்க மாட்டாங்க...''

மணலைத் தட்டிக் கொண்டே அவள் எழுந்தாள். உடலில் இருந்து உயிர் பிரிந்து விட்டது போன்றதொரு தொய்வு உணர்வில் அவன் அன்று எப்படித்தான் வீடு திரும்பி னானோ அவனுக்கே விளங்காத அதிசயம்!

அதற்குப் பின்னர்... சில தினங்களில் பிரதிமாவின் மாமன் மகன் திலீப் கனடாவில் இருந்து வந்தான். அவர் களுக்கு மிகவும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. ஒரு மாத விருந்துக்குப் பின்னர் அவள் தன் கணவனுடன் வாழ வெளிநாட்டிற்குப் புறப்பட்டுப் போய் விட்டாள்.

பிரதிமாவின் காதலை இழந்த பிறகு கதிரேசனுக்கு வாழவே பிடிக்கவில்லை. மனம் ஒடிந்து, உற்சாகம் இழந்து தனிமையில் அவன் தவித்துக் கொண்டிருக்கையில்தான் ஆனந்தனின் நட்பு கிடைத்தது. அத்துடன் நண்பன் வேலை செய்த நிறுவனத்திலேயே உயர்ந்த சம்பளத்தில் திறமைக்குத் தக்க ஒரு வேலையும் கிடைத்தது. நண்பன் வசித்த கொலபா விலேயே ஓர் அறையைத் தேடிக் கொண்டான். வேலை மாற்றம், இடமாற்றம் இரண்டும் கொஞ்சம் ஆறுதலைக் கொடுத்தது என்றாலும் அவனால் பிரதிமாவின் நினைவை அடியோடு உதற முடியவில்லை.

அவன்மீது உயிராக இருந்த பிரதிமாவால் அவனை எப்படி கணப் பொழுதில் மறக்க முடிந்தது? அவனால் ஏன் முடியவில்லை. ரத்தத்தில் புகுந்து உள்ளத்து மூலை முடுக் கெல்லாம் அவள் நினைவு ஒன்றி கொண்டு விட்டது போன்ற நினைப்பும், இரவும் பகலும் அவளையே எண்ணி உருகித்

தவித்தான். ஊமையாக அவன் உள்ளம் புலம்பிப் புண்ணாகியது.

அந்தச் சமயந்தான் அவன் வேலூருக்குத் தன் நண்பனுடன் ஒரு சில நாள் தங்கியிருக்க வந்திருந்தான். ஜெயந்தியைக் கண்ட பொழுது முதலில் அவனுக்குக் கல்யாணத்தைப் பற்றிய எண்ணமே ஏற்படவில்லை. அதே நேரம், ஆனந்தனின் பேச்சையும், அம்மாவின் வற்புறுத்தலையும் அவனால் ஒதுக்க முடியவில்லை. அத்துடன் ஓர் எண்ணம்கூட.

ஜெயந்தியை மணந்து கொண்டால், ஒரு சமயம் பிரதிமாவை மறக்க இயலுமோ?...

ஆனால், அது ஒரு விஷப் பரீட்சையாக முடிந்து விட்டது என்பதை விரைவில் புரிந்து கொண்டு விட்டான்.

திருமண மேடையில் வந்து உட்கார்ந்த உடனேயே அவன் அதை உணரத் தொடங்கி விட்டான்.

மற்றவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அவன் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது பெரிய தவறு என்று எண்ணினான்.

ஜெயந்தியைப் பார்க்கும் பொழுது எல்லாம் அவனுக்குப் பிரதிமாவின் நினைப்பே ஏற்பட்டது.

படிப்பிலும்-அழகிலும்-பழகும் முறையிலும் பிரதிமாவுக்கு ஜெயந்தி ஒரு விதத்திலும் ஈடாக மாட்டாள் என்று நினைத்தான்.

ஏக்கத்தில் வெறுமையாகி விட்ட அவன் உள்ளத்திலே ஜெயந்தியால் நிறைவு கொடுக்க முடியாது என்று நம்பினான்.

அவனது உணர்வுகளுடன் ஒன்றிக் கலந்து...இணைந்து பிணைந்து வாழக் கூடிய பக்குவம் ஜெயந்திக்குக் கிடையாது என்று கருதினான்.



இந்தக் கல்யாணம் ஓர் அர்த்தமற்ற நிகழ்ச்சி. அம்மாவின் பிடிவாதத்தால் நடப்பது. இதற்கு தான் ஒப்புக் கொண்டது தவறு. இப்படியே எழுந்து ஓடி விட்டால்...?

அவனது உள்ளப் போராட்டங்களும், ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொள்ள இயலாத அவனது கோழைத்தனமும் ...ஜெயந்தி மீது ஆத்திரமாக வெடித்தன. அவளை வார்த்தைகளால் வதைத்தான். செய்கையால் அவமானப்படுத்தினான். அப்பொழுதும் அவனது ஏமாற்றமும், மனக் கொதிப்பும் அடங்கவேயில்லை.

அவளை மனைவி என்ற நினைவில் வீட்டில் பார்க்கும் போதெல்லாம் தன் காதலின் தோல்வி-பிரதிமாவை இழந்து விட்டது-இவற்றை அவனால் தாங்கவே முடியவில்லை. மண்டை சுக்கல் தூளாகி விடும் போன்று உணர்வுகள் கனத்து, உள்ளம் தடுமாறிப் போனான். போலியான வாழ்க்கையை நீடிக்க விரும்பாது அவளை பிறந்த வீட்டிற்குத் திருப்பி அனுப்பி விட்டான்.

அவன் செய்தது மன்னிக்க முடியாத மாபெரும் குறைதான். ஆனால், அவனது உள்ளத்தை வாட்டி வதைத்த உணர்வுகளின் போராட்டத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே?

பிரதிமாவை மறக்க இயலவில்லை—அவனது இழப்பின் ஏக்கம் ஜெயந்தி மீது வெறுப்பாகப் பொங்கிக் கொண்டு வளர்ந்தது. யாரிடம் இந்த உண்மையை அவன் சொல்லிக் கொள்ள முடியும்? சொன்னால், புரிந்து கொள்ளத்தான் முடியுமா?

அமிர்தம் வந்து பம்பாயில் அவனுடன் தங்கத் தொடங்கிய பின்பு இரண்டு தடவை மருமகளைப் பற்றிய பேச்சை எடுத்தாள். கதிரேசன் விட்டுக் கொடுக்காது பிடிவாதமாக இருக்கவே அவள் மவுனமாகி விட்டாள்.

காலம் நழுவிச் சென்றது. ஜெயந்தியின் நினைவும் வெகு தொலைவுக்குச் சென்று மறைந்தது. அவனது வாழ்வும் தவறான பாதையில் கோணலாகப் போகத் தொடங்கியது.

கானல் நீரை குடிதண்ணீர் என எண்ணி மயங்கிச் செல்லும் பாலைவனப் பயணி போல், பிரதிமாவின் போலி அன்பைக் காதல் என்று எண்ணி எங்கேயோ போய்க் கொண்டிருந்தவனுக்கு, அம்மாவின் மரணத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியும் துன்பமும் விழிப்பைக் கொடுத்தன.

''யாரும் இல்லை'' என்ற தனிமை உணர்வில் தவித்த போதுதான், மெல்ல ஜெயந்தியின் நினைவு நிழலாக ஊர்ந்து வரத் தொடங்கியது.

இப்போது ஜெயந்தியை நேரில் அந்த வங்கியில் பார்த்த பின்னர் தன் முட்டாள்தனத்தை அவன் நொந்து கொள்ளாமல் இருக்கவே முடியவில்லை.

அவன் கண்களுக்கு அப்போது ஏன் இவளின் அடக்க மான அழகு புலப்படவில்லை? அவளது பணிவு மனதைக் கவரவில்லை? கபடமற்ற சுபாவம் அவனது இரக்கத்தைத் தூண்டவில்லை?

அன்று காட்டு மனிதனாக நடந்து கொண்டவனை இன்று அவள் திரும்பிப் பார்க்க மறுத்து விட்டால்?

இப்போது அவள் ஒரு பட்டதாரி-வங்கியில் வேலை பார்க்கிறாள். வங்கித் தேர்வுகளில் வெற்றி கண்டு பெரிய அதிகாரியாகப் பதவியில் உயரக் கூடும்.

இந்நிலையில் இனி அவனின் உதவி அவளுக்குத் தேவையா?

ஒரு சமயம் இந்த இடைவெளி காலத்தில் அவள் வேறு ஒருவனை விரும்பியிருந்தால்?

அந்த நினைவு நெருப்பாக நெஞ்சைச் சுட, வேதனை யுடன் அவன் எழுந்தான்.



## 8

**வ**ழக்கம்போல் வாயிற் கதவு திறந்து கிடந்தது.

ஓட்டமும் நடையுமாக உள்ளே புகுந்த ஜெயந்திக்கு மூச்சடைத்தது.

சட்டெனக் கதவைச் சாத்தித் தாளிட்டபடி, அதன் மீதே களைப்புடன் சாய்ந்து கொண்டாள்.

நெஞ்சு வெடித்து விடும் போல் பயத்தில் துடித்தது. வெயிலில் நடந்து வந்ததால் உள்ளே ஒரே இருட்டு. பார்வை நிதானத்திற்கு வர சில வினாடிகள் சென்றன.

இது மூன்றாவது தடவை.

கதிரேசன் அவளை ஏன் பின்தொடர்கிறான்?

வழியில் மடக்கிப் பேச்சுக் கொடுத்து விவாகரத்துக்கு ஒப்புக் கொள்ளும்படி அவளை வற்புறுத்தத்தான் இந்தச் சூழ்ச்சியோ?

அன்று வங்கிக்கு வந்ததுகூட இந்த நோக்கமாகத்தான் இருக்கும்.

துக்கம் நெஞ்சைக் கனமாக அழுத்தியது. கண்களில் நீர் தளும்பியது.

உள்ளே போகக் கூட மனமின்றி கதவைப் பிடித்துக் கொண்டபடியே நின்று இருந்தாள்.

கசப்பான நினைவு கண் முன் விரிந்தது. பொங்கிய அழுகையைச் சமாளித்துக் கொண்டு ஈரமான கன்னங் களைத் துடைத்துக் கொண்டாள்.

**ம**கனுடன் குடித்தனம் செய்யப் பம்பாய்க்குப் புறப் பட்டுச் சென்ற மாமியாருக்கு அவள்தான் துணிவாக அந்தக் கடிதம் எழுதினாள். சில நாளில் பதிலும் வந்தது.

''நான் எத்தனையோ எடுத்துச் சொன்னேன்.

என் மகன் பிடிவாதமாக இருக்கிறான்.

நான் வேண்டாத தெய்வம் இல்லை. இனி இந்தப் பிரச்சனையில் முடிவு காலத்தின் கையில்தான் இருக்கிறது. ''பொறுமையாக இரு'' என்பதைத் தவிர எனக்கு வேறு ஏதும் சொல்லத் தோன்றவில்லை.''

ரத்தினச் சுருக்கமான பதில். படித்ததும் அவள் மனம் இடிந்து போய் விட்டாள். அழ முடியாத அளவு துயரத்தால் மனம் மரத்துப் போய் விட்டது.

சில நாளைக்குப் பின் கதவு இடுக்கு வழியே தபால் காரன் தள்ளி விட்டுப் போன மற்றொரு கடிதத்தை ஆவலுடன் எடுத்துப் பார்த்தாள்.

அவளுடைய கணவனின் கையெழுத்து.

ஆசையும் பயமும் உந்த நடுங்கும் விரல்களால் கடிதத்தைப் பிரித்தாள்.

''நாம் இருவரும் ஒன்றாக வாழ்வது என்பது நடக்க இயலாத செயல்.

போலியாக இந்த உறவை நீடிக்க வைப்பதில் இருவருக்கும் பயன் ஏதும் இல்லை.

வக்கீலைக் கலந்து ஆலோசித்தேன்.

நீயும் நானும் மனம் ஒப்பினால், இந்தப் பந்தத்தில் இருந்து விடுதலை பெற முடியும் என்கிறார்.

எனவே விவாகரத்து பற்றித் தீவிரமாக சிந்தித்து உன் முடிவைத் தெரிவிக்கவும்.

இதனால் ஏற்படும் எல்லாச் செலவுகளையும் ஈட்டுத் தொகையையும், நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன்.''

கடிதத்தைப் படித்தவள் அதிர்ச்சியினால் மயக்கம் அடைந்து விட்டாள்.



கண் விழித்தபோது தாயின் மடிமீது தலையைச் சாய்த்துக் கொண்டு தாழ்வாரத்தில் கிடப்பதை உணர்ந்தாள். அப்பாவும், கமலாவின் தந்தையும் அருகே கவலையுடன் அமர்ந்து இருந்தனர்.

''உடம்புக்கு இப்போ எப்படிய்மா இருக்கு?'' தாயார் கண்ணீர் உகுத்தாள்.

''நான் இன்னமும் ஏன் செத்துப் போகலையம்மா? போய்ட்டதா நினைச்சிட்டேன்.''

விம்மிய மகளைப் பார்க்க முடியாதவராய், துண்டை முகத்தில் மூடியபடி வாசலுக்கு ஓடினார், அப்பா. துக்க நிகழ்ச்சி நடந்த வீடு போல அன்று அவர்கள் வீட்டில் அப்படி ஓர் அலங்கோலம்.

அந்தக் கடிதத்திற்கு அவள் பதில் எழுதவே இல்லை.

அதற்குப் பின்னர் அப்பாதான் மருமகனுடன் கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டார். வக்கீல் வீட்டிற்கு அலையாக அலைந்தார். அவரது ஆலோசனைப் படியே பலவித முறைகளையும் தெரிவித்துக் கடிதம் எழுதிப் பார்த்தார். எல்லாம் கிணற்றில் போட்டக் கல்லாயின. அவன் தொடர்ந்து நீண்ட மவுனத்தைக் கடைப்பிடித்தான்.

அவன் தாயாருக்கு உடம்புக்கு அதிகமான போது போட்ட கடிதத்திற்கும் பதில் இல்லை. அவளது மரணச் செய்தியைத் தெரிவித்தபோது கூட இரண்டு வரி அனுதாபச் செய்தி வரவில்லை. முடிவில் அவள் மாமியாரும் இறந்து போனதைப் பற்றியும் அவன் தெரிவிக்கவில்லை.

இப்படி வாழ்வு தாழ்வு ஒன்றிலும் அவளுக்குச் சம்பந்தம் இல்லை என்று ஒரேயடியாக ஒதுக்கி விட்டவன் ஏன் இப்பொழுது அவளைப் பின் தொடர்கிறான்? காரணம் கட்டாயம் இருக்கத்தான் இருக்கிறது. தண்டபாணி மருமகனைப் பற்றி மறந்து விட்டாலும், உறவினர்கள் மறக்கவில்லை.

அவ்வப்போது அவர்களைப் பார்க்க வந்தவர்கள் காப்பியையும், பலகாரத்தையும் சாப்பிட்டு விட்டு, பதிலுக்கு அவள் மனதைக் கலவரப்படுத்தி விட்டுத்தான் போய்க் கொண்டு இருந்தனர்.

''உன் மருமகனை பம்பாய் விமான நிலையத்தில் பார்த்தேன். முன்னைவிட ஆள் ஜோராக இருக்கான். ஆனால், நடவடிக்கைதான் மோசமாகிட்டுது'' ஜாடையாக மாமா சொன்ன செய்தி.

''என் மகனைப் பார்க்கப் பம்பாய் போனபோது கதிரேசனை தாதர் பக்கம் ரெயில் நிலையத்தில் பார்த்தேன். ஆமா, அவன்கூட ஒரு பொண்ணு இருந்திச்சே. அது யார்?'' இப்படி ஒரு செய்தி.

''ஒரு வேளை அவளைக் கட்டிக்கத்தான் நம்ம குழந்தையை இப்படி இம்சை செய்கிறானோ, பாவி!'' இது பெரியப்பாவின் கதை.

''பம்பாயே சிரிக்குது! இதே போக்கில் போனால் கதிரேசன் உருப்பட்டால் போலத்தான். எத்தனை சம்பாதிச்சால் என்ன? சிகரெட்—குடி—பெண்கள் சிநேகிதம். சே! சே! நம்ம பசங்க வெளியூர் போனாலே கெட்டுப் போயிடுதுங்க. அதனால்தான் என் மருமகனுக்கு இங்கேயே கிடைச்ச வேலை போதுமய்யான்னு கண்டிச்சி சொல்லிட்டேன்'' அப்பாவின் நண்பர் அடித்துப் பேசி உதிர்த்த தகவல்.

நாளுக்கு ஒரு கதையும் பொழுதுக்கு ஒரு செய்தியுமாக நாட்கள் நகர்ந்தன. அவற்றை கேட்டு அவமானத்தினால் அணுஅணுவாக அவள் சிதைந்தாள்.

கதிரேசன் கண்டபடி வாழ்கிறான்—வேறு ஒருத்தியை மணக்கத் திட்டமிட்டு விவாகரத்து கேட்கிறான் என்ற அளவிற்குத் தெரிந்து கொண்டிருந்தாள். ஆனால், அதற்கு அவள்



அசைந்து கொடுக்கப் போவதில்லை. வாழாவெட்டியாக வம்பர்கள் வாயிலே விழுந்து புரண்டாலும் அக்கறை இல்லை. ''கதிரேசன் மனைவி'' என்ற நிலையில்தான் அவளது கடைசி மூச்சு அவளை விட்டுப் பிரியும். எக்காரணத்தைக் கொண்டும் உரிமையை விட்டு விடப் போவதில்லை. தன் மனதிற்குள் அவள் திடமாக ஏற்றுக் கொண்ட சவால் இது.

அதை முறியடிக்க அவன் இப்போது முயற்சிக்கிறான். யாரையோ மணக்க விரும்பி நேரடியாக அணுகி, விவாகரத்து வாங்கத்தான் இப்படிப் பின்னால் தேடிக் கொண்டு வருகிறான். அப்பாவிடம் பேசத் துணிவு இல்லை. பெண்ணை வழியில் மடக்கி எளிதாக வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற எண்ணமோ?

கதிரேசன் சென்னையில் இருப்பது அவளுக்குத் தெரியும். அத்துடன், அவனது வஞ்சக எண்ணமும் புரிந்து விட்டது என்று அப்பாவிடம் சொன்னால்...

"நீ வந்திட்டியா அம்மா!'' அப்பா சமையல் அறையில் இருந்து கூப்பிட்டார்.

திடுக்கிட்டு, விழிப்படைந்தவள்போல் முகத்தைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள் ஜெயந்தி.

சமையல் அறையில் அப்பா மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைத்து இருந்தார். திக்கு முக்காடச் செய்யும் அளவுக்கு அறைக்குள் மண்ணெண்ணை நாற்றம். அவருக்குப் பழக்கம் இல்லாத வேலை. திரியைத் தாழ்த்த மறந்து விட்டதால், புகையும் நாற்றமுமாக சூழ்ந்து கொண்டு இருந்தன.

''தள்ளிக்கிடுங்க அப்பா. எதுக்கு நீங்க சிரமப்படுறீங்க? நான்தான் வந்திடுவேனே.''

''கஞ்சியைச் சுட வைக்கலாம்னு எழுந்தேனம்மா.''

கதிரேசனைப் பற்றிய சிந்தனையில் குழம்பிக்கிட்டிருந்த அவளுக்கு நினைப்பில்லை. வேலைக்குப் போகும் முன் அப்பாவுக்குத் தயாரித்து வைத்த கஞ்சியைச் சூடாகப் பிளாஸ்கில் ஊற்ற மறந்து விட்டிருந்தாள்.

''மன்னிச்சுடுங்க அப்பா. இருமலோட நீங்க கஷ்டப் படறீங்க. உங்களைத் தனியே விட்டு விட்டு வேலைக்குப் போகிறதே தப்பு. அத்தோட பசியா விட்டு விட்டுப் போயிட் டேன். அதை நினைச்சா மனசு கஷ்டப்படுது'' அவள் அடுத்துத் திரியை சீர் செய்து அடுப்பை ஒழுங்காக எரிய விட்டாள்.

விரைவாக கஞ்சியை சூடாக்கி தம்ளரில் ஊற்ற எடுத்துக் கொண்டு கூடத்திகு வந்தாள். அப்படியே அந்தச் சங்கதியை யும் அப்பாவிடம் சொல்லி விட வேண்டும் என்ற துடிப்பு.

''சாப்பிடுங்க அப்பா; இன்னும் கொஞ்ச நேரத்தில் பூண்டு ரசம் வைச்சு, புதினா துவையலோட சூடா சாதம் சமைச்சுப் போடறேன். வெறும் கஞ்சியைக் குடிச்சா உடம் பிலே தெம்பு எப்படியப்பா வரும்?'' சொன்னபடி அருகே வந்து பலகை மீது உட்கார்ந்தாள்.

''எனக்கு நம்பிக்கையே இல்லையம்மா'' வெறுப் புடன் கஞ்சியை எடுத்து ஒரு மடங்கு விழுங்கி விட்டு, ''ஒரு துண்டு பாக்கு எடுத்திட்டு வா. வயித்தைப் புரட்டுது'' என்று தண்டபாணி அரற்றினார்.

''என்னப்பா செய்யுது? ஏன் எப்படியோ இருக்கீங்க?'' பதற்றமாக அருகில் வந்து அவர் நெற்றியை அவள் தொட் டாள். திடுக்கிட்டுப் போனாள். கடுமையான காய்ச்சலால் அப்பா அவதிப்படுகிறாரே?

''எப்போ பிடிச்ச காய்ச்சல்? எங்கிட்டே சொல்லலையே'' கலவரத்துடன் அவரைப் பலகை மீது மெதுவாகச் சாய்ந்த வாக்கில் படுக்க வைத்தாள்.



''காலையிலே நேரத்தோட வேலைக்குக் கிளம்பிடறே. என் கஷ்டத்தை வேற சொல்லி உன்னைக் கலவரப்படுத்து வானேன்னு ''கம்னு'' இருந்திட்டேன். வயிற்றைக் குமட்டுது. வாந்தி எடுத்துக் களைத்துப் போயிட்டுது. ஒரு வாய் கஞ்சியை யாவது சூடாக்கிச் சாப்பிடலாம்னு எழுந்தேன்'' திணறினார் அவர்.

''அப்பா!'' அவள் துக்கத்தினால் திணறினாள்.

''அழாதே! என் கவலையெல்லாம் ஒண்ணே ஒண்ணு தான். எனக்கு ஏதாச்சும் ஆயிட்டா முன்னே பின்னே பழக்கம் இல்லாத இந்த ஊரில் தனியா சின்னப் பொண்ணு நீ என்னம்மா செய்வே? அதையே நினைச்சு நான் பயந்து நடுங்குகிறேன் அம்மா'' கலங்கினார் அவர்.

அப்படியே நேர்ந்துட்டால்...அனாதையாக அவள் இவ் வளவு பெரிய சென்னை நகரில்...'பகீர்' என்ற உணர்வு அடி வயிற்றில் சில்லிட்டது. துன்ப நினைவை உதறினாள்.

''அப்பா! தக்க மருந்து சாப்பிட்டா எல்லாம் சரியாகப் போயிடும். அதுக்குள்ளாற மனசு தளர்ந்து போகலாமா?'' ஜெயந்தி அன்புடன் கடிந்து கொண்டாள்.

''உன் வாழ்க்கையை ஒழுங்கு செய்ய பல தடவை முயற்சித்தேனம்மா. பலன் இல்லாது போச்சு. அதனால் கோழையாகிட்டேன். வயசும் நோயும் என் சக்தியையெல் லாம் இப்போ குடிச்சிட்டது. இனி உனக்கு நான் ஆதரவு தரும் தந்தையில்லையம்மா. உன் தலை மேல ஏறி உட் கார்ந்திருக்கிற பாறாங்கல்—பெரிய சுமை.''

''அம்மா ஜெயந்தி...இப்படிக் கிட்ட வாம்மா'' தழு தழுத்தது அவர் குரல். கண்களில் ஆறாக நீர் புரண்டது. இடையே பேச முடியாது இருமல் வேறு தடை செய்தது.

''என்னப்பா வேணும்...'' துயரமும் அச்சமுமாக அருகில் வந்து உட்கார்ந்தாள்.

''என்னை மன்னிச்சிடும்மா'' அவர் தொண்டை அடைத்தது. ''ஆற அமர யோசிக்காமல், படிச்சவன், பார்த்தா நல்லா இருக்கிறான், கை நிறைய சம்பாதிக்கிறான்னு தப்புக் கணக்குப் போட்டு, உன்னை ஒரு பாழுங்கிணத்தில் தள்ளிட்டேனே. அதிலிருந்து உன்னை மீட்டுக் கரையேற்றாமல் அப்படியே தவிக்க விட்டுப் போகப் போறேன். அதை நினைச்சு...'' அவர் குழந்தை போல் விம்மினார்.

மனம் கரைந்து போனாள் மகள். தகப்பனது கண்ணீரைத் துடைத்தாள். ''அழாதீங்க. என் விதி அப்படி இருக்கும் போது நீங்கள் என்ன செய்திருக்க முடியும்? அதைப் பத்தி இப்ப எதுக்காகப் பேசணும்? நான் போய், அடுத்த தெருவில் இருக்கிற டாக்டரைக் கூப்பிட்டுக்கிட்டு வறேன். கொஞ்சம் அமைதியா படுத்திருங்க. அப்பா'' சமாதானப்படுத்தி விட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

## 9

ஜெயந்திக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

பார்வையை மறைத்த கண்ணீரை உதறியபடி தெருவில் இறங்கினாள்.

காய்ச்சலில் தவிக்கும் அப்பா ஏற்கனவே மனம் குமைந்து கொண்டு இருக்கிறார். ''உங்கள் மருமகன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறார். பயமாக இருக்கிறது'' என்று கூறி அவள் மேலும் அவரை எப்படிக் கலவரப்படுத்த முடியும்? முதலில் அப்பாவுக்கு உடம்பு சரியாகட்டும்.

அவள் டாக்டரைத் தேடி விரைந்தாள். டாக்டர் வந்து பார்த்து, தைரியம் சொல்லி மருந்து எழுதிக் கொடுத்துச் சென்றார்.

இரண்டு நாளில் தண்டபாணி குணம் அடைந்தவர் போல் காணப்பட்டார்.



திங்கட்கிழமை அவள் வேலைக்குப் போக வேண்டியிருந்தது. தயக்கத்துடன்தான் அவள் தந்தையை தனியே வீட்டில் தங்க விட்டுச் சென்றாள். பக்கத்து வீட்டு அம்மாள் பரிதாபப்பட்டுக் கொண்டு உதவ முன் வந்தாள். பகல் வேளைக்குக் கஞ்சியைச் சூடாக்கி அவருக்குக் கொடுத்து அனுப்புவதாக ஒப்புக் கொண்டிருந்தாள். அப்படியே ஒரு கண் அவரைக் கவனித்துக் கொள்வதாகவும் வாக்குக் கொடுத்தாள்.

இருந்தும் அவளுக்குக் கவலையாகத்தான் இருந்தது. அப்பா அன்று காலை மிகவும் சோர்ந்து காணப்பட்டார். முதல் நாள் அவளை அருகில் வைத்துக் கொண்டு வெகு நேரம் பேசினார். ஒரு சமயம் அந்த அலுப்பாகக்கூட இருக்கலாம்!

''அவசரம் என்றால்-தொலைபேசியில் கூப்பிடறேன் பயப்படாதே'' அடுத்த வீட்டு அம்மாள் அபயம் அளித்த பின்னர்தான் அவள் வீட்டை விட்டு நகர்ந்தாள்.

சிந்தனை அலை பாய, அவள் அமைதியின்றி வேலை செய்து கொண்டு இருந்தாள். அன்று காலை அவள் டைப் அடித்த கடிதங்களில் எத்தனை பிழைகள்! தொலைபேசியின் மணி கிணுகிணுக்கும் போதெல்லாம் தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு. ஒரு பயங்கர எதிர்பார்ப்பு உணர்வில் தவித்துப் போனாள்.

தேநீர் நேரத்தின் போது அவளுக்கு இருக்கை கொள்ளவில்லை. எழுந்து முகத்தைக் கழுவிவர பின்னால் இருந்த அறைப் பக்கம் சென்றாள். பெண்கள் பகுதி இரண்டு அறைகளாகப் பிரிந்திருந்தது. இடையே ஒரு சிறு தடுப்பு. முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு பொட்டிட்டு சீர் செய்தபடி கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

இரவு முழுவதும் பலமுறை ரகசியமாக அழுதழுது ஓய்ந்ததன் பலனாக இமை ஓரங்கள் சிறிது வீங்கிக் காணப்பட்டது. கண்களிலும் ஒரே எரிச்சல். முகத்திலே வாட்டம்.

பவுடர் காம்பாக்டைத் திறந்து பஞ்சினால் லேசாக முகத்தின் மீது ஒத்திக் கொண்டாள்.

இடைத் தடுப்பு வழியே பக்கத்து அறையில் பேச்சுக் குரல் கேட்டது. குழாயைத் திருப்பும் ஒலி. பீங்கான் தொட்டியில் முகம் கழுவும் ஓசை. வளைகளின் கலகலப்பு. இரண்டு பெண்களின் கீச்சுக் குரல்-கிளு கிளு நகைப்பு-எல்லாம் தொடர்ந்து கேட்டன.

''காம்பாக்''டை மூடி பைக்குள் வைத்துவிட்டு வெளியே வரத் திரும்பியவள், அப்படியே நின்று விட்டாள். அவர்கள் அவளைப் பற்றித்தான் பேசிக் கொண்டு இருந்தனர். மூச்சு விடப் பயந்தவளாய் குறுகிப் போய், அவள் நின்று விட்டாள். நெஞ்சு திக்திக்கென அடித்தது.

''ஒரு வேடிக்கை தெரியுமா? இந்த ஜெயந்தி இருக்காளே, அவள் பெரிய ஆளு! நான் கண்டுபிடிச்சிட்டேன்.''

''என்ன கண்டுபிடிச்சிட்டே? சொல்லு! என் மண்டை வெடிக்குது.''

''ஜெயந்திக்கும் அவள் கணவனுக்கும் ஏதோ தகராறு. அதனால் இவள் தனியா இவள் அப்பாவோட இருக்கான்னு தானே நாம எல்லாரும் நினைக்கிறோம்.''

''ஆமாம்.''

''இல்லே. இவள் தனியாகவே இல்லை. கண்கவர் காதலன் ஒருவன் இருக்கான்.''

ஜெயந்தி திடுக்கிட்டாள். உடல் அனலாக எரிந்தது. இது என்ன? புதுக் குழப்பம்? அடாப் பழி!

''ஒரே பார்வையில் நான் விஷயத்தைப் புரிஞ்சுக்கிட்டேன். போன வாரம் ஓர் ஆண் அழகன் வெளிர் நீல சட்டைக் காரன்-கருப்புக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் பிடித்த படி-டெல்லர்கிட்ட பேசிக்கிட்டு நின்றானே- கவனிச்சியா?''



''ஆமாம்! ஏதோ 'பேங்க்' நேரத்தை விசாரிச்சிட்டிருந்தான்.''

''ஆமாம்! நீ சுத்த பைத்தியம். வாய்தான் ஏதோ விசாரிச்சுதே தவிர அவன் பார்வை முழுசும் ஜெயந்தி பக்கமே இருந்திச்சு. அவளோ அவனைப் பார்க்காதது மாதிரி பார்த்தாள். அவன் லேசாகச் சிரிச்சான். எல்லாத்தையும் நான் உன்னிப்பா கவனிச்சுட்டேன். எனக்கு உடனே விளங்கிட்டது.''

''பார்த்தால் ரொம்ப அடக்கமாக இருக்காளே.''

''அத்தனையும் வேஷம். சனிக்கிழமை மாலைஅவன் காரோட இவளுக்காக பாங்க் எதிரே அந்தப் பெரிய மரத்தடியில் காத்துக்கிட்டு இருந்தான். அதையும் பார்த்தேன். இவள் வெளியே வந்ததும் உடனே காரோடு கிளம்பிட்டான். இதெல்லாம் முன் ஏற்பாடு. பஸ்ஸில் போறதா மத்தவங்களுக்குப் போக்குக் காட்டிட்டு இவள் கொஞ்ச தூரம் போய் காதலனோட கார்லே கிளம்பி விட்டிருக்கா....''

பாவிகளா! அவன் என்னைத் தொட்டுத் தாலி கட்டிய கணவனடி—காதலன் அல்ல! என்று 'ஓ'வெனக் கத்திக் கூக்குரலிட்டு அழ வேண்டும் என்று ஆத்திரம் அவளை உலுப்பியது.

கதிரேசன் அவளுக்கு வாழ்வைத்தான் தர மறுத்தான். இப்போது அவப் பெயரையும் அல்லவா தர வந்திருக்கிறான். உண்மையைச் சொன்னால்கூட அங்கு உள்ளவர்கள் நம்பவா போகிறார்கள். இப்படி ஒரு பழி வேறு ஆரம்பமாகி விட்டிருக்கிறதே? ''அடக் கடவுளே!'' கண்ணீரைச் சமாளித்தபடி உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள்.

அடுத்த அறையில் அவளைப் பற்றி வீண் வதந்தி பேசியவர்கள் யார் என்று அறியக் கூட மனம் இல்லை. வெறுப்பும் கசப்புமாக அவள் தாழ்ப்பாளை சத்தத்துடன்

நீக்கி விட்டு கதவைத் திறந்து கொண்டு வேகமாக முன் பக்கம் சென்று விட்டாள்.

அலுவலகப் பையன் அவளுக்கு வைத்து விட்டுப் போயிருந்த ஆறிப் போன தேநீரை எடுத்துக் குடித்தாள். இருக்கையில் அமர்ந்து கொண்டு, எவர் முகத்தையும் காண விருப்பமின்றி வேலையில் மூழ்கினாள்.

அது சமயம் தொலைபேசி கிணுகிணுத்தது.

''உங்களுக்குப் போன் வந்திருக்கும்மா.''

பையன் கூறியதும் அவள் தளர்ந்து விட்டாள்.

அப்பாவுக்கு என்ன?

திகில், குழப்பம்.

தள்ளாடியபடி தொலைபேசி அருகே சென்றாள்.

''அலோ, ஜெயந்திதானே பேசறது?''

மறு முனையில் ஒலித்த குரல் அவளை மெய்மறக்கச் செய்தது.

உலகமே சுற்றுவது போன்ற பிரமை.

காதும் முகமும் ''ஜிவ்''வென்று ரத்தம் பரவிய பரபரப்பு.

''ஆமாம்'' மென்று விழுங்கினாள்.

''நான்தான் கதிரேசன் பேசறேன். ஒரு முக்கிய விஷயத்தைப் பத்தி உன்னை சந்திக்க விரும்புகிறேன்.''

குமுறும் எரிமலை போல அவள் ஆத்திரத்தில் பொங்கினாள்.

பதில் பேசாமல் 'பட்'டென்று தொலைபேசியை வைத்து விட்டுத் தன் இருக்கைக்கு விரைந்தாள்.

அன்று மாலை அவள் ஒரு முடிவுடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தாள்.

அப்பாவிடம் இனி மூடி மறைப்பதில் பயனில்லை.



காய்ச்சல் விட்டு இப்போது கொஞ்சம் குணமாகி விட்டிருக்கிறார். கதிரேசன் தொலைபேசி மூலமாகக்கூட அவளைத் தொடரத் தொடங்கியிருக்கிறான் என்ற உண்மையை அவருக்கு உணர்த்திவிட வேண்டும்.

வேறு வழியில்லை. இல்லையென்றால், வங்கியில் அவள் தொடர்ந்து வேலை பார்ப்பது இயலாத செயல்.

அவருடைய மகளை மனைவியாக ஏற்று வாழ மறுத்த மருமகன், அவள் பிழைப்பிலேயும் மண்ணை அள்ளிப் போடப் புறப்பட்டிருக்கும் விஷயத்தை அப்பா கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேகமாக சந்திற்குள் நுழைந்தவள், மெய் பதற உள்ளம் துடிக்க நின்றாள்.

அவளது வீட்டு வாயில் முன்னால் சிலர் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்...

எப்படியோ வாயிலை அடைந்தபோது அப்பாவின் நண்பர் ரத்தினம் அவள் வரவிற்காகக் காத்திருப்பவர்போல் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

''நல்ல வேளை, நீயும் வந்திட்டே! வாம்மா.''

''அப்பா...'' பேச முடியவில்லை அவளால்.

''உடம்பு அதிகமாயிட்டுது. எக்கச்சக்கமான காய்ச்சல், வாந்தி. டாக்டர் உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்துடணும்னு சொன்னார். என் பையனும் சம்சாரமும் அவரை டாக்சியில தூக்கிப் போட்டுக்கிட்டுப் போயிருக்காங்க.''

''எந்த ஆஸ்பத்திரி, சித்தப்பா?'' அவள் அழ ஆரம்பித்தாள். அடி வயிறு சங்கடம் செய்தது.

''பணத்தைப் பார்த்தால் ஒண்ணும் ஆகாதுன்னு இங்க பக்கத்தில் இருக்கிற குமுதா நர்சிங் ஹோமுக்கு எடுத்துக்கிட்டுப் போயிருக்காங்க.''

''பரவாயில்லே சித்தப்பா! அப்பா பிழைச்சாப் போதும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அங்கே என்னை அழைச்சிகிட்டுப் போங்க. நான் அப்பாவை உடனடியா பார்க்கனும். நான்...'' அவள் விம்மி அழுதாள்.

ரத்தினம் அவளுக்கு ஆறுதல் கூறி, ஒரு டாக்சி பிடித்து, அவளை அழைத்துப் போனார்.

டாக்சியில் இருந்து இறங்கி வேகமாக உள்ளே சென்ற வள் தந்தை அனுமதிக்கப்பட்டிருந்த அறைக்குள் விரைந்தாள்.

ஆனால், அதற்கு முன்பே தண்டபாணி இவ்வுலகில் இருந்து விடுதலை பெற்றுக் கொண்டு சில நிமிடம் ஆகி யிருந்தது.

## 10

அன்று காலை கதிரேசனுக்கு அலுவலகத்தில் வேலை குவிந்து கிடந்தது. அவன் பார்வைக்கும், ஒப்புதல் கையெழுத் திற்கும் கொண்டு வந்து வைக்கப்பட்ட கோப்புகள் ஓர் அடுக் காக அவனைப் பயமுறுத்தின. முதல் வாரம் முழுவதும் அவன் விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தான். பின்னர் தினமும் அலு வலகத்திற்கும் அவளது வீட்டிற்கும் அலைந்து கொண்டிருந் தான். புறக்கணிக்கப்பட்ட வேலை இப்பொழுது கழுதைச் சுமையாகத் தலையை அழுத்தியது.

கோப்புகளைப் புரட்டிக் கொண்டு வேகமாக கடிதங் களைப் படித்துக் கையொப்பமிட்டான். மேஜை மீது பையன் கொண்டு வந்து வைத்த கண்ணாடி கூஜா தண்ணீரையும் இடையே குடித்து முடித்து விட்டான். அப்படி நாவை வரட்டியது தாகம். நெஞ்சே வெடித்து விடும் போன்ற துக்கத்தில்-இறுக்க உணர்வில், குளிர்சாதன அறையில்கூட ஒரே புழுக்கம்! அடிக்கடி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.



காருடன் அவளை இருமுறை தொடர்ந்துங்கூட தோல்வி யுற்றுப் போனான். பின்புதான் அவனுக்கு அந்த நினைப்பு வந்தது. அன்று காலை வங்கியில் வேலையாக இருந்தவளை நடுவில் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேச முயற்சித்தான்.

''அலோ'' என்ற அந்தப் பட்டுக் குரலில்தான் எத்தனை வெறுப்பு?

அவன் சொல்ல வந்ததைக் கேட்க விரும்பாது முகத்தில் அடித்தது போல் போனை டக்கென்று வைத்து விட்டாளே?...

வெகு நேரம் அவன் அதிர்ந்து போய் செயலற்று உட் கார்ந்திருந்தான்.

திருமணமான புதிதில் பம்பாயில் அவனுடன் தங்கி யிருந்த அந்தச் சில நாட்களின்போது, அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட அஞ்சி நடுநடுங்கி மிரட்சியுடன் விழிப் பாளே, அதே ஜெயந்தியா என்ற அதிசயம்.

காலம் அவளை இப்படியா மாற்றி விட்டது—எத்தனை அசட்டையாக தொலைபேசியைக் கீழே வைத்து விட்டாள் என்ற வியப்பு.

அவள் அவனைச் சந்திக்கவோ, பேசவோ விரும்ப வில்லை.

ஏன்?

மனம் மாறி விட்டாளா?

அல்லது—

பல பல எண்ணி பதைபதைத்துப் போனான்.

அவன் மட்டும் அவள் இல்லாது தன் வாழ்க்கையைத் தனிமையிலா கழித்தான்?

நாளைக்கு ஒரு நங்கை-பொழுதுக்கு ஒரு மங்கை என்று உல்லாசமாகத்தான் யார் யாருடனோ அவன் இன்பத் திலே திளைத்து மகிழ்ந்தான்.

ஆனால், அவள் தன் இளமை உணர்வுகளை இன்னொருத்தனுடன் பகிர்ந்து கொண்டிருப்பாளோ என்று நினைக்கையிலே ஏன் இந்த ஆத்திரம், பொறாமை, அடி வயிற்றில் இருந்து பொங்கி நெஞ்சைச் சுடுகிறதே, ஏன்? ஏன்?

எப்படி எல்லாமோ வாழ அவனுக்கு உரிமை உண்டு? அவன் ஆண்!

ஆனால், அவள்? பெண்ணாயிற்றே! பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற நியதி.

அவன் கோப்புகளில் இருந்து நிமிர்ந்து, வாய் விட்டு உரக்கச் சிரித்து விட்டான்.

அப்பொழுதுதான் அந்தச் செய்தியை யாரோ தொலை பேசியில் அவனுக்கு அறிவித்தனர்.

''கதிரேசன் அவர்கள்தானே? தண்டபாணி அய்யா நேற்று மாலை திடீரென்று இறைவனடி சேர்ந்து விட்டார். இன்று மாலை சவ அடக்கம் நாலு மணி அளவில் ஏற்பாடாகியிருக்கிறது...முகவரி தெரியுமா...சொல்கிறேன் எழுதிக்கிறீங்களா?''

யாரோ கேட்டிராத குரல், துக்கச் செய்தியைத் தெரிவித்தது.

மரியாதைக்கு உரிய அவனுடைய மாமனார் இறந்து விட்டாரா?

அப்படியென்றால், இனி ஜெயந்தியின் கதி?

தாயும் முன்னமேயே போய் விட்டாள் என்ற உண்மை அவனுக்குத் தெரியும். இப்போது தந்தையும் போய் விட்டாரா? அடக் கடவுளே! விவரிக்க இயலாத ஓர் உணர்வு அவனை என்னவோ செய்தது. அவர் மீது கொண்டிருந்த கோபதாபமெல்லாம் கணப் பொழுதில் மறைந்தோட, பச்சாத்தாப உணர்வு நீர் ஊற்றாக நெஞ்சிலே பொங்க, கண்கள் பனிக்க அவன் திணறி விட்டான்.



உடனடியாக அவர்கள் வசித்த வீட்டிற்குக் காரை ஓட்டிக் கொண்டு வந்தான்.

முன் பின் பார்க்காவிடிலும் ரத்தினத்திற்கு அவன் யார் என்று புரிந்து விட்டது.

''தம்பி கதிரேசன் கூட வந்துட்டது.''

ஜெயந்தியின் காதில் பட இரைந்து சொன்னார்.

கூடத்து அறை மீது தண்டபாணியின் உடல் கிடத்தப் பட்டிருந்தது. வந்தவர்களுக்கு முக தரிசனம் கிட்ட முகம் மட்டுமே சிறிதளவு திறந்த நிலையில் வைக்கப்பட்டு மீதம் வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு இருந்தது. தெருவில் இருந்த பெண்களும் ஆண்களும் அந்தச் சிறு வீட்டை நிறைத்துக் கொண்டு விட்டனர்.

கதிரேசனைக் கண்டதும் அவர்களிடையே கசமுச என்று பேச்சு.

''இவன்தான் ஜெயந்தியின் புருஷன். பார்த்துக்கோ. இத்தனை நாளும் எட்டிப் பார்க்காம, அந்தப் பொண்ணைத் தள்ளி வச்சிருக்கிற பாவி இப்போ துக்கம் கொண்டாட வந்துட்டான். யாரோ ஒரு அம்மா அடிக்குரலில் முணுமுணுத்தது, அவனுக்கு மண்டையில் அடித்தாற்போல் வேதனை செய்தது. அதைத் தாங்கிக் கொண்டு உடலின் அருகே மெல்ல வந்தான்.

திருமணத்தின் போது பார்த்த மாமனார். வேதனையும் வருத்தமுமே அவரது உயிரைக் குடித்து விட்டது போல், தளர்ந்து, ஒடுங்கி, பிடியாகக் குச்சிபோல் கிடந்தார்.

''இனி எனக்கு எந்தக் கவலையும் இல்லை'' என்ற பாவனையில் கண் மூடிக் கிடந்த முகத்தைப் பார்த்ததும் அவன் உள்ளம் விம்மியது.

''சாவுக்கு ஒரு சக்தி இருக்கத்தான் இருக்கு. இத்தனை நாள் கிளியாட்டம் இருக்கிற இந்தப் பொண்ணை ஏறெடுத்

தும் பார்க்காத கல் நெஞ்சை சாவு கரைச்சுடுச்சு பார்த்தியா? விழுந்தடிச்சுட்டு வந்திருக்கான். போகட்டும் இனியாவது புத்தி வரட்டும்'' யாரோ கிசுகிசுத்தது அவன் காதில் பட்டது.

தந்தையின் உடல் அருகே தலைமாட்டில் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்த ஜெயந்தி, ஒரே ஒரு தடவை அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''தன்னந்தனியா துயரத்தை எப்படித் தாங்கிக்கிறாள் என்று பார்க்க வந்திருக்கீங்களா?''

சாடியது அவள் பார்வை. கன்னங்களில் மாலையாகக் கண்ணீர் வடிய, அவள் தரையைப் பார்த்துக் கொண்டு விம்மிய கோலத்தை அவனால் காணப் பொறுக்கவில்லை.

''அழாதே ஜெயந்தி. உன் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளத் துணாக இதோ நிற்கிறேன். கவலைப்படாதே...'' அவள் முகத்தை நிமிர்த்தி, கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் சொல்லத் துடியாகத் துடித்தான். ஆனால், அந்த உரிமையைத்தான் இழந்து விட்டானே!

எந்த முகத்தைக் கொண்டு அவளிடம் பேச்சைத் தொடங்குவது? மென்று விழுங்கிக் கொண்டே நின்றவ னிடம் ரத்தினம் வந்தார். தண்டபாணியின் நண்பர் தாம் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு தொண்டையைக் கனைத்தார்.

மாமனாரின் இறுதிச் சடங்குச் செலவிற்குப் பணம் வேண்டுமே? அதைப் பற்றி பேசத்தான் அந்தப் பீடிகையா? சட்டைப் பைக்குள் கையை விட்டு அவன் பர்சை எடுத் தான். நாலைந்து நூறு ரூபாய் நோட்டுக்களை உருவினான். ''எந்தவித குறையும் வைக்காமல் எல்லாம் முறைப்படி செய் யுங்கோ'' அவன் பணத்தை நீட்டினான். ஆனால், ரத்தினம் வாங்க மறுத்து விட்டார்.

அவனை ஒதுக்குப்புறமாக ஒரு மூலைக்கு அழைத்துச் சென்றார். ''வேண்டாம் தம்பி. பணத்துக்கு ஜெயந்தி ஏற்பாடு



செய்து விட்டது. பாங்கிலே கொஞ்சம் பணம் சேர்த்து வச் சிருந்தது. போதாததுக்கு கழுத்துச் சங்கிலியை வித்து விட்டு வர ஏற்பாடு பண்ணிச்சு. ஆஸ்பத்திரிக்கு செலவழிச்சது போக, இந்தக் காரியத்துக்கும் வேண்டிய தொகை அது கைவசம் இருக்கு.''

கதிரேசன் இன்னும் கையை நீட்டியபடி இருந்தான்.

''தன் அப்பாவுக்கு இறுதிக் கடனுக்கு ஆகும் செலவு தன்னுடையதாக இருக்கணும்னு அதனுடைய ஆசை. நான் கொடுத்த கொஞ்ச தொகையைக்கூட அது மறுத்துடுச்சு. சடங்கு செலவெல்லாம் அதால் கொடுக்க முடியும். ஆனால், பெண் குழந்தையாச்சே...அப்பனுக்குக் கொள்ளி போட யார் இருக் கான்னு கதறி அழுதுச்சு. நான்தான் ஆறுதல் சொன்னேன். கவலைப்படாதே அம்மா...நான் சிநேகிதன்கிற முறை யிலே அந்தக் கடமையைச் செய்துடறேன்னேன்'' அவர் குரல் அடைத்தது.

கதிரேசன் கண்கள் கலங்கின. அவர் முன் வாட்ட சாட்டமான தன் உடல் கூனிக் குறுகி விட்டது போன்று திகைத்துப் போனான்.

''உசிரோட இருந்தப்போ அவரை நான் ரொம்ப நோக வச்சுட்டேன். செத்த பிறகாவது அவருக்கு என் கடமை யைச் செய்து ஈடு செய்துடறேன். தயவு செய்யுங்க. மரு மகன் என்கிறவன் ஒரு வழியில் மகனைப் போல்தானே?'' வார்த்தைகள் தொண்டையில் சிக்கின.

காரியங்கள் முடிந்தன.

கால்களைக் கழுவிக் கொண்டு அவர்கள் எல்லோரும் வீட்டுக்குள் வந்தனர்.

ஈ மொய்த்தது போல் பெண்கள் கூடத்தில் கூடியிருந்தனர்.

''விசிறி எங்கே? தண்ணீர் கொண்டு வாங்க'' பல குரல்கள் ஏக காலத்தில்.

''டாக்டரை யாராச்சும் கூட்டி வாங்கோ'' கத்தினாள் ஒரு கிழவி.

தரைமீது துவண்ட கொடியாக மயக்கமாகக் கிடந்தாள் ஜெயந்தி.

ஓடிச் சென்று அவளைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டு ஆறுதல் சொல்லி கவலை தெரிவிக்க வேண்டும் என்று ஆவல் கதிரேசனுக்கு. ஆனால், அதற்கு அவன் லாயக் கில்லை என்பது போல் வெறித்த சில பார்வைகளை அவனால் தாங்க முடியவில்லை.

டாக்டரை அழைத்து வந்து கவனிக்க ஏற்பாடு செய்தான்.

களைப்புத் தெளிந்து அவள் இலேசாகக் கண்களைத் திறந்து பார்த்தாள்.

தன் அருகே அவன் நிற்பதை உணர்ந்தவுடன் அந்தக் கண்களில் குபீர் என்று நீர் பொங்கியது.

தன் இழப்பின் மாபெரும் துயரத்தைத் தானே அனு பவிக்கத் தீர்மானித்து விட்ட விரக்தியுடன், கண்களை படக் கென்று இறுக்கமாக மூடிக் கொண்டு விட்டான்.

காது ஓரங்களை நனைத்து தலையணை மீது உதிர்ந்து ஓடிய அவளது கண்ணீர், ஆயிரம் வேல்களாக அவன் மார் பில் பாய்ந்தது போல் அவன் வேதனையில் துடித்து விட்டான்.

''ஜெயந்தி!'' என்று ஓங்கி, உலகத்தின் மறு பக்கம் கேட்கும் அளவில், கத்தி அழைக்க வேண்டும் என்ற வேகம்.

ஆனால், எதுவும் செய்ய இயலாதவனாக, பொங்கி எழுந்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு அவன் மவுனமாகக் கிளம்பினான்.

## 11

கடைசிவரை, எல்லாச் சடங்குகளும் முடியும்வரை கதிரேசன் தினமும் காலையும் மாலையும் அந்த வீட்டுக்குப் போய் வந்தான்.



ஜெயந்தி அந்த மாதம் முழுவதும் வேலைக்குப் போக வில்லை.

அவளுக்குத் துணையாக பக்கத்து வீட்டுப் பாட்டி கூடவே இருந்தாள். அடிக்கடி ரத்தினத்தின் குடும்பத்தில் இருந்து பெண்கள் வந்து போய்க் கொண்டு இருந்தனர்.

தனித்து சிறிதுநேரம் அவளிடம் பேச கதிரேசனுக்கு வாய்ப்பே இருக்கவில்லை. நண்பர்கள், உறவினர்கள் வந்து போய்க் கொண்டு இருந்தனர். தினமும் துக்கம் விசாரிக்க வந்த கும்பலுடன் நின்று விட்டு, வாயிலில் அவர்களுடன் சிறிது பொழுது உட்கார்ந்திருந்து விட்டு, கிளம்ப வேண்டி யிருந்தது. தவித்துப் போனான் அவன்.

மேலும், துக்கம் அனுபவிக்கும் சமயத்தில் அவன் மேற்கொள்ள விரும்பிய மகிழ்ச்சியான தீர்மானத்தைப் பற்றிப் பேசினால் பொருத்தமாக இருக்குமா என்ற அச்சம் வேறு. ஆறு ஆண்டு அசட்டையாக இருந்தவன், இப்பொழுது அவசரப்படுவது முறையா? மனச் சாட்சியின் உறுத்தலில் அவன் குழம்பிக் கொண்டு இருந்தான்.

''இந்த மாதிரியான சிக்கல்களின் போது, இடையே யாரேனும் தூது நடந்தால், எவ்வளவு ஆறுதலாக இருக்கும்?''

அவன் எண்ணி முடிக்கவில்லை. அலுவலகத்துப் பையன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

''உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க?''

''வரச் சொல்'' கோப்புகளை மூடி வைத்து விட்டு, சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

ஜெயந்தி வந்திருக்காளோ? படபடவென்று நெஞ்சிலே ஒரு துடிப்பு. கைக்குட்டையால் முகத்தை அழுத்தி துடைத்துக் கொண்டான். வந்திருப்பது ஆணா, பெண்ணா எனக் கேட்ப தற்கு முன் அந்தப் பையன் மறைந்து விட்டான்.

சில வினாடிகள்தான்—அதற்குள் அந்த எதிர்பார்ப் பின் கனத்தைத் தாள முடியாதது போல் அவனுக்கு மூச்சு முட்டியது.

ஜெயந்தி மனம் மாறி அவனைக் காண வந்திருந்தால்...

தனக்குள்ளே நொடியில் பல ஒத்திகைகளை நடத்தி முடித்துக் கொண்டான்.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்து, வணக்கம் தெரிவித்தார் ரத்தினம்.

ஏமாற்றமாகத்தான் இருந்தது அவனுக்கு. ஆனாலும், அவராவது அந்தக் காரியத்தை நடத்த இடையில் இருந்து உதவட்டுமே என்ற எண்ணமும் எழுந்தது.

''வாங்க உட்காருங்க'' பலமாக உபசரித்தான். மணியைத் தட்டி பையனை வரவழைத்து இரண்டு கோப்பை காப்பி எடுத்து வர உத்தரவிட்டான்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு சுற்றிலும் நோட்டம் விட்டபடி ரத்தினம் எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

''எல்லாம் ஒரு வழியாக நடந்து முடிஞ்சு போச்சு. காலம் எத்தனை வேகமாக விரைகிறது பார்த்தீங்களா? நேத்தி போல இருக்கு. தண்டபாணி போய் ஒரு மாசத்துக்கு மேலாச்சு'' ரத்தினம் சுற்றி வளைத்தார்.

சூடு பறக்கும் காப்பிக் கோப்பைகளை பையன் மேசை மீது வைத்து விட்டு வெளியே விரைந்தான்.

''சாப்பிடுங்க'' உபசரித்த கதிரேசன், முகத்தை மீண்டும் அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

ஜெயந்தியைப் பற்றி விசாரிக்க ஆவலாக இருந்தது. தயக்கத்துடன் அமைதியாகக் காப்பியைப் பருகினான்.



''தம்பி! ஜெயந்தி சின்ன வயசுப் பொண்ணு. தனியா அந்த வீட்டிலே இருக்கிறது தகாதுன்னு, வீட்டைக் காலி பண்ணி விட்டு, அதை எங்களோடு அழைச்சிட்டுப் போயிட் டோம். கொஞ்சம் தட்டு முட்டு சாமான்கள் இருந்திச்சு. அவற்றை வித்துக் காசாக்கி அது கையில் கொடுத்துட்டேன். இப்ப ஜெயந்தி வீவிலே இருக்கு. மாசம் பொறந்ததும் வேலைக்குக் கிளம்பணும். இது சமயம் எனக்கு ஒரு யோசனை தோணிச்சு. நீ நிதானமா கேட்கிறதா இருந்தா சொல்லி விட்டுப் போகலாம்னு வந்தேன்'' ரத்தினம் நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தார்.

முகமும் கழுத்தும் சூடாகி, நெஞ்சு வாய்க்குள் வந்து விட்ட திகைப்பு கதிரேசனுக்கு. அதே நேரம், கவுரவத்தைச் சட்டென்று விட்டுக் கொடுக்க இயலாத ஒரு கோழைத் தனம் குறுக்கே புகுந்து கொண்டது.

''நீங்க பெரியவங்க. நாலும் தெரிஞ்சவங்க. ஏதேனும் சொன்னால், கேட்கக் கடமைப்பட்டவன் நான்'' அவனும் சுற்றி வளைத்தான்.

''தண்டபாணிக்கும் எனக்கும் இடையே எந்த ரகசிய மும் கிடையாது. நாங்கள் நெருங்கின நண்பர்கள். எனக்கு ஜெயந்தியும் ஒரு பெண் போலத்தான். வேறு வழியில்லாட்டி கடைசிவரை நம்மோட ஜெயந்தியை வச்சுக்கலாம்னு என் மனைவி சொல்கிறாள். ஆனால், அது முறையில்லை என்று என் மனது தவிக்கிறது. வாழற வயசில அது இருக்கிற இடத்திலே இருந்தால்தானே நல்லா இருக்கும்? எத்தனையோ பாடுபட்டுத்தானே ஒரு வீட்டில் விளக்கை ஏத்தி வைக்க முயற்சிக்கிறோம். அதை அணைச்சு வேடிக்கை பார்க்கிறது தர்மமா, சொல்லு தம்பி?''

''புரியும்படி கொஞ்சம் சொன்னா தேவலையே'' புரண்டு எழுந்த உணர்வுகளை அடக்கிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் கதிரேசன்.

''நடந்ததெல்லாம் நம்ப எல்லோருக்கும் தெரிஞ்சது தான். என்ன காரணத்தாலோ உனக்கு ஜெயந்தி மேலே அப்போ வெறுப்பு ஏற்பட்டு இருந்தது. உன் மனசு நோக அது ஏதோ தவறு செஞ்சிருக்கலாம். ஜெயந்திக்கு அப்போ அறியாத வயசு. நீ படிச்சவன். நல்ல பதவியிலே இருக்கிற வன். உலக விவகாரம் புரிஞ்சவன். தவறு யார் பக்கம் இருந்தாலும் சரி...அதை இப்போ மறந்துட்டு மறுபடியும் ஒன்றுபட்டு ரெண்டு பேரும் வாழணும்னு கேட்கத்தான் வந்திருக்கேன். தண்டபாணியின் கடைசி விருப்பமும் இது தான். தம்பி, மூச்சு முடியும்வரை மகளைப் பற்றித்தான் அவன் புலம்பிக்கிட்டு இருந்தான். ஜெயந்திக்காக இல்லா விட்டாலும், பாவம் தண்டபாணிக்காகவாவது நீ பெரிய மனசு பண்ணி அந்தப் பெண்ணை வந்து கூட்டிக் கொண்டு போனால்...'' மேலே பேச பயந்து நிறுத்தினார்.

செவேலென்று முகம் ரத்தமாகி, உணர்வுகள் குழம்பித் தடுமாறிப் போன கதிரேசன், சிறிது நேரம் மவுனமாக இருந் தான். பிறகு ''பெரியவங்க நீங்கள் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கு...ஜெயந்தி இதுக்கு ஒப்புக் கொள்ளா விட்டால் ...நீங்கள் தீர விசாரிச்சீங்களா?'' கவலையுடன் கேட்டான்.

''தகப்பனை இழந்து ரொம்ப மனசு அதிர்ந்து போயிருக் கிறாள், அந்தப் பொண்ணு. இந்தச் சமயம் பலவிதமாகக் கேட்டு, அதன் மனசைப் புண்ணாக்க நாங்க விரும்பலை. ஆனால், ஜெயந்திக்கு கட்டாயம் தன் கணவனோடு வாழணும்னு ஆசை இருக்கத்தான் செய்யும்.''

''எதுக்கும் நீங்க ஒரு வார்த்தை கேட்பது நல்லது இல்லையா?''

''உனக்கு இது பத்தி சந்தேகமே வேணாம். எந்தப் பொண் ணும் தன் உரிமைகளை உதறி எறிய மனசு ஒப்பாது. இது இயற்கையாச்சே. அந்தத் துணிவில்தான் ஜெயந்தி சார்பிலே



நான் வலிய வந்து இந்தப் பேச்சைத் தொடங்கி இருக் கேன்.''

என்ன பதில் அளிப்பது என்று கதிரேசன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''உன்னை வற்புறுத்துகிறேன்னு நினைக்காதே. தம்பி, மறுபடியும் உன்னோடு சேர்ந்து வாழ ஜெயந்திக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார். அவ்வளவுதான் கேட்கிறேன். இந்த முறையும் ஒத்து வராது போனால்...இருக்கவே இருக்கு. விவாகரத்து ரெண்டு பேருக்கும் சின்ன வயது, இப்படியே இருந்து வாழ்க்கையைப் பாழாக்குவது சரியா?''

''ஜெயந்தி ஒத்துக் கொள்ள மறுத்துட்டா என்ன செய்வீங்க?''

''ஒத்துக் கொள்ளச் செய்கிறது என் பொறுப்பு. சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது உன் கடமை.''

''அப்ப ஒரு காரியம் செய்யுங்க-நீங்களே ஒரு நல்ல நாள் பார்த்து ஜெயந்தியைக் கொண்டு வந்து என் வீட்டிலே விட்டுடுங்க'' சொல்லி முடிப்பதற்குள் நெஞ்சு வெடித்து விடும் போன்ற மகிழ்ச்சியான எதிர்பார்ப்பில் தத்தளித்தான் கதிரேசன்.

''தம்பி! நேரம் மிகவும் அருமையானது. அதை விலை கொடுத்து வாங்க முடியாது. உனக்குத் தெரிஞ்ச உண்மை தான். இனிமேலும் நேரத்தை வீணாக்க நான் விரும்பலை. ஜெயந்தியை அழைச்சு வரப் போகிற நாள், நேரம் முதலிய விவரத்தை முன்கூட்டியே உனக்குத் தெரிவிச்சுடறேன். நானும் என் மனைவியும் கூட்டிக் கொண்டு வந்து உன்னிடம் ஒப்பிச்சுடறோம். ஆனால், ஒரு நிபந்தனை. ஒரு சில நிமிடந் தான் நாங்கள் அங்கே நிற்போம். பல வருடம் பிரிஞ்சவங்க- பேச உங்களுக்கு எத்தனையோ இருக்கும். அதனாலே உங்க

ளோட உட்கார்ந்து காப்பி, பலகாரம் சாப்பிட்டு நாங்கள் உங்கள் குறுக்கே நிற்க விரும்பலை.''

''நீங்கள் சொல்கிற நிபந்தனைக்கெல்லாம் கட்டுப்பட றேன்-உங்களுக்குச் சந்தோஷந்தானே?'' லேசாக முறுவலித் தான் அவன்.

''பெண்ணைக் கூட்டி வந்து உன்னிடம் ஒப்புவிச்சுடு வோம். பிறகு மத்தது...உங்கள் இருவரின் பொறுப்பு'' கை குவித்து விட்டு ரத்தினம் எழுந்தார்.

வாயில்வரை அவருடன் கூடச் சென்று வழியனுப்பி விட்டு உள்ளே வந்து உட்கார்ந்த கதிரேசன், நிம்மதியாக மூச்சு விட்டான். அதற்கு மேல் வேலை செய்ய மனம் ஒடவே யில்லை. சென்னைக்கு வந்த நாளில் இருந்து அவனுக்கு இதே சிந்தனைதான். அந்தப் பிரச்சினைக்கும் ஒரு முடிவு நெருங்கி விட்டது.

குறிப்பிட்ட நாள் வந்ததும்...ரத்தினம் முன்கூட்டியே தொலைபேசியில் அவனுக்குத் தெரிவித்தார்.

அலுவலகத்திற்கு அவன் புறப்படுமுன் காலை ஒன்பது மணியளவில் நல்ல வேளை என்று நம்பிய அவர், தன் மனைவி, மகளுடன் ஜெயந்தியை அழைத்துக் கொண்டு டாக்சியில் வந்து இறங்கினார்.

பரபரப்புடன் கதவுகளை அகலத் திறந்து வைத்தான் கதிரேசன்.

கனமான பெரியதொரு பெட்டியைச் சுமந்து கொண்டு ரத்தினம் முதலில் உள்ளே வந்தார்.

வெற்றிலை, பாக்கு, பழம் நிறைந்த தட்டைச் சுமந்து கொண்டு தொடர்ந்த அவர் மனைவி, முன்னறை மேஜை மீது அதை வைத்தாள்.



இன்னொரு தட்டு நிறைய இனிப்பை எடுத்துக் கொண்டு வந்த அவர் மகள், தட்டை மேஜை மீது வைத்து விட்டு, அம்மாவின் அருகில் அடக்கமாக நின்று கொண்டாள்.

கையில் சிறு பெட்டியும், தோளில் அவளது வழக்கமான பையும், தலை நிறையப் பூவும், இடையை நிறைத்த பச்சை வண்ணப் பட்டுச் சேலையுமாக, புதுமணப் பெண் போல், தயக்கத்துடன் மிரட்சியாக முடிவில் ஜெயந்தி வந்தாள்.

கணவனை நிமிர்ந்து பார்த்த அவள் கண்கள் குளமாகின.

என்னென்னவோ உணர்வுகளின் மோதலில் கதிரேச னும் ஒரு கணம் அயர்ந்து போனான்.

விரைந்து சென்று தன் இரு கரங்களை நீட்டி அவளைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, ''ஜெயந்தி! உண்மையாகவே நீ வந்துட்டியா...? இனிமேலே நமக்குள் பிரிவே கிடையாது. என்னை நம்பு...என்று உரத்த குரலில் கூறி, அவள் பட்டு கன்னங்களில் வழியும் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற ஆவேசம். எச்சிலை விழுங்கிக் கொண்டான். ''எல்லாரும் உட்காருங்க. நிக்கறீங்களே? அவசரம் ஒண்ணும் இல்லே. நிதானமா இருந்து காப்பி பலகாரம் சாப்பிட் டுட்டுப் போகலாம். எல்லாம் ஒட்டலில் இருந்து தருவிச்சு தயாரா வச்சிருக்கேன்.''

உபசரித்தபடி பரபரப்புடன் இங்குமங்கும் வீட்டிற்குள் வேகமாக விரைந்தான்.

## 12

கைக்கடியாரத்தை உற்றுப் பார்த்தான் கதிரேசன்.

அவர்கள் யாவரும் பேசிக்கொண்டு இருந்தனர்.

சட்டெனப் புரிந்து கொண்டவர் போல் எழுந்தார் ரத்தினம். உடன் மனைவியும் மகளும் கிளம்பினார்கள்.

''இன்று எனக்கு அலுவலகத்தில் ஒரு கூட்டம். கட்டாயம் பத்து மணி அளவிலே நான் அங்கு இருக்க வேண்டும். தவிர்க்க முடியாது...'' கூறியபடியே அவன் மெல்ல ஜெயந்தியைப் பார்த்தான்.

''தைரியா இரும்மா. நாங்கள் வருகிறோம்'' ஜெயந்தியிடம் அவர்கள் விடைபெற்றுக் கொண்டனர்.

அவள் கலக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

அருகிலே வந்த கதிரேசன் தன் சட்டைப் பையில் இருந்த வீட்டுச் சாவியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அப்போது அவன் விரல்கள் லேசாக அவள் கை மீது பட்டன.

மகிழ்ச்சி நிறைந்த கலவரத்தில் அதை வாங்க நீட்டிய அவள் கரம் நடுங்கியது.

அவனைப் பார்க்க அஞ்சியவள் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''இருபத்தெட்டாம் நம்பர் சாவி இரும்புப் பீரோ உடையது. மேல் தட்டில் பணம் வச்சிருக்கிறேன். சாமான் ஏதாச்சும் வாங்கணும்னா இதோ தாயம்மா வராங்க. கேட்டு வாங்கிக்க'' என்று கூறி விட்டு, ''தாயம்மா!'' என்று உரத்த குரலில் கூப்பிட்டான்.

அது சமயம் தோட்டத்துப் பக்கம் இருந்த கிழவி, துலக்கிக் கொண்டிருந்த பாத்திரங்களைப் போட்டு விட்டு, உள்ளே ஓடி வந்தாள்.

''அம்மா வருவாங்கன்னு சொன்னேனே; வந்திட்டாங்க. அவங்க கேக்கறதை வாங்கிட்டு வந்திடுங்க. வழக்கத்துக்கு மேலே அரை லிட்டர் அதிகமா பால் இன்னையிலிருந்து தேவைப்படும்னு பால்காரரிடம் சொல்லிடுங்க'' உத்திரவிட்டான்.



ரத்தினம் செருப்புகளுக்குள் பாதங்களைத் திணித்தார். ''நாங்கள் வரோம். ரொம்ப நன்றி'' என்றார் மீண்டும்.

''நானும் அந்தப் பக்கமாகத்தான் போறேன். நீங்களும் வாங்க. வழியிலே இறக்கி விடறேன். வீணா எதுக்கு சிரமப் படறீங்க'' என்று உபசரித்தான் கதிரேசன்.

அவர்கள் அனைவரும் காரில் ஏறிக் கொண்டனர்.

கதவுப் பக்கம் நின்றபடி அவர்களை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஜெயந்தியிடம் அவன் திரும்பி வந்தான்.

அவள் நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது.

''கதவைச் சாத்திக்க. துணைக்கு வேணுமானால் தாயம்மா கூட இருக்கட்டும். மாலை வேலை முடிஞ்சதும் விரைவா வந்திடறேன். வந்த பிறகு சாப்பாட்டுக்கு ஓட்டலுக்குப் போவோம். இடையே பசிச்சா ஓவல் டின் அடுப்பு மேடை கிட்டே இருக்குது. சாப்பாட்டு மேஜை மீது பிஸ்கட் வாங்கி வச்சிருக்கேன். சமாளிச்சுக்க. வர்றேன். வரட்டுமா'' ஆவலுடன் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் தடுமாறிப் போனாள்.

''கதவைச் சாத்திக்க—என்ன பயம்? எவன் வந்து உன்னைத் தூக்கிட்டுப் போய்டுவான்?'' என்று பம்பாய் குடித்தனத்தின் போது எரிந்து விழுவானே, அந்தக் கணவன்தானா, இவன்?

எவ்வளவு மன மாற்றம்?

இது உண்மையா? அல்லது நடிப்பா?

''வரட்டுமா?'' மறுபடியும் கொஞ்சலான குரல்.

அவள் மெய்மறந்து போனாள்.

மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

கண்கள் வழியே அவள் உள்ளத்தில் புகுந்து விடுபவன் போல் அவளை ஊடுருவிப் பார்த்தான்.

தலையை ஆட்டி விட்டு அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவன் தயக்கத்துடன் மெல்லப் படிகளில் இறங்கிக் காருக்குள் சென்று அமர்ந்தான்.

வண்டியை ஓட்டிக் கொண்டு, தோட்டத்தில் இருந்து வெளியில் செல்லுமுன் மறுபடியும் அவளது பக்கம் திரும்பி கையை ஆட்டி விட்டுச் சென்றான்.

கதவை மூடி விட்டு, வீட்டைச் சுற்றிலும் ஒரு முறை வளைய வந்தாள் ஜெயந்தி.

எத்தனை வசதிகள்? பம்பாய் வீட்டிற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்!

அவள் கணவன் வீட்டுக்கு இவ்வளவு சுக போகங்களுக்கு இடையே மறுபடியும் வாழ வந்திருப்பது உண்மையா? அல்லது ஏதேனும் கனவா?

தன்னையே வியப்புத் தாளாமல் கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது அவளுக்கு.

வேலை செய்ய தாயம்மாள் இருந்தும், வீட்டில் சாமான்கள் தாறுமாறாகக் கிடந்தன. தலைவி இல்லாத குறை—தனியாக அவன் தானே வாழ முயற்சித்ததன் பலன்-படுக்கை விரிப்பு கலைந்து ஓரத்தில் கிடந்தது. போர்வை கால் மாட்டில் சுருண்டு கிட்ந்தது. இரவு சாப்பிட்டு வைத்திருந்த பால் தம்ளர் சிறு மேஜை மீது அப்படியே கேட்பாரற்றுக் காய்ந்து கிடந்தது.

சமையல் அறையிலும் ஒரே அலங்கோலம். அவர்களின் வருகைக்காக அவனே காப்பி தயாரிக்க முயன்றிருக்க வேண்டும். திடீர் காப்பித் தூள் டப்பா திறந்தே கிடந்தது. அலமாரித் தட்டில் இருந்து இறக்கி வைத்த சர்க்கரை டின்-பாலைக் காய்ச்சி மீதி வைத்திருந்த பாத்திரம் எல்லாம் போட்டது போட்ட நிலையில்...



வரவேற்பு அறையில் வந்தவர்கள் எடுத்துப் புரட்டி வைத்த பத்திரிகைகள்-சாப்பாட்டு மேஜை மீது சாப்பிட்டு வைத்த தம்ளர்கள்-தட்டுகள்-இத்யாதி. வாழ்க்கையை ஒழுங்கு செய்யுமுன் வீட்டை ஒழுங்கு செய்ய வேண்டும் போல் இருக்கிறதே. எல்லாம் தலைகீழாக இருந்தன. வேலை செய்யும் தாயம்மாளின் உதவியுடன் அவள் சுறுசுறுப்பாகச் செயல்பட்டாள்.

வீட்டைப் பெருக்கி துப்புரவாக்கிப் பாத்திரங்களைத் துலக்கித் துடைத்து அவற்றை ஒழுங்கு பெற வைத்தாள். முதன்முதலில் வீட்டிற்கு வந்திருக்கும்போது ஓட்டலில் போய்ச் சாப்பிடுவானேன்? அவள் கையாலேயே சமையல் செய்து பரிமாறினால்...?

மகிழ்ச்சி தாங்கவில்லை அவளுக்கு. இன்பமான எதிர் பார்ப்பிலே பீரோவைத் திறந்து மேல் தட்டில் இருந்த பணத்தைக் கொஞ்சம் எடுத்தாள்.

சமையலுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள்-காய்கள் வாங்கி வரத் தாயம்மாளைக் கடைக்கு அனுப்பினாள். கதவை மூடி விட்டுத் தனியாக உள்ளே வந்தாள்.

''வீட்டுக்குப் போனதும் முதல் வேலையா உன் விளக்கை எடுத்துப் பூஜை அறையிலே வைக்க மறக்காதே. இதுவரையில் உன் வாழ்க்கையில் இருந்த இருள் மறையட்டும், அம்மா'' என்று ரத்தினத்தின் மனைவி செய்த அறிவுரை பளிச்சென நினைவிற்கு வந்தது.

''ஆமாம்! இந்த வீட்டில் பூஜை அறை என்று ஒன்று இருக்கிறதா?'' ஆலோசனை வந்தது அவளுக்கு. மீண்டும் வீட்டைச் சுற்றி வந்தாள். சாமான்கள் வைக்கும் அறைக்குப் பக்கத்து அறை மூடிக் கிடந்தது. ஓடிச் சென்று திறந்து பார்த்தாள்.

இவன் வாங்கும் புத்தகங்கள்—பத்திரிகைகள்—வேண்டாத பழைய துணி மூட்டை என சாமான்கள் குவிந்து கிடந்தன. அவற்றை எடுத்துப் பின்னால் இருந்த ஒரு பெரிய அலமாரியில் ஒழுங்காக வைத்து விட்டு, அறையைப் பெருக்கிக் கழுவித் துடைத்தாள்.

நடுவிலே ஒரு சிறு மேடை. வீட்டைக் கட்டியவன் முன் யோசனையுடன்தான் இதைப் பூஜை அறையாகக் கட்டியிருக்கிறான். கதிரேசன் மனைவியை ஒதுக்கி வைத்தது போல் அதையும் ஒதுக்கி விட்டான் போலும்? அவளுக்குச் சிரிப்புக்கூட வந்து விட்டது.

பெட்டியைத் திறந்து, கையோடு கொணர்ந்திருந்த தன் வீட்டுக் காமாட்சி விளக்கையும், தட்டு, தண்ணீர், செம்பு, ஊதுவத்தி ஆகியவற்றையும் எடுத்து வந்தாள்.

நேற்றுத்தான் பாத்திரக் கடையில் கொடுத்து மெருகு போட்டு வாங்கி வந்த அந்த வெண்கல விளக்கு, இப்போது தங்கம்போல் மின்னியது. விளக்கைக் கழுவித் துடைத்து மஞ்சள் உரைத்துப் பொட்டிட்டு குங்குமம் வைத்தாள். மேடை மீது கோலமிட்டு, விளக்கையும் அதன்மீது வைத்தாள்.

தாயம்மாள் சாமான்களுடன் திரும்பி விட்டாள். எண்ணெய் செம்பில் இருந்த எண்ணெயை சிறிதளவு விளக்கில் வார்த்துத் திரியிட்டு அதை எரிய விட்டாள். ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்தாள். பளிச்சென்று விளங்கியது பூஜை அறை. மணம் கமழ்ந்தது வீடு முழுவதும். வீடு வீடானது போல் தோன்றியது அவள் மனதில்.

''குடிசையானாலும் விளக்கு ஏத்தறவள் இருந்தாதானே வீட்டுக்குக் களை. அம்மா வந்தது நல்லதாயிட்டது. நான் வேலைக்கு வந்ததிலிருந்து தினமும் நினைச்சுக்குவேன். இத்தனை சாமான்கள் வாங்கிப் போட்டிருக்கிற இந்த வீட்டில்



மனசுக்குத் தெம்பே வர மாட்டேங்குதே. இந்த அய்யா எப்போ தன் பெண்சாதியைக் கூட்டி வரப் போறார்னு மனசுக்குள்ளே எண்ணிக்கிறது உண்டு. பிறந்த ஊருக்குப் போயிருந்தியாம்மா...உடம்பு சுகமில்லாம இருந்தேன்னு பராபரியாக் கேட்டுச்சு. இப்ப நல்லா இருக்கியா? பூவை... விளக்குகிட்ட உன் கையால வையம்மா சீக்கிரம்...பூப்போல் இந்த வீட்டு நடையில் ஒரு மவன் தவழணும்'' தாயம்மாள் மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்தாள்.

செம்பருத்திப் பூவைப் போல் சிவந்தது ஜெயந்தியின் முகம். அப்படி ஒரு சௌபாக்கியமான வாழ்க்கையின் நிறைவுகள் அவளுக்குக் கிடைக்குமா? கதிரேசன் உண்மையில் அவளுக்கு மறுவாழ்வு தர ஒப்புக் கொணடு இருக்கிறானா? அல்லது விளக்கைச் சுற்றிலும் பூக்களை அழகாக அலங்காரமாக வைத்து விட்டு கை எடுத்துக் கும்பிட்டாள்.

அப்பாவின் நினைவு உள்ளத்தை வருத்தியது. கண்கள் கலங்கின. அப்பா இப்போது உயிருடன் இருந்தால் மறுபடியும் அவள் கதிரேசனுடன் வாழ வந்து விட்டாள் என்பதை அறிந்து எவ்வளவு மகிழ்ந்திருப்பார்?

''அப்பா! தெய்வமாக இருந்து என்னை வாழ்த்துங்கள். இந்த வாழ்வு உண்மையாக நிலைக்க வேணும். குழப்பமாக இருக்கப்பா'' தனக்குள்ளே சொல்லியபடி தரையில் விழுந்து வணங்கினாள். ஏனோ அவளுக்குத் துக்கம் அடைத்துக் கொண்டது.

பளிச்சென்றிருந்த அந்த விளக்கு மிக்க அலங்காரமாக எரிந்தது.

மாலை வீடு திரும்பும் கதிரேசன் அதைப் பார்த்தால்... உடனடியாக அந்தப் பழைய நினைவு...

பம்பாயில் முதல் நாள் மாலை அவள் இதே விளக்கைத்

துலக்கி, பொட்டிட்டு சமையல் அறை மேடையில் ஒரு பக்கமாக வைத்திருந்தாள்.

நேரம் கழித்து வந்த கதிரேசன், தண்ணீர் குடிக்க சமையல் அறைக்குள் எட்டிப் பார்த்தான். வீடே இடிந்து போகும் அளவு அதிர்ந்தது குரல். ஆத்திரச் சிரிப்பு.

''விளக்கேத்த வந்த மகராசி நீ...இல்லையா?'' பேய் போலச் சிரித்தான்.

பொலபொலவெனக் கண்ணீர் உகுத்தாள் அவள்.

''சீ! எதுக்கு அழுகை? அது ஒண்ணுதானே உனக்குத் தெரியும்!'' ஏளனமாகக் கத்தினான்.

அந்த நினைவு இப்பொழுது அவளுடைய அடி வயிற்றைச் சுருட்டிப் பிடித்தது. மாலை வரப் போகும் கணவன் அவள் ஏற்றி வைத்த விளக்கைப் பார்த்து, இப்போது என்ன சொல்லப் போகிறான்?

## 13

ஒரு சில நாளைக்கு முன்னர் - வேலையில் இருந்து திரும்பி வந்த ரத்தினம், ஜெயந்திக்காகத் தாழ்வாரத்தில் காத் திருந்தார்.

பக்கத்தில் இருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போய் விட்டு அவள் வந்தாள்.

''இப்படி உட்கார். ஒரு சேதி இருக்கு'' அவர் பணித்த போது அவள் பயந்து விட்டாள்.

கூடவே அவர் பின்னால் வந்த தம்முடைய ம கனை அப்பால் போகும்படி சாடை செய்து விட்டு அவர் மனைவியை அருகே வரும்படி சைகை செய்தார். பிறகு ஜெயந்தியிடம், ''உட்காரும்மா. நல்லா சிந்திச்சு பதில் சொல்ல வேண்டிய சேதி'' வற்புறுத்தலாகக் கூறவே, ஜெயந்தி அருகே அமர்ந்தாள்.



தொண்டையைக் கனைத்து விட்டு மனைவியின் முகத்தை ஒப்புதலுக்காக ஒரு முறை பார்த்தார்.

''நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திட்டோம். நீ எங்கள்கூட எத்தனை நாள் இருந்தாலும் சலிச்சிக்க மாட்டோம். ஆனால், அது முறையில்லே.''

ஜெயந்தி நடுங்கிப் போனாள். எதற்காக இப்படி ஒரு பீடிகை?

''எங்கியாச்சும் ஆஸ்டலிலே இருப்பது நல்லது'' என்று சொல்வாரோ? ஆமாம்? இனி அவளது பொறுப்பை ஏற்க யார் முன் வருவார்கள்? எத்தனை காலம் அவள் அந்தக் குடும்பத்திற்குப் பாரமாக இருக்க முடியும்? வேலை பார்க் கும் பெண்களுக்கான ஆஸ்டலுக்குப் போய்விட வேண்டி யதே. அவள் ஓர் அனாதை. வேறு எங்கே போக முடியும்?

துக்கம், திகில் இரண்டும் மனதை அழுத்த, அழுகை அவளை மீறி எழுந்தது. அதைச் சமாளித்தபடி, ரத்தினத்தைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள்.

''சொல்லுங்கள் சித்தப்பா? பெரியவங்க பேச்சுக்கு நான் எப்போதும் அடங்கிப் போறவள்தான். மனசை விட்டே பேசுங்கள்'' என்றாள்.

''நீ மறுபடியும் உன் கணவன் கூடப் போய் வாழ முயற்சிக்கிறதுதான் நல்லதம்மா.''

தூக்கி வாரிப் போட்டது அவளுக்கு. ''நான் தயார் சித்தப்பா! ஆனால், அவர்...அவர் ஒப்புக் கொள்ளாம... மறு படியும் அவமானப்படச் சொல்றீங்களா?'' அழுகை வந்தது அவளுக்கு.

''அப்படி உன்னை அவமானப்படுத்துவான்னு தோண வில்லையம்மா. மறுபடியும் நாம முயற்சிக்காமல் இருக் கிறது தப்பில்லையா?''

''வெட்கமா இருக்கு. வேண்டாம் என்கிறவர் வீட்டுக்

குள்ளே எந்த முகத்தோட போவேன் சித்தப்பா! மேலும், அவர் ரொம்பக் கோவக்காரர்; இந்த முறை அடிச்சி அவ மானம் செய்திட்டா...'' நடுங்கியபடி கேட்டாள் அவள்.

''அப்படி ஓர் ஆபத்தில் முன்னே பின்னே யோசி யாமல் நான் கொண்டு போய் விட்டுடுவேனாம்மா!''

''சித்தப்பா அவர்கிட்ட நேராகவே ஒரு வார்த்தை கேட்டு விட்டுத்தான் வந்திருக்கார்'' அவர் மனைவி உற்சாகப்படுத் தினாள்.

ஜெயந்திக்கு நம்பவே முடியவில்லை. ''அப்படியா'' என்றாள் மகிழ்ச்சியுடன். ''அதுக்குச் சரின்னு ஒப்புக் கொண் டாரா?'' பரபரப்பாகக் கேட்டாள். அவள் நிலை கட்டுக் கொள்ளவில்லை.

''இதோ பாரும்மா! நான் வெளிப்படையாகச் சொல் றேன். கேட்டுக்க. நானே வலியப் போய் முதல்லே கேட் டேன். ஆனால், அவர் வேண்டாம்னு சொல்லலை! ஒரு மாதிரி சிரிச்சிக்கிட்டே தலையை ஆட்டினார். சம்மதம்னு நானே ஊகிச்சுக்கிட்டேன். இதிலே நீ வெட்கப்படவோ அவமானப்படவோ எதுவுமே இல்லே. யார் வீட்டுக்கு நீ போகப் போறே? உன் வீடு, அவன் உன் கணவன். மறுபடி யும் போய் குடித்தனம் தொடங்கி வாழ்ந்து பாரு. இரண்டு பேரும் ஒத்துக்கிட்டா வாழ்க்கையைத் தொடரு. இல்லாட்டி என் கதவு எப்பவுமே உனக்குத் திறந்திருக்கும். நீ என் மூத்த மகள்னு நினைச்சுக்கிறேன். அதுக்குப் பிறகு நீ ஊர் உலகத் துக்குப் பயந்துகிட்டு, ஆஸ்டல், ஆசிரமம்னுதேடிப் போக வேணாம். தாராளமா எங்கள் கூடவே இருக்கலாம். ஆனால், இன்னும் ஒரு முறை உன் வாழ்க்கையில் ஒரு வாய்ப்புக்கு வகை செய்யப் பாரு. பிடிவாதம் செய்யாதேம்மா. 'முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்' என்பது உனக்குத் தெரியாதா? நீ படிச்ச பொண்ணு'' பலவும் பேசினார் உணர்ச்சிப் பெருக்குடன்.



''முயற்சிக்கிறேன் சித்தப்பா. முயற்சிக்கிறேன். இந்த முறை நான் தோல்வியடைந்திட்டா...'' அதற்கு மேல் அவ ளால் பேச முடியவில்லை. ஏனெனில், முடிவைப் பற்றி சிந்திக்கவே அவளுக்குத் தைரியம் இல்லை.

**''ச**மையல் செய்யப் போறீங்களாம்மா!'' தாயம்மாளின் குரல் பழைய நினைவுகளில் இருந்து அவளை விழிப்படையச் செய்தது.

''ஆமாம்! குடிதண்ணீரை எதுல எடுத்து வைப்பீங்க'' என்று கேட்டபடி சமையல் அறைப் பக்கம் வந்தாள்.

பின்னர் மூச்சு விடக் கூட பொழுதில்லை அவளுக்கு. இடை இடையே கமலாவின் நினைப்பு. கமலா அவளிடம் சொன்னவை தொடர்ந்து நினைவில் வந்தன. அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

**க**ல்யாணத்திற்கு ஏற்பாடாகி விட்டது. கமலா அவளைக் கேலி செய்து மகிழ ஆரம்பித்தாள்.

''அவருக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதுன்னு என் கணவ ருக்குத் தெரியும். என்கிட்ட சொல்லி இருக்காரே'' என்பாள்.

''கமலா...என்னிடம் சொல்லி விடு'' வெட்கத்துடன் கேட்டாள் ஜெயந்தி.

''அ! அப்படிச் சும்மா கேட்டா சொல்லுவேனா...'' அன்பான தோழி! என் கணவருடன் சுகமாக வாழ, அவரது குணாதிசயங்களைப் பற்றியும், பழக்க வழக்கங்களைப் பற்றியும் கொஞ்சம் எடுத்துச் சொல்வாயாக'' என்று கை கூப்பி வணங்கு. அதற்கு ஒரு பரிசும் வை. அப்போதுதான் சொல்லுவேனாக்கும்'' என்பாள் கமலா கிண்டலாக.

''தோட்டத்து அத்தனை கனகாம்பரத்தை உன் தலையில் சுமையா வச்சிடறேன். தயவு செய்து சொல்'' கையெடுத்து உண்மையாகவே ஜெயந்தி கும்பிட்டாள்.

தோழிகள் இருவரும் கலீர் என்று சிரித்தனர். அப்படி ஜெயந்தியைக் கேலி செய்வதில் கமலாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவ்வாறு கேலி செய்யும்போது அவளுக்குத்தான் எத்தனை ஆனந்தம்?

''வெண்டைக்காய், பாகற்காய் அவருக்குப் பிடிக் காதவை. கத்தரிக்காய் காரக் குழம்பு—குருமா—தோசை அவியல் ஒரு போடு போடுவார். ராத்திரி வேளையில் பாலோடு கொஞ்சம் ஓவல் சேர்த்துத்தான் சாப்பிடுவார். வெறும் பால் பிடிக்காது. சட்டை பித்தான் உடைந்திருந்தால் ரொம்பக் கோபம் வருமாம். சலவைத் தொழிலாளிகிட்ட கூப்பாடு போடு வாராம். நிலவு நாளில் கடற்கரையில் தோழர்களோடு அமர்ந்து நெடுநேரம் அரட்டை அடிக்கப் பிடிக்குமாம். சூடான நீரில் குளிப்பதை விரும்புவார். அவரது சோப்புப் பெட்டியை வேறு எவரும் தொடக் கூடாதாம்.''

ஜெயந்தி கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தாள்.

''கணவனை ஒரே நாளில் ஒரு பெண் புரிஞ்சிக்கிட முடி யுமா? நீயே போகப் போக எல்லாம் விளங்கிப்பே. கணவன் ஒரு பெரிய அகராதி போல. அதை அப்போதைக்கு அப் போதுதான், கொஞ்சம் கொஞ்சமா புரிஞ்சிக்க முயற்சிக் கணும்!'' குறும்புடன் அனுபவங்களையும் உதிர்த்தாள் கமலா.

கத்தரிக்காய் காரக் குழம்பு, அவரைத் துவட்டல், கீரை போட்ட பருப்பு. சமையலும் முடிந்து விட்டது. ஜெயந்தி முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

பிற்பகலாகி பொழுது மாலையை நெருங்கும் நேரம். தொலைபேசி கிணுகிணுத்தது. வேகமாக ஓடிச் சென்று அதை எடுத்தாள்.

''நான்தான் கதிரேசன்'' மறுமுனையில் இருந்து அவனது குரல். அவள் மெய்மறந்து போனாள்.



''ஏதாவது சாப்பிடு, பட்டினியா இருக்காதே. வேலை முடிஞ்சதும் பறந்து வந்திடறேன். தனியாக இருக்க பயமா இல்லையே?'' கனிவுடன் கேட்டான் அவன்.

பம்பாயில் ஏன் என்று கேட்காத அதே கதிரேசன் இப்போது...இத்தனை ஆதங்கத்துடன்—இது எப்படி ஒரு வேளை நடிப்போ? ''ஆண்டவா! இந்த முறையும் என்னை ஏமாற்றி விடாதே!'' மனதிற்குள் வேண்டினாள். ''என்ன பதிலையே காணோம்!''

''வீட்டு வேலைகளைக் கவனிச்சிட்டிருக்கேன். பய மில்லை'' பொதுவாகச் சொன்னாள் ஜெயந்தி.

''வரும்போது கடையில் இருந்து ஏதாச்சும் வாங்கிட்டு வரவா?'' ஆவலாகக் கேட்டான்.

''ஒண்ணும் தேவையில்லை. எல்லாம் இங்கே இருக்கு.''

''நான் மட்டும் வந்தால் போதும் என்கிறாயா?'' செல்ல மாகக் கேட்டபோது, அவனை நேராகவே பார்த்து விட்டது போல் வெட்கப்பட்டாள் அவள். ''வைச்சுடட்டுமா?'' கை பதற போனை வைத்து விட்டாள்.

## 14

அவனது அலுவலகத்திற்குப் போக நெடுஞ்சாலைக்குள் புகுமுன் அந்த முடக்கிலே ஒரு பெரிய அரச மரமும், பக்கத் திலே ஓர் அம்மன் கோவிலும் இருந்தன.

தினமும் காலையிலும் மாலையிலும் அவ்வழியே போகும்போது கவனிக்கத்தான் செய்தான். அருள்மிகு பர மேசுவர அம்மன் அந்தச் சின்னஞ்சிறு கோவிலுக்குள் எழுந் தருளியபடி அன்பர்களுக்குத் தன் அருளை வாரி வழங்கிக் கொண்டு இருந்தாள். வெள்ளி செவ்வாயில் கூட்டம் நெடுஞ் சாலை வரை நீண்டு விடுவது உண்டு.

அமிர்தம்மாளுக்குக் கோவில், பூஜை, பஜனை, தேர்த் திருவிழா இவற்றில் ஈடுபாடு அதிகம். சிறு வயதில் விதவையாகிவிட்ட அவள் தன் பிள்ளையின் கையைப் பற்றிக் கொண்டு காசியில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ள எல்லாப் புண்ணிய ஆறுகளிலும் மூழ்கி, கோவில் வலம் வந்து தனக்கும் தன் சிறுவனுக்கும் ஆன்மீக அருளை வேண்டிய மட்டும் தேடிக் கொண்டு விட்டாள்.

அடிமட்ட நாளில் சாதாரணமாக வாழ்ந்த காலத்தில் தாயின் அடிச்சுவட்டிலே சென்ற மகனுக்கு கடவுள் நம் பிக்கை அதிகம் இருந்தது. கோவிலைக் கண்ட இடத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டுக் கையெடுத்துக் கும்பிட்டு-திரு நீரை வாங்கி நெற்றியில் அப்பிக் கொண்டு போகும் இயல் புடையவன். படிப்பும், பட்டமும், பதவியும், கையில் கணிசமான பணமும் ஏற தொடங்கிய போது, அவனுக்கு கடவுள் நினைப்பு மெல்ல மங்கத் தொடங்கியது.

மதுரையில் வாழ்ந்தும் மீனாட்சியைத் தரிசிக்க நேர மில்லை. பம்பாயில் வாழ்ந்தும் மகாலட்சுமி கோவிலை அவன் பாத்தது இல்லை. வேலை-சாப்பாடு-ஊர் சுற்றுதல்-தூக்கம் என்ற அவசர கதியிலே ஓட்டமாக ஓடியது வாழ்க்கை. கோவில்-பூஜை-இவையெல்லாம் பெண்களின் பொழுது போக்கு என்ற வரை அவன் ஒதுங்கிப்போகும் அளவு மனம் மாறி விட்டான். வரிசையாகக் கோவில் தரிசனத்திற்கு நிற்கும் மக்களைக் கண்டால் வெட்டிப் பொழுது போக்கும் வீணர்கள் என்ற நினைப்புகூட அவனுக்கு!

அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த கணக்கர் கந்த சாமி வயதானவர். ஒரு நாள் பஸ் நிலையத்தில் காத்திருப் பதைப் பார்த்தான். சில சமயங்களில் அவனுக்கு அவனை யும் அறியாது இரக்க உணர்வு வந்து விடுவது வழக்கம்.

''இந்தப் பக்கம் எங்கே போறாப்ல?'' விசாரித்தபடி காரைக் கொண்டு வந்து அருகே நிறுத்தினான்.



''வெள்ளிக்கிழமை பரமேசுவரி கோவிலுக்குப் போயிட்டு, பிறகுதான் வீட்டுக்குப் போற வழக்கம். அதனால் பஸ்சுக்குக் காத்திருக்கேன். ஆபீஸ் விடும் வேளை-பஸ்சில் ஒரே கூட்டம்.''

''ஏறிக்கோங்க. வழிதானே, விட்டுட்டுப் போறேன்'' முன் கதவைத் திறந்து உபசரித்தான்.

கணக்கருக்கு வாயெல்லாம் பல்லாக மகிழ்ச்சி பிடி படவில்லை. ''அருள்மிகு பரமேசுவரிக்கு ரொம்ப சக்தி. வெள்ளிக்கிழமையன்று அவள் சந்நிதியை மிதிச்சு, மனசு உருக பிரார்த்தித்துக் கொண்டா, கேட்ட வரம் கொடுப்பாள் — அத்தனை கருணை'' பக்திப் பரவசமாக வருணித்தார் கந்தசாமி.

''அந்த முடக்கிலே இருக்கிற கோவிலையா சொல்றீங்க? ரிக்ஷா தொழிலாளிகள் சேர்ந்து கட்டிய அந்தக் கோவில் தானே?'' ஏளனமாகப் புன்னகைத்தான் கதிரேசன்.

''ரிக்ஷா தொழிலாளி ராமு கட்டின கோவிலா இருந்தால் என்ன? மன்னன் ராசராசன் கட்டின கோவிலா இருந்தால் தான் என்ன? எல்லாத்துக்கும் பக்திதானே முக்கியம்?''

கந்தசாமி சட்டென்று சொன்ன பதில் சுருக்கென்று தான் பட்டது. அந்த நினைவு ஏனோ இன்று போகும் வழியில் அவனுக்கு ஏற்பட்டது. ரத்தினம் குடும்பத்தார் இறங் கியதும் வண்டியை மறுபடி திருப்பிக் கொண்டு அந்த முடக் கிற்கு வந்தான்.

அன்று வெள்ளிக்கிழமை. காலை ஒன்பது மணிக்குள் ளேயே கோவிலில் கூட்டம் நிறைந்து வழிந்து கொண்டிருந் தது.

பரமேசுவரியை வணங்க வந்தவர்களில் முக்கால்வாசிப் பேர்கள் மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்த போது அவனுக்குள்ளேயே ஓர் உறுத்தல்.

பூப்பாவாடை அலங்காரத்தில் அம்மன் அழகும் அருள் நிறைந்தவளாக நின்றாள்.

திடீரென்று அம்மாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்குள் நுழைந்த அந்த நினைப்பு—

உடம்பு புல்லரித்துப் போனது.

அம்மாவுக்குப் பின் கோவில், பூஜை எல்லாவற்றிற் கும் தலை முழுகி விட்டு, தான்தோன்றியாக இருந்தவ னுக்கு இப்போது ஏன் இந்தப் பரவசம்?

ஜெயந்தியுடன் ஒழுங்காக இனியாவது குடும்பம் நடத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதுமே தொடர் சங்கிலி போல், குடும்ப வாழ்வைச் சுற்றி இணைத்து நிற்கும் பழக் கங்கள், பண்பாடு எல்லாம் தானே மனதிற்குள் வடிவம் எடுக்கின்றனவோ? வியப்புடன் அவன் தேவியின் திரு உருவத்தை மீண்டும் ஒரு முறை நோக்கி வணங்கினான்.

கந்தசாமி சொன்னது காதுகளில் ஒலித்தது.

''வெள்ளக்கிழமை அம்மன் சந்நிதியில் நின்று மனம் உருகிப் பிரார்த்தித்தால்...''

ஜெயந்தியும் அவனும் இணைந்து, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இனியாகிலும் நன்றாக வாழ அம்மன் அருள வேண்டும்.

அவனையும் மீறி, உள்ளம் உருகப் பிரார்த்தித்துக் கொண்டான்.

அலுவலகத்துக் கூட்டம் பகல் ஒரு மணி அளவில் தான் முடிந்தது.

டைரக்டர்கள் வருகையைக் குறித்து தனியாக ஒரு விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. கூட்டம் நடந்த அறையி லேயே விமரிசையாக விருந்து பரிமாறத் தொடங்கினர்.



ஜெயந்தி வெறும் ஓவலை மட்டும் குடித்து விட்டு அரை வயிறு கூட நிரம்பாது பசியுடன் காத்திருப்பாள் என்ற நினைவு ஏற்பட்டதும் அவனால் அந்த விருந்தில் கலந்து கொள்ள முடியவில்லை. தன்னை மன்னிக்கும்படி சொல்லி விட்டு அவன் கிளம்பி விட்டான்.

ஒவ்வொரு கணமும் இனி வாழ்க்கையில் நேரம் மிகவும் முக்கியமானது என்ற துடிப்பு.

அலுவலகத்துக்கு அருகே புதிதாகக் கட்டப்பட்ட வியாபார சதுக்கத்திலே பல கடைகளைப் பார்த்த ஞாபகம் அவனுக்கு. அருகிலிருந்த ஓட்டலில் ஒரு கோப்பை காப்பி வாங்கி அவசரமாக விழுங்கி விட்டு அந்த வியாபாரச் சதுக் கத்திற்குள் புகுந்தான்.

முதலில் அந்த நகைக் கடைக்குள் நுழைந்தான். கழுத்துச் சங்கிலியை அவள் அப்பாவின் ஆஸ்பத்திரிச் செலவுக்காக விற்று விட்டாளே. அன்று காலை வீட்டின் உள்ளே வந்த போது அவன் கவனித்தான். கழுத்திலே கருகமணி மாலை யும்—தாலிச் சரடும் மட்டும்தான் அவள் அணிந்திருந்தாள். ஆயிரக்கணக்கில் அவன் சம்பாதிக்கும் போது அவள் கழுத்தில் கருகமணி மாலையா?

ஏழு பவுன் எடையில் ஒரு தங்கச் சங்கிலியைத் தேர்ந்து எடுத்தான். ஒரு செக் எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்தான்.

''ஒன்றும் தேவையில்லை'' என்றுதான் ஜெயந்தி தொலைபேசியில் சொன்னாள். ஆனால், அதற்காக சும்மா இருந்து விடுவது முறையா?

ஆறு ஆண்டு காலத்தில் தீபாவளி, பொங்கல், பிறந்த நாள், மண நாள் என்று விழா நாள் எத்தனையோ வந்து போயின. அந்த மங்கல நாட்களின் போது அவள் தன் கணவ

னின் அசட்டையை எண்ணி எப்படி வருந்தியிருப்பாள்? அதற்கெல்லாம் இப்போது ஒரு சிறு அளவிலாவது ஈடு செய்ய வேண்டாமா?

எண்ணியபடியே சேலைக் கடைக்குள் சென்றான்.

கடைக்காரன் விரித்துப் போட்ட சேலைகள் அனைத்தையுமே ஜெயந்திக்கு வாங்கித் தர வேண்டும் போன்ற ஆசைதான். முடிவிலே அந்த மாதுளம்பூ வண்ணப் பட்டுச் சேலையை விலை பேசி எடுத்தான். அத்துடன் அன்றாடம் உடுத்த இரண்டு கைத்தறி நூல் சேலைகளையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டான்.

அன்று காலை அவர்கள் வரப் போகிறார்கள் என்று எதிர்பார்த்து கொஞ்சம் மிட்டாய் வகைகளை வாங்கி வைத்திருந்தான். தட்டுகளில் அவற்றை நிறைத்து மேசையின் மீது வைத்து விட்டு காப்பியைத் தானே கலந்து தம்ளர்களில் ஊற்றிக் கொண்டு வந்து உபசரித்தான்.

ஜெயந்திக்கு உட்கார்ந்து அவர்களுடன் சாப்பிட வெட்கமாக இருந்தது. சற்றுத் தள்ளி சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்தாள். "இன்னிக்கு மருமகப் பிள்ளை நமக்கெல்லாம் பரிமாறி உபசரிக்கட்டும். நாளையிலிருந்து நீ அவரைக் கவனிக்கலாம். வெட்கப்படாதே, வந்து உட்கார்ந்து சாப்பிடு. உனக்குத்தான் இனிப்பு என்றால் உசிராச்சே" கேலியாக ரத்தினம் சொன்னதை மனசிற்குள் பதிய வைத்திருந்தான் கதிரேசன்.

நேரே வண்டியை டவுனுக்குத் திருப்பினான்.

மோகன்லால்—மதன்லால் கடை, பாதாம் அல்வாவுக்குப் பெயர் போனது. அவனுக்குத் தெரியும். அவர்கள் அலுவலகத்துத் தேநீர் விருந்துகளுக்கு அந்தக் கடையில் இருந்துதான் மிட்டாய்கள் வரவழைக்கப்படும்.



சுத்தமான நெய்யில் உண்மையான பாதுமை பருப்பை அரைத்துச் செய்த அல்வா, ஜிலேபி—முதலியவற்றை அட்டைப் பெட்டிகளில் நிறைத்து கைகளில் தூக்கிக் கொண்டான்.

கடிகாரக் கூண்டு, பழக் கடையிலே ஒரு கூடை நிறைய ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களை வாங்கி நிறைத்து டிக்கியில் வைத்து அடைத்தான்.

எல்லாம் முடிந்தாயிற்று. இனி வீட்டுக்குத் திரும்பும் போது அவளுக்குப் பிடித்தமான சாதி மல்லிகைப் பூ கொஞ்சம் மறக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்—சிந்தித்தபடி அலுவலகத்துக்குத் திரும்பினான்.

அவனுக்கு மேற்கொண்டு வேலையே ஓடவில்லை. நினைப்பு முழுவதும் வீட்டிலேயேதான் இருந்தது. அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு போக முடியாத சங்கடம். வெளியூரில் இருந்து வந்த டைரக்டர்கள் அலுவலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். பொறுமையுடன் காத்திருந்தான்.

ஐந்து மணிக்குச் சில நிமிடம் இருந்தது. பரபரப்புடன் கோப்புகளை மூடி, இழுப்பறைக்குள் ஒழுங்காக அடுக்கி விட்டு, தன் பெட்டியை சரி செய்து கொண்டு கிளம்பத் தயார் ஆனான்.

அது சமயம் தொலைபேசி மணி கிணுகிணுத்தது.

## 15

சிவ பூசையில் கரடியா?

அவசரமாக, ஆவலாகக் கிளம்பிக் கொண்டு இருக்கும் பொழுது, இந்தத் தொலைபேசி ஏன் இப்படி அலறுகிறது?

எழுந்த கதிரேசன், ஆத்திரத்துடன் இருக்கையில் அமர்ந்தான்.

தொலைபேசியின் குரல் வாங்கியை ''வெடுக்'' என்று கையில் எடுத்தான்.

அதே வேகத்தில் மறு முனையில் இருந்து குரல் கேட்டது.

''அலோ! திரு. கதிரேசன் அவர்களிடம் பேச வேண்டும். அவர் இருக்கிறாரா?''

பெண்ணின் குரல் தொண்டை கம்மி விட்டது போன்று மெல்லியதாகக் கேட்டது.

''யாராக இருக்கும்?'' அவனுக்கு வியப்பு.

''நான்தான் கதிரேசன் பேசுகிறேன். கம்பெனி விஷய மாக இருந்தால் தயவு செய்து நாளைக் காலை பத்து மணி அளவில் கூப்பிடுங்கள். இப்போ அலுவலகம் மூடும் நேரம்'' என்று அவன் பக்குவமாகச் சொன்னான்.

''நீங்கள் கதிரேசன்தான் பேசுவதா? நான் பேசுகிறது யார்னு தெரியலையா! அவ்வளவு விரைவாக என்னை மறந் துட்டீங்க?''

திக் என்றது அவனுக்கு.

வெளியே கிளம்பிக் கொண்டு இருக்கும் இந்த சமயம் யார் இது கண்ணாமூச்சி விளையாடுகிறது? பற்களைக் கடித்துக் கொண்டான்.

''தயவு செய்து நீங்கள் யார்? என்ன வேணும்னு சுருக்க மாகச் சொல்ல முடியுமா?'' எரிச்சலை அடக்கிக் கொண்டு கேட்டான்.

''பிரதிமா பேசுகிறேன்! என் குரலைக் கூடவா மறந்துட் டீங்க!'' மறு பக்கத்திலே அவள் கொஞ்சிக் குழைந்தாள்.

அவனுக்கோ முதுகுத் தண்டு சில்லிட்டுப் போன பயங்கர உணர்வு! பிரதிமா?

அவள் இப்போது, இந்த சமயம் எதற்காக அவனை அழைக்கிறாள்.



கனடா நாட்டில் கணவனுடன் வாழ்ந்து கொண்டு இருந்தவள் இங்கே எப்போது, ஏன் வந்தாள்!

வினாடியில் அவன் மனதில் பல கேள்விகள்.

''கனடாவில் இருந்து எப்பொழுது வந்தாய்? சவுக் கியமா?'' பட்டும் படாமல் நிதானமாக விசாரித்தான்.

''கதிரேசன்! உங்களை நான் உடனே அவசரமாகப் பார்க்க வேணும். மிகவும் முக்கியம். அதுக்காகவே பம்பா யிலிருந்து காலை விமானத்தில் வந்தேன். ஓட்டல் ரவீந்திரா வில் தங்கியிருக்கேன். அறை எண் எண்பது. நீங்கள் உடனே இங்கே வருகிறீர்களா?'' அவள் பரபரத்தாள்.

''நானும் அவசரமாக வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டு தான் இருக்கிறேன்; அதனால்...'' அவன் முடிக்கவில்லை.

''அப்படியானால் நானே உங்கள் அலுவலகத்துக்கு ஒரு டாக்சியில் இப்பொழுதே வந்து விடுகிறேன். நீங்கள் எனக்காகக் கொஞ்சம் காத்திருப்பீர்களா? ப்ளீஸ்!'' அவள் கெஞ்சுகிறாளா? கொஞ்சுகிறாளா?

திடுக்கிட்டுப் போனான் அவன்.

அந்த அலுவலகத்திலே வேலை பார்த்த யாரும் அவனது நடத்தையிலே களங்கம் காணாதபடி அவன் மிவுகம் நேர்மை யாக வாழ்ந்தான். இப்போது அவனைத் தேடிக் கொண்டு அந்தி வேளையில் அவள் அலுவலகத்திற்கே வந்தால்?...

சே! சே! அதுவும் பாழாகி விட்டுப் போன அவனது வாழ்க்கையைப் பசுமையாக்கிக் கொள்ள அவன் பாடு பட்டுக் கொண்டு இருக்கும் அந்தச் சமயத்திலா அவள் மீண் டும் வருவது?

இது என்ன தொல்லை?

''என்ன பதிலையே காணோமே! நான் வரட்டுமா?''

பிரதிமா வற்புறுத்தலாகக் கேட்டபோது அவன் விழித்துக் கொண்டான்.

ஒரு சமயம் அது அவனது மனதில் தோன்றியுள்ள மாற்றமான உணர்வுகளுக்கு ஒரு சவாலா? அவன் ஏன் பயப்பட வேண்டும்?

என்றோ அவளை மறந்து, மனதில் இருந்து எறிந்து விட்டபின் அவளைச் சந்திக்க ஏன் அஞ்ச வேண்டும்.

அவனது மனத்திலிருப்பதை அலசி உண்மையை அவனே புரிந்து கொள்ளத் தானாக வந்துள்ள சந்தர்ப்பம் இது என்று ஏன் நினைத்து எதிர் கொள்ளக் கூடாது?

''ரொம்ப யோசிக்கிறீங்களே முன்பெல்லாம் என் குரலைக் கேட்டதும் ஓடி வந்து விடுவீங்களே...'' கிளுகிளுவென்று அவள் சிரித்தாள்.

தென்றலாக ஒரு காலத்தில் குளிர்ச்சியாக இருந்த அந்தச் சிரிப்பு-இன்று அவனுக்கு நெருப்பாக வேதனை அளித்தது.

''நீ வரத் தேவையில்லை. நானே வருகிறேன்.''

டக்கென்று போனை வைத்தான் கதிரேசன்.

நகரத்தின் மற்றொரு கோடியில் ஒதுக்குப்புறமான பகுதியில் ஓட்டல் ரவீந்திரா இருந்தது.

சாயம் இழந்து இடிபாடுகளுடன் காணப்பட்ட ஒரு பழைய காலத்துப் பங்களா, இப்பொழுது ஓட்டலாக மாற்றப் பட்டிருந்தது. அதைச் சுற்றி கவனிக்கப்படாத தோட்டம்.

அவன் வரவிற்காக பிரதிமா வாயிலிலேயே காத்துக் கொண்டிருந்தாள்.

காரை ஒரு மரத்தடியில் நிறுத்தி விட்டு, அவன் இறங்கினான்.

அதற்குள் அவளே ''ஹாய்...'' என்று உற்சாகக் குரல்



கொடுத்துக் கொண்டே, அருகில் ஓட்டமும் நடையுமாக வந்து விட்டாள்.

பொழுது அமரும் வேளை. லேசாக வீசிய மஞ்சள் வெயிலில் எதிரே வந்துநின்ற பிரதிமாவைப் பார்த்தபோது அவன் அயர்ந்து போனான்.

அவளை அவன் கடைசியாகப் பார்த்து ஆறு, ஏழு ஆண்டுகள் ஆகி விட்டன.

இந்த நீண்ட இடைவெளி அவளிடம் எந்த மாறுதலையும் ஏற்படுத்தவில்லை.

அன்று பார்த்தது போலவே இன்றும் புத்தம் புது மலராக இருந்தாள்.

அவள் திருமணம் செய்து கொண்டு, கணவனுடன் வெளிநாட்டிற்குப் போனாள். அவனுடன் இத்தனை காலம் குடும்பம் நடத்தியிருக்கிறாள். இருந்தும் அவளைப் பார்த்தால் திருமணம் ஆன பெண் என்று சொல்ல முடியாது. கை படாத கன்னிப் பெண் போலவே காட்சி அளித்தாள்.

செடியில் அன்று பூத்த மலராக அவள் தோன்றினாளே தவிர, பறித்துத் தலையில் சூடிய மலர் போல் இல்லை.

அவள் பூங்கொடி போல இருப்பாள். இப்பொழுதும் அப்படித்தான் இருந்தாள். அவளுடைய உடம்பு கொஞ்சம் கூடத் தடிக்கவில்லை.

அவளுடைய விழிகளுக்குக் காந்த சக்தி உண்டு. கயல் மீன்கள் போல் அவை துள்ளி விளையாடும். அந்தக் கண்கள் இன்னும் அப்படியே இருந்தன.

கன்னங்கள் ரோஜா மொட்டுப் போல இருக்கும். இன்னும் அந்த மொட்டு மலரவில்லை.

அவள் சிரித்தால், கன்னங்களில் குழி விழுந்து, தனி அழகைத் தரும். அந்த அழகும் அப்படியே இருந்தது.

அதரங்கள் தாமரை இதழ்களைப் போல் சிவந்திருக்கும். கனிந்த கோவைப் பழங்கள் அவை. அந்தப் பழங்களை இன்னும் கிளி கொத்தவில்லையா?

அவள் எப்பொழுதும் மெல்லிய ஆடைகளையே அணிவாள். அவை அவள் உடலோடு ஒட்டி, அழகுக்கு அழகு தரும். இப்பொழுதும் அப்படிப்பட்ட ஒரு சேலைதான் அணிந்திருந்தாள்.

அவள் நல்ல பொன்னிறம். பத்தரை மாற்றுப் பசும் பொன்கூட காலத்தில் நிறம் குறைந்து விடுவதுண்டு. அவள் மேனியின் நிறமோ இன்னும் 'தக தக' என்று மின்னிக் கொண்டு இருந்தது.

அன்று போலவே இன்றும் அவள் ஒரு கல்லூரி மாணவி போலவே காட்சியளித்தாள்.

அவனை மோகம் கொள்ளச் செய்த—அவனது உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பிய—அவள் மீது அவனை பித்துக் கொள்ள வைத்த பேரெழில் இப்பொழுதும் அப்படியே இருந்தது.

காலத்தாலும் ஒளி மங்காத கோகினூர் வைரம் போல அவள் காணப்பட்டாள்.

அஜந்தா ஓவியங்கூட அழிந்து சிதைந்து விட்டது. ஆனால், அவளிடம் எவ்வித மாறுதலும் இல்லை.

இன்னும் சொன்னால், முன்பைவிட அவள் இப்பொழுது மிக அழகாக இருந்தாள் என்று சொல்லலாம். காலதேவன் அவளைப் பட்டை தீட்டினானோ!

ஒரு வான வில்லைப் போல் தன் முன்னே தோன்றிய அவளைப் பார்த்து, கதிரேசன் திகைத்துப் போனான்.

''என்ன, அப்படி மரம் போல நின்று விட்டீர்கள்?'' கேலி செய்து அவள் சிரித்தாள்.



அந்தச் சிரிப்பு, அந்தக் காலச் சிரிப்பு போலவே, அருவியாக இருந்தது. சிரித்த பொழுது, அவளது அழகு பன்மடங்கு அதிகம் ஆயிற்று.

''உள்ளே போவோமா?'' உரிமையுள்ளவள் போல அவன் கையைப் பற்றினாள்.

உடனே அவன் அருவெறுப்புடன் உடல் சிலிர்த்தான்.

வேகமாக கையை விடுவித்துக் கொண்டு, ''நீ எப்பொழுது வந்தாய்? தனியாகவா வந்திருக்கிறாய். உன் கணவர் ...'' என்று கேட்டான்.

''அது ஒரு நீண்ட கதை'' அவள் பெருமூச்சு விட்டாள்.

''அப்படி அந்த இருக்கையில் போய் அமர்ந்து பேசலாமா?'' என்று அருகில் கிடந்த சிமெண்டு பலகையைச் சுட்டிக் காட்டினாள்.

அவன் ஒரு காலத்தில் அவளுடன் நாள் முழுவதும் கதைகள் பேசத் துடித்தான். இப்பொழுதோ அவளுக்கு அருகில் நிற்கவே தயங்கினான். எவ்வளவு விரைவாக ஓட முடியுமோ, அவ்வளவு விரைவாக ஓட முயற்சித்தான்.

''எனக்கு உட்காரக் கூட நேரமில்லை. நான் அவசரமாகச் செல்ல வேண்டும். ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே சொல்'' அவன் நிற்க நேரம் இல்லாதவன்போலப் பரபரத்தான்.

அவள் அவனை வெறித்துப் பார்த்தாள். ''நீங்கள் ரொம்ப மாறி விட்டீர்கள் கதிரேசன்.''

''ஆனால் நீ மாறவில்லை. உன்னிடம் காலம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை போலிருக்கிறது.''

''ஆனால், பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது.''

''என்ன சொல்லுகிறாய்?''

''நான் என் அம்மாவின் பேச்சைக் கேட்டு, திருமணம் செய்து கொண்டது பெரிய தப்பு. பயங்கரமான ஏமாற்றத்துக்கு ஆளானேன். சில வாரத்துக்கு முன்பு நான் பம்பாய்க்கே திரும்பி வந்துட்டேன். வந்ததும் உங்களைச் சந்திக்க முயற்சித்தேன். நீங்கள் சென்னைக்குப் போய் விட்டதாக உங்கள் அலுவலகத்தில் சொன்னார்கள். பம்பாயில் சில வேலைகளை முடித்துக் கொண்டு, இன்றைய விமானத்தில்தான் இங்கே வந்தேன்—உங்களைப் பார்க்க.''

அவள் நிறுத்தினாள்.

அவன் மறுமொழி எதுவும் சொல்லவில்லை.

அவளைப் பற்றி—அவளது வாழ்க்கையைப் பற்றி அக்கறை இல்லாதவன்போல வெறுமனே இருந்தான்.

''இப்பொழுது நான் சுதந்திரப் பறவை. அதிகாரபூர்வமாக விவாகரத்துகூடப் பெற்றுக் கொண்டு விட்டேன். மீண்டும் உங்கள் உள்ளத்தில் இந்தப் பறவைக்கும் இடம் தருவீர்களா? அதுதான் உங்களைத் தேடி ஓடி வந்தேன்.''

அடக்க மாட்டாது அவன் சிரித்து விட்டான்.

திடுக்கிட்டு அவள் நிமிர்ந்து பார்த்தாள். ''என்ன வேடிக்கையாக இருக்கிறதா? அப்படிப் பார்க்கிறீங்களே'' கோபமும் துயரமுமாகக் கேட்டாள்.

''விபரீதமாகத்தான் இருக்கிறது. அதை எண்ணிச் சிரித்தேன். நீ கனடாவுக்குப் போன பிறகு நானும் திருமணம் செய்து கொண்டு விட்டேன். அது உனக்குத் தெரியுமா?''

''கேள்விப்பட்டேன். ஆனால், மனைவியை நீங்கள் ஒதுக்கி வைத்து விட்டதாகவும் கேள்விப்பட்டேனே?''

''இப்போது அவள் என் வீட்டில்தான் இருக்கிறாள்'' சொல்லி விட்டு அவன் காரின் கதவைத் திறந்தான்.

''கதிரேசன் கிளம்பி விட்டீங்களா?'' அவள் அதிர்ந்து கேட்டாள்.



''என் மனைவி எனக்காகக் காத்திருப்பாள். அதனால் நான் தாமதிக்க முடியாது. பிரதிமா, சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன். நாம் இருவரும் வாழ்வில் திசை மாறிப் போய் விட்டவர்கள். இனி சந்திப்பதில் பயன் இல்லை. முறையும் அல்ல. நீ இப்போது தனிப் பறவையாக இருக்கலாம். ஆனால், எனக்கு ஒரு குடும்பம்—மனைவி—எதிர்காலம்—வாழ்வு எல்லாம் இருக்கின்றன. என் மனைவிக்குத் துரோகம் செய்ய என் மனம் ஒப்பாது'' அவன் நிதானமாக அழுத்தமாகக் கூறினான்.

''எனக்கு உதவி கூடவா செய்ய முடியாது கதிரேசன்'' அவள் குரல் உடைந்தது.

''நீ எதிர்பார்ப்பதும் தவறு. நீ படித்தவள். கெட்டிக்காரி. உன் சொந்த முயற்சியால் தன்மானத்தோடு பிழைக்க வழி செய்து கொள்வதுதான் முறை. வருகிறேன். வணக்கம்.''

சொல்லி விட்டுத் திரும்பிப் பார்க்காது வண்டியில் ஏறிக் கொண்டான்.

**வீ**ட்டை நோக்கி வண்டியை ஓட்டியவன் அந்த முடக்கத்தின் அருகில் வந்ததும் வண்டியை நிறுத்தி இறங்கினான்.

மாலை மறைந்து இருட்டும் நேரம். வானத்திலே நிலவின் ஒளி இருட்டை விரட்டிக் கொண்டிருந்தது.

விளக்கொளியில் பரமேசுவரி ஆபரணங்கள்-மலர் மாலை அலங்காரத்திலே அற்புதமாக இருந்தாள். அவளை வணங்கப் பெரிய கூட்டம் வழிந்து கொண்டிருந்தது.

இவ்வளவு நாள் இல்லாது பிரதிமா திடீரென்று எங்கிருந்தோ வந்து அவன் வாழ்க்கையில் அன்றைய தினம் பார்த்து குறுக்கிட முயற்சித்தது கட்டாயம் கடவுளின் சோதனையாகத்தான் இருக்க வேண்டும்!

ஜெயந்தியுடன் அவன் இணைந்து வாழ அவன் கொண்ட முடிவின் உண்மையை ஆராய தெய்வம்கூட அவனைச் சோதிக்கிறதா? சந்தேகமேயில்லை!

கையெடுத்து அம்மனைக் கும்பிட்டு விட்டு, காரில் ஏறிக் கொண்டான்.

இந்தச் சோதனையில் அவன் வெற்றி பெற்று விட்டான். இந்தப் பிரதிமாபோல ஆயிரம் பேர் வந்து குறுக்கிட்டாலும் ஜெயந்தி மேல் அவனுக்கு ஏற்பட்டுள்ள அன்பு இனி மாறவே மாறாது. உண்மை. ஆழமாக அப்படி ஒரு நம்பிக்கை அவனிடம் இருந்தது.

வேகமாக வண்டியை வீட்டை நோக்கி ஓட்டினான்.

## 16

ஜெயந்தி தனியே வீட்டில் இருந்தாள்.

கதவைத் தாளிட்டுக் கொள்ளச் சொல்லி விட்டு தாயம்மாள் போய் விட்டாள்.

இருட்டி வெகு நேரமாகி விட்டது. வீட்டில் இருந்த விளக்குகள் அனைத்தையும் ஏற்றி விட்டு முன்னறையில் உட்கார்ந்தாள் ஜெயந்தி.

அத்தனை பெரிய வீட்டில், தனிமை அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

விரைவாக வரப் போவதாக தொலைபேசியில் அழைத்து வலியவே சொன்ன கணவனைக் காணவில்லை.

அவளுக்குக் கவலையாக இருந்தது. கலவரமாகவும் இருந்தது. பம்பாயில் நடந்ததுபோல் மீண்டும் கதை திரும்பி விட்டால் என்ற திகில்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தையே அடிக்கொரு தடவை பார்த்த வண்ணம் அமைதியின்றி உட்கார்ந்திருந்தாள்.

திடீர் என்று அழைப்பு மணி ஒலிப்பதைக் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.



''கதவைத் திறக்குமுன், துவாரம் வழியாகப் பார்த்து விட்டுத்தான் திறக்க வேண்டும்'' என்று தாயம்மாள் எச்சரித்துவிட்டுப் போயிருந்தாள்.

கையில் பழக் கூடை—சாமான்களுடன் கதிரேசன் வராந்தாவில் நிற்பதைக் கண்டாள்.

அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

''நேரமாகி விட்டது. ரொம்பப் பசியாக இருக்கிறாயா?'' கேட்டபடி கதிரேசன் உள்ளே வந்தான்.

''கம்னு வாசனை? எங்கேயிருந்து வருது?'' அதிசயத்துடன் அவன் கேட்டான்.

''பூஜை அறையில் ஊதுவத்தி ஏத்தி வச்சேன்'' தரையைப் பார்த்தபடியே பேசிய அவள், அவன் கையில் இருந்த கூடையை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள். அதற்கு மேல் பேச அவளுக்கு அச்சமாக இருந்தது.

''அடா! விளக்குக் கூட ஏத்தி வச்சிருக்கியே? இப்பதான் இந்த வீட்டுக்கே ஒரு களை வந்திருக்கு'' சொல்லிக் கொண்டு அவன் கையில் கொண்டு வந்த பொட்டலங்களை மேசை மீது வைத்தான்.

ஜெயந்தி சமையல் அறை அருகே நின்று கொண்டு இருந்தாள்.

அப்பொழுது அவள் தனி அழகோடு காணப்பட்டாள்.

வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்து அலுத்துப் போனவள், களைப்புத் தீர குளித்து விட்டு, நீல வண்ண மல்மல் புடவையை உடுத்தியிருந்தாள். தலையை வாரிக் கொண்டையிட்டு நெற்றியில் பொட்டு இட்டுக் கொண்டிருந்தாள். அவ்வளவுதான். மிகவும் எளிமையான அலங்காரம். ஆனாலும் எத்தனை அழகாக இருந்தாள்?

மேஜை மீது இருந்த பொட்டலத்தைப் பிரித்து சாதி மல்லிச் சரத்தை கையில் எடுத்துக் கொண்டு, அவன் அவள் அருகே வந்தான்.

அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''தனியாக இருக்க ரொம்பப் பயமாக இருக்கா?'' கேட்டுக் கொண்டே அவன் நெருங்கி வந்தான். பூச்சரத்தைத் தன் கையாலேயே அவளது கொண்டையைச் சுற்றி முடித்து விட்டான்.

மகிழ்ச்சிப் பரவசத்திலே அவள் திக்கு முக்காடி விட்டாள். நெஞ்சம் நெகிழ, உடலெங்கும் உணர்ச்சி கொந்தளிக்க அப்படியே தோய்ந்து அவன் காலடியில் விழுந்தாள்.

அவன் அவளை அள்ளியெடுத்து மார்புடன் அரவணைத்துக் கொண்டான்.

சட்டைப் பையில் இருந்த தங்கச் சங்கிலியை எடுத்து அவள் கழுத்தில் அணிவித்தான்.

கெட்டி மேளம் அதிர, மந்திரம் ஓத, பெரியோர்கள் மலர் தூவ அவள் கழுத்திலே தாலியைக் கட்டிய அந்த இன்ப நாளின் நினைவில் அவள் மெய் சிலிர்த்துப்போனாள்.

கணகள் பனிக்க அவள் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''இன்னும் சில நிமிடத்தில் வந்து விடுவேன். அதுக் குள்ளே நீ ஒரு காரியம் செய். அந்த அட்டைப் பெட்டியிலே ஒரு பட்டுச் சேலை இருக்கு. என் பரிசு. அதை எடுத்து உடுத்திக் கொண்டு தயாராக இரு. உத்தரவிட்டபடி குளியலறைக்குள் அவன் புகுந்து கொண்டான்.

குளித்து விட்டு, வெளியே செல்ல ஆயத்தமாகப் பட்டுக் கரை வேட்டியும் ஜிப்பாவும் தரித்துக் கொண்டு அவன் திரும்பி வந்தான்.



''ஓட்டலுக்குப் போகலாமா? நான் தயார்?'' கேட்டபடி திரும்பிப் பார்த்தவன் வியப்புடன் விழித்தான்.

சாப்பாட்டு மேஜை மீது இலைளைப் பரப்பி சூடான உணவை அவள் பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

''அட! எனக்குப் பிடிச்ச காரக் குழம்பு? வாசனை மூக்கைத் தூக்குதே. நீ சமைச்சு வச்சுட்டுக் காத்திருப்பேன்னு நான் எதிர்பார்க்கவேயில்லை'' புன்னகைத்தான் அவன் மகிழ்ச்சியுடன்.

''எனக்குப் பிடிச்சதையெல்லாம் நீங்கள் வாங்கிட்டு வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை'' சிறிதளவு பற்கள் பளிச்சிட அவள் சிரித்தாள். துணிவுடன் அவன் முகத்தை நிமிர்ந்து மெல்லப் பார்த்தான்.

''அப்படி என்ன வாங்கிட்டு வந்திருக்கிறேன்?'' கொஞ்சலாக வினவியபடி அருகில் வந்தான்.

''பாதாம் அல்வாவும், ஜிலேபியும் ரொம்பப் பிடிக்கும்.''

''அப்புறம்?''

''மாதுளம்பூ வர்ணம் எனக்குப் பிடித்த நிறம். அதிலே ஓர் அழகான பட்டுச் சேலை எடுத்து வந்திருக்கிறீங்க.''

''பிறகு'' குறும்புத் தனமாக அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளினான் அவன்.

''நான் சமைச்சதை நீங்கள் இப்போ உட்கார்ந்து சாப்பிடப் போறீங்க. அது எனக்கு ரொம்பப் பிடிச்சது'' சாமர்த்தியமாக பதில் அளித்து விட்டு அவனுடைய கையை மெல்ல அப்பால் தள்ளி விட்டு சமையல் அறைக்குள் சென்றாள்.

அவள் உணவு வகைகளைக் கொண்டு வந்து பரிவோடு பரிமாற வளைகள் குலுங்கிய அந்தக் கரங்களையே பார்த்தபடி அவன் அமைதியாகச் சாப்பிட்டான்.

அம்மா இறந்ததற்குப் பிறகு, இதுதான் அவன் முதல் முதலாக திருப்தியாகச் சாப்பிட்ட அனுபவம்.

''இப்போ நான் உனக்கு ஒரு சிறு உத்தரவு போடப் போகிறேன். இனிமேல் நாம் இருவரும் சேர்ந்தாற்போல் தான் சாப்பிட வேண்டும். தெரிகிறதா?'' என்றான் சிரித்துக் கொண்டே.

''முதன்முதலாக இந்த வீட்டில் சமைத்ததை என் கையா லேயே உங்களுகுக்குப் போடணும்னு ஆசையாக இருந்தது...''

''எனக்கும் ஓர் ஆசை இருக்கிறது, சொல்லவா?''

முகம் சிவக்க, அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

''சீக்கிரம் சாப்பிட்டு விட்டு அந்தப் பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு வா. நாம் கொஞ்ச நேரம் வெளியே போய் விட்டு வரலாம். நிலா வீணாகப் பால் போலக் காய்கிறது பார்த்தாயா?''

விரைவாக வேலைகளை முடித்து விட்டு அந்த மாதுளம்பூ சேலையைக் கட்டிக் கொண்டு காரில்புதுமணப் பெண் போல் பொலிவுடன் கிளம்பினாள், ஜெயந்தி.

கதவைப் பூட்டிக் கொண்டு காரில் அவளுடன் கடற் கரையை நோக்கி விரைந்தான் கதிரேசன்.

வெளியே வெள்ளி நிலவு வீசிக் கொண்டு இருந்தது.

போக்குவரத்து குறைந்த கடற்கரை சாலை அமைதி யாக இருந்தது.

காற்று சுகமாகத் தவழ்ந்து கொண்டு இருந்தது.

வண்டியை ஓதுக்குப்புறமாக நிறுத்தி விட்டு அவளது பக்கம் திரும்பினான்.

''நிலவு வீசும் இரவும், கடற்கரையும் எனக்குப் பிடித்த மானவை.''



''எனக்குத் தெரியுமே.''

''என்ன தெரியும்?''

''உங்களுக்கு எவை பிடித்தமானவை-பிடிக்காதவை எவை என்று.''

''பிடிக்காதது எது, சொல்லு பார்க்கலாம்'' கொஞ்சிக் கொண்டே அவன் நெருங்கினான்.

''தொணதொணவென்று வேலை நடுவே யாராவது பேசினால் உங்களுக்குப் பிடிக்காது'' அவள் மெல்லச் சிரித்து விட்டாள்.

''பலே பலே! என்னைப் பத்தி ரொம்பத் தெரிஞ்சு வச்சுக்கிட்டிருக்கே.''

அவனும் கூடச் சிரித்தான். அவளுடன் கலந்து கொண்டு சிரிப்பதில்தான் எத்தனை நிறைவு?

''இன்னும் உங்களைத் தெரிஞ்சுக்க-நல்லா புரிஞ்சுக்க நான் முயற்சிப்பேன்'' மெல்ல அவள் சொன்னபோது அவன் நெஞ்சம் நெகிழ்ந்து போனான்.

அவனுடைய இடக்கை ஆதரவுடன் அவள் தோளைப் பற்றித் தன் அருகே அணைத்துக் கொண்டது.

''என்னைப் பற்றி ஒண்ணு முக்கியமா நீ தெரிஞ்சுக் கணும். நமக்குள்ளே இத்தனை காலமா இருந்த இந்தப் பயங் கரமான பிரிவுக்குக் காரணம் இருந்தது. அது தெரியுமா உனக்கு? ஏதேதோ நினைச்சு நீ வேதனைப்பட்டிருப்பே? இல்லையா?''

''நான் அதிகம் படிக்கலைங்கறது காரணமாக இருக்க லாம்னு நினைச்சது உண்டு. ஒரு சமயம் நான் அத்தனை அழகில்லையோன்னு கவலைப்பட்டு வருந்தினதும் உண்டு'' மெல்லக் கூறினாள்.

''சே! அதெல்லாம் இல்லை. உன் படிப்பும்...அழகும் பற்றிக்குறையே இல்லை. இனி நமக்குள் எந்த ரகசியமும் தேவையில்லை. வெளிப்படையாகவே சொல்லி விடுகி றேன்'' அவனுடைய கரம் அவளை இன்னும் நெருக்கமாக அணைத்துக் கொண்டது.

''நமது பிரிவுக்குக் காரணம் பிரதிமா என்கிற பெண். உன்னை மணந்து கொள்ளும்முன்பு அவளை நான் விரும்பி னேன். கடைசியில் அவள் என்னை உதறிவிட்டுப் போய் விட்டாள். ஆத்திரப்பட்டு அவளைப் பழி வாங்குவதாக எண்ணித்தான் நமது கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டேன். அப்போ எனக்கு இருந்த மனநிலையிலே உன்னோடு இணைந்து வாழ முடியலை. ஏமாற்றத்திலே குமுறி என்னை நான் அழிச்சிட்டு இருந்தேன். உன்னையும் பாடாகப் படுத்தி விட்டேன்...''

''இப்போ?' ஜெயந்தியின் குரல் மிகவும் சன்னமாகக் கேட்டது. சூடாக இரண்டு சொட்டுக் கண்ணீர் கை மேல் பட்டதும் திடுக்கிட்டுப் போய்விட்டான் கதிரேசன்.

''ஜெயந்தி அழுகிறாயா?'' பதைபதைத்துப்போய் அவளுடைய கன்னங்களை மெல்ல வருடினான்.

''இல்லை. ஒளிவு மறைவு இல்லாமல் என்னிடம் உண்மையைச் சொல்கிறீங்களேன்னு நினைச்சு மனம் நெகிழ்ந்து போனதில் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்'' தன் முகத்தை மிக உரிமையுடன் அவன் தோள் மீது வைத்துக் கொண்டாள்.

''இப்போ இந்த மனசிலே உன்னைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லைங்கிறதை நானே புரிஞ்சு கொண்டு விட்டேன். இன்னிக்கு நான் சீக்கிரமா வர முடியாது போனதும் ஒரு வழியில் நல்லதாப் போச்சு.''



ஜெயந்தி மவுனமாக இருந்தாள். அவள் உடல் லேசாக நடுங்குவதை உணர்ந்த கதிரேசன் இன்னும் நெருக்காக ஆதரவுடன் அவளைத் தன் அருகே இழுத்துக் கொண்டான்.

''பிரதிமாவைப் பல ஆண்டுக்குப் பின்னர் இன்று மாலை சந்தித்தேன். அவளே பம்பாயில் இருந்து இங்கே என்னைத் தேடி வந்தாள். ஆனால், இனி அவள் என்னைத் தேடிக் கொண்டு வரவே மாட்டாள். அந்த அளவு கடுமையாகவே பேசி அனுப்பி விட்டேன். நீ என் வாழ்க்கையிலே எத்தனை முக்கியமானவள் என்பது அப்பத்தான் புரிஞ்சுது'' அவன் மூச்சு வாங்கிக் கொண்டான்.

''ஜெயந்தி!'' அவன் குரல் இரக்கத்திலே கரைந்தது. ''நீ மிகவும் நல்ல பெண். நேர்மையானவள்-எனக்குத் தெரியும். அப்படி நான் என்னைப் பற்றி சொல்லிக் கொள்ள முடியாது. பிரதிமாவை இழந்து விட்ட துக்கத்தை மறக்க நான் எத் தனையோ தவறுகள் செய்ருக்கிறேன். இதெல்லாம் நமது வருங்காலத்தைப் பாதிக்கும்னு நீ நினைக்கிறியா? உன் மனசில் இருப்பதை நானும் தெரிஞ்சுக்க விரும்பறேன். சொல்லு ஜெயந்தி!''

''அந்தக் கடந்த காலத்தைப் பத்தி நான் கவலைப்பட வில்லை'' என்றாள் ஜெயந்தி. ''உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் கடைசியாகத் தேர்ந்து எடுத்த காதலி நான்-நான் ஒருத்திதான். உங்களோட மனைவிங்கிற உரிமையோட வாழப் போகிறேன் என்ற பெருமைதான் எனக்கு.''

''உண்மையாகவா?'' அவளை இரு கைகளாலும் தழுவிக் கொண்டான்.

''ஆமாம்'' தலையசைத்த அவள் அவன் நெஞ்சுக்குள்ளே தஞ்சமானாள்.

''அடடா! ஒண்ணு மறந்துட்டேனே?'' மெல்ல அணைப் பில் இருந்து அவள் விலகினாள்.

''என்ன?''

''இந்தச் சுபதினத்தைக் கொண்டாட உங்களுக்குப் பிடிச்ச சேமியா பாயசம் வச்சிருக்கேன். சாப்பிட்டபோது கொடுக்க மறந்துட்டேன்.''

''பரவாயில்லை. வீட்டுக்குப் போனதும் தம்ளரில் ஊத்தி நிறைச்சுக் கொடு. இந்தத் தடவை அது தவறி கீழே விழ விட மாட்டேன். பாயசத்தை மட்டுமல்ல-வருங்காலம் எனக்கு வாழ்வில் வழங்கப் போகும் இன்பம் எதையும் தவற விட மாட்டேன்'' என்று பரவசப்பட்டான் அவன்.

அவளுக்குப் பனியில் நனைவது போல் இருந்தது.

''ஜெயந்தி!...நீ எத்தனை அழகாக இருக்கிறே தெரியுமா?'' மெல்ல அணைத்துக் கொண்டான்.

''நீங்கள் கூடத்தான்'' செல்லமாக அவள் சிணுங்கி னாள். காற்று இதமாக அடித்தது.

நிலவு பாலாகக் காய்ந்தது

இருவரது உணர்வுகளும் இன்பமான எதிர்பார்ப்பிலே இணைந்து ஒன்றாயின.

நிறைந்தது